www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

பெப்.11-17,1996

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 140




சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## ஊதிவளர்க்கும் தீ

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

எங்கும் ஒரே சோக இருள்....!
யுத்தம்-
நம்மை என்ன செய்யப்போகிறது?

காலடியில் குண்டுகள்;
நெஞ்சுக்குள் மரணபயம்;
நெருப்புக்குள் விழும் பஞ்சாக
மனித உயிர்கள்!

கொழும்பு குண்டுவெடிப்புக்கள்
மனிதாபிமானத்தின் மார்பில் வேல்!
மூவின மக்களும்
பலியாகி இருக்கிறார்கள்!

யுத்தம் நடைபெறும் பகுதி என்று
நாட்டில் ஒரு பகுதியை மட்டும்
ஒதுக்கிவைத்துவிட்டு,
வேறு பகுதிகளில் அமைதி
ஆட்சிசெலுத்த முடியாது
என்பதற்கு ஒரு சோகசாட்சி-
கொழும்பு குண்டு வெடிப்பு!

பாதுகாப்பு ஏற்பாடுகளில்
குற்றம் சொல்வதில் அர்த்தமில்லை.
"பாதுகாப்பு என்னவாயிற்று?"
என்று கேட்பது சுலபம்.

குறைபாடு பாதுகாப்பிலல்ல;
பற்றி எரியும் பிரச்சனையை
ஊதி அணைத்துவிடலாமென்று
தப்புக்கணக்குப் போடுவதில்தான்
அடிப்படைத் தவறு ஆரம்பமாகிறது!

தென்னிலங்கை அரசியல்வாதிகள்
அடுத்த தேர்தலைப் பற்றி
சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்;
புலிகள்
அடுத்த தாக்குதல் பற்றி
சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அப்பாவி மக்கள் அவலங்களை
சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள்.

அரசுக்கு-குறிப்பாக ஜனாதிபதிக்கு
இதுவரை இரண்டு
நல்ல தருணங்கள் கிடைத்தன.

முதலாவது தருணம்-
தேர்தலில் கிடைத்த வெற்றி!
இரண்டாவது தருணம்-
யாழில் கிடைத்த வெற்றி!

இரண்டாவது தருணத்தை வைத்து
இனவாதிகளது வாயை அடைத்து
இனப்பிரச்சனைக்கு
தகுந்த தீர்வை துணிந்து
முன்வைத்திருக்கலாம்!

மாறாக;
இனப்பிரச்சனைத் தீர்வைவிட
இனவாதிகளைத் திருப்தி செய்வதில்தான்
அரச தரப்பு
அதிக அக்கறை காட்டிவருகிறது!

யாருக்கோ சொந்தமான
பொருளை எடுத்து
தமிழ் பேசும் மக்களுக்கு
தானம் செய்வது போல
அரசே ஏன் அச்சப்படவேண்டும்?

கிடைக்க வேண்டிதை
உரியவர்களிடம் கொடுப்பதற்கு
எவரிடம் அனுமதி கேட்கிறார்கள்?

புலிகளை வெற்றிகொள்வதில்
தீவிரமாக இருப்பதைவிட
பிரச்சனையைத் தீர்ப்பதில்
தீவிரம் காட்டினால்
நெருப்புத் தானாகத் தணியும்!

நெருப்பை அணைக்க
நெய் ஊற்றுவது போலத்தான்
வடக்கு-கிழக்கு பிரிப்பு பேச்சுக்கள்!

சிங்கள மக்கள்-
தமிழ் மக்களுக்கு எதிரானவர்களல்ல;
இனவாதிகள்தான்
தவறான பிரசாரங்களால்
அவர்களை மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

தகுந்த பிரசாரம் மூலம்
சிங்கள மக்களுக்கு
நிலமையைச் சொல்ல
அரசாங்கம் முன்வந்திருக்கலாம்!

பூரண தீர்வின்றி பிரச்சனை ஓயாது
என்பதை மக்களிடம் சொல்லாமல்
போரில் வெல்வது சுலபம்
பின்னர்தான் தீர்வு என்ற பேச்சுக்களை
அரசு கேட்டுக் கொண்டிருப்பது
நெருப்பை ஊதி வளர்ப்பதாகிவிடும்!

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களது
பெறுமதியான உயிர்களை
பொறுப்பான அணுகுமுறைகளால்
பத்திரப்படுத்தும் பொறுப்பு
அரசியல் தலைவர்களதும்
ஆட்சிப் பொறுப்பில் இருப்போரினதும்,
கரங்களில்தான் இருக்கிறது!

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை, என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்

## நிறைவான வாழ்வுக்கு வழி

இன்றைய காலகட்டத்தில், அதிகாரிகள் மட்டில், அரயசில்வாதிகள் விஷயத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற ஆதங்கம் பொதுவாக எழுந்துள்ளது. இதனைத் தீர்த்துக்கொள்வதற்கு நாம் விவிலியத்திலிருந்து உண்மைகளை தெரிந்து, அறிந்து கொள்ளலாம்.

"எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்த வேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள். எவனுக்குப் பயப்பட வேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள், எவனைக் கனம் பண்ண வேண்டியதோ அவனைக் கனம் பண்ணுங்கள்." (ரோமர்:13:07)

எனவே, சட்டமும் நியாயமும்; மனச் சாட்சியும், நீதியும் என்ன சொல்கின்றனவோ அதன்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதே உண்மை. நாட்டுச் சட்டங்களுள்ளன; நமக்கென்று ஒரு மனச்சாட்சியுள்ளது. உலோகாயதத்தையும், ஆன்மீகத்தையும் எடைபோட்டு விடைகாண்பது நமது கடமை. அது நமது கடன்- பகுத்தறிவு. இது கீழ்வரும் வசனத்தில் மிகத் தெளிவாகக் காணப்படுகிறது:

"இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்று நமது கர்த்தராகிய ஆண்டவர் சொன்னார்" (மத்தேயு 22:21) என்று சொல்லப்படுகிறது. பகுத்தறிவோடு இந்த வார்த்தைகளைக் கைக்கொண்டால் ஒரு பிரச்சனையும் எழப்போவதில்லை. ஆன்மீகக் கடமைகளைக் கடைப்பிடிக்கும் அதேவேளை உலகில் வளமாய், இன்பமாய் வாழலாம். பிரியமானவர்களே! நாம் முயற்சிப்போமாக.

ஏ.பி.வி.கோமஸ்,மாத்தளை.



## பாவங்களை மன்னிக்கும் பர்லான ரமழான்

இறை வணக்கங்களின் தலைவாசல் நோன்பாகும், நோன்பாகிறது, அல்லாஹ்வுக்கு மிகப் பிரியமான வணக்கம். அது அல்லாஹ்வை பூரணமாக நெருங்குவதற்கு வழிவகுக்கிறது.

ரமழான் மாதத்தில் பசித்திருந்தால் மட்டும் போதாது; இரவு நேரங்களில் விழித்திருந்து இறைவனை வணங்கி இரண்டு விஷயங்களை அவனிடம் கேட்கும்படி மனித குலத்தை மா நபி (ஸல்) அவர்கள் பணித்துள்ளார்கள். ஒன்று சொர்க்கத்தை வேண்டுதல், மற்றொன்று நரகத்தை விட்டும் பாதுகாப்பு தேடுதல்.

இம்மாதத்தில் எந்த மனிதர் அதிகமாக பாவமன்னிப்புத் தேடுகிறாரோ அல்லாஹ் அந்த மனிதரில் நின்றும் நெருக்கடியான விஷயங்களை அகற்றி துன்பங்களில் இருந்து விடுதலை அளிக்கிறான்.

மனிதர்கள் பாவம் செய்கிறவர்களாகவே இருக்கின்றனர். பாவம் செய்பவர்களில் சிறந்தவர் "தவ்பாச்" செய்பவர்தான். பாவமன்னிப்புக்கு பர்லான ரமழானே சிறந்தது.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப்போட்டி இல-137

### பரிசுக்குரிய கவிதை

#### வரம்

நாளெல்லாம் வதை செய்யும்
துன்பக் கொடு முகத்து போர் நரியே!
கோலம் செய், தும்பிக்கையாய் எனக்கு
நம்பிக்கை நீதா; நான் உனை அழிக்க!.

வ.ரஞ்சிதமலர், கொழும்பு-6.

## இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

### யார் வருவார்?

பூத்துவிட்ட
புது ஆண்டில்
பூட்டவிழ்க்க
யார் வருவார்?

ஏ.ஆர்.பாகிமா பானு,
சிறாஜ் நகர்.

### மீட்பது யார்?

போர்வாழ்வு மஞ்சமென்போர்
போட்டுவிட்ட கைவிலங்கு
மீதவுள்ள மனிதவாழ்வில்
மீட்டுவிட யார்வருவார்?

தெ.லோஜனா, கொழும்பு-14.

### யார்—?

எங்கே...! எங்கே..!!
உன் முகம் காட்டு....!
காணாமல்போன
என் அண்ணன்போல..!
எங்கே காட்டு...!

ஏ.றுமைஷா,
கிண்ணியா-03.

### சின்னயேசுவோ?

வதனத்தை மறைத்தனர்,
வதைகளின் காரணத்தால்.
சிலுவையும் தந்தனர்,
சின்ன யேசுவென்றெண்ணி.
கரங்களையும் பிணைத்தனர்,
இரக்கமில்லா யூதர்களாய்.
இதுதான் இன்று நம்,
தேசமாதாவின் கட்டளையோ?

ஆரையம்பதி-இதயம்.



இரண்டு கரங்களை இறைவன் படைத்தான்
மனிதன் வாழ்வை வளமாக்க-அந்த
இரண்டு கரங்களையும் (போர்) அசுரன்
பிணைத்தான் மனிதன் தன்னைப் பிணமாக்க.

தட்சணாமூர்த்தி பிரியதர்சன், கல்முனை-02

### எச்சரிக்கை!

மடிவதற்கு இம்மண்ணில்-தமிழ்
மனிதர்கள் அதிகம்!
அதனால் 'துரோகி' என இவனை
மரத்தில் கட்டிவைத்து
'மண்டையில் போட்டோம்'!
-சங்கிலிக்குழு!!

பெ.அழகர்சாமி, மட்டக்களப்பு.

### குற்றமென்ன?

"கரங்களிலே விலங்குடனே
கடுஞ் சுமையின் வேதனையில்
முகம் மறைத்து ஊர்ந்து செல்லும்
மனிதன் செய்த குற்றமென்ன?"

முஸ்தபா-இஸ்ஸத், ஏறாவூர்-01.

### வாடகை இல்லா வீடு

வடக்கிலும் கிழக்கிலும்
வாழும் எங்களுக்கு
புனை பெயர் சூட்டி
பூட்டி வைக்கும் இல்லம் இது.!!

சி.சுதாசினி, கறுவாக்கேணி.

### யார் இவர்?

போர் தொடுத்த மன்னனுமல்ல;
ஈழம் கேட்ட இளைஞனுமல்ல;
தேடுதல் வேட்டையில் தேடிப்பிடித்த
ஒரு சந்தேகக் கைதியாமோ....?

எம்.சி.ஸகரியா, கஹட்டகஸ்திகிலிய.

### வதைதானோ?

தேசமே சிறையானால்,
சிறை இங்கு
வதைதானோ?

நஸபியா பஹ்ர்தீன், கொத்தான்தீவு.

### என் தேசமே..

சுதந்திரத்தை
விலங்கில் பூட்டு!
உண்மையை
மூடி மறை!
இறைமையை
தலைகுனியச் செய்!
என் தேசமே..!
இப்படி உன்னை
என்னில் சொல்!

அ.குமணன், பாண்டியூர்.

### சந்தேக நபர்!

தீவிரவாதி யெனப் பிடிபட்டுத்
தீவிர அடி கொடுத்து விசாரித்து
அப்பாவி அவனென்று அறியவரத்
தொப்பிக்குள் மறைத்தனரோ தலை!

பொன் நவநீதன், பாண்டியூர்.

### அமர்வாய்!

தவறு செய்திடா தருணத்தில் கிடைத்த
விலங்கே கரம் விட்டு நகர்வாய்!
புவனத்தில் கொடுமைகள்
புரிகின்றகரங்களில்
புரட்சியாய் நீ சென்று அமர்வாய்!

பசறையூர், மல்லிகா பத்மநாதன்

## கவிதைப் போட்டி இல-140



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 17.02.1996.

—முகவரி—

கவிதைப் போட்டி இல: 140. தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)✉சாலை

**எனக்கொரு சந்தேகம்.....**

அன்புள்ள ஆசிரியருக்கு, தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியினர் பாம்புக்கு தலையையும், மீனுக்கு வாலையும் காட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. அப்படி மறுப்பது பால் வெண்மையில்லை என்று சொல்வது போன்றதுதான். ஆயினும் ஒரு குறை; ஏனைய தமிழ் கட்சிகள் மட்டும் பெரிதாக என்ன செய்துவிட்டன? இன்று தமிழ் கட்சிகள் ஐந்து ஒன்றுபட்டிருப்பது ஏன்? தமக்குள்ள பலவீனத்தாலா? அல்லது தமிழ் மக்களுக்கு பலம் கொடுக்கவா? எனக்கென்னவோ சந்தேகமாகத்தான் இருக்கிறது. மற்றபடி, நாரதரின் அரசியல் விமர்சன துல்லியம் பாராட்டப்பட வேண்டிய ஒன்றுதான்.

-எஸ்.அருமைநாயகம், கொழும்பு-5.

—□□—

**திணிப்பு கூடாது.**

ஒவ்வொரு நபருக்கும் ஒரு கொள்கை இருக்கும். அதனை செய்தியாளர்கள் தாம் வெளியிடும் செய்திகளில் திணிக்கக்கூடாது என்று அதிரடியார் சொன்ன கருத்து மிக்க நன்று. முரசின் பாணியே தனிதான்.

என்.வி.ஹனிபா, காத்தான்குடி.

—□□—

**ரசிகனைத் தாக்கு!**

டியர் கார்லோஸ்! ரசிகனுக்கு தாக்குதல் நடத்துங்கள்; உம்மைப்பற்றிய விடயத்தை அரைப்பக்கத்தில் மட்டும் தருவதால்!

சுபாவரன், கண்டி.

**தாயே தாயே!**



'தாய்' நாவலின் ஒவ்வோர் அத்தியாயமும் சவுக்கடி தான். பல நாடுகளில் 'தாய்' நாவலுக்கு கடும்தடை விதிக்கப்பட்ட காரணம் இப்போது தான் புரிகிறது.

செல்வி.கே.மாலினி,
கொழும்பு-9.

—□□—

பட்டுச் சேலைப் பரிசுப் போட்டி தந்து அசத்திப்புட்டீர்! ஆறுதல் பரிசுமட்டும் இல்லையோ? (பேராசைதான்)

திருமதி கலா சுப்பிரமணியம், உக்குவளை.

—□□—

வடக்கு-கிழக்கை பிரிக்க வேண்டும் என்று இனவாதிகள் ஒற்றைக்காலில் நிற்கும்போது, நமது அரசியல்வாதிகள் வாய்மூடி மௌனிகளாக இருப்பது ஏன்? நமது ஆதங்கத்தை முரசு வெளிப்படுத்திவிட்டது.

மா.கதிரேசன், களுவாஞ்சிக்குடி.

—□□—

தேன்கிண்ணத்தில் கவிதைகள் சூடாக இருக்கின்றன. ஆர்வத்தோடு எழுதும் புதியவர்கள் வியப்புத் தருகிறார்கள்.

என்.நவாஸ், கல்முனை.

—□□—

இராமாயணம் தரும் இராஜகுமாரனுக்கு நன்றி. சுவைபட, தூயதமிழில் நயம்பட நகர்த்திச் செல்கிறார்.

வே.அன்னலட்சுமி, வவுனியா.

மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படமுடிந்தவர்கள்:

- ★ செல்வன் எம்.சிவகுமார், காலி.
- ★ ஏ.எச்.ராஸீன் மொகமட், ஏத்தாலை.
- ★ எம்.ஐ.எம்.ஹமீஸ், இப்பாகமுவ.
- ★ இஸ்ஹாக், ஹிஜ்ராபுரம்.
- ★ தங்கர ராஸிக், கொழும்பு-12.
- ★ முகமது நியாஸ், கிண்ணியா-06.
- ★ இரா.நளினராஜ், மட்டக்களப்பு.
- ★ பரீட் எம். றிஸ்வான், மடவளையூர்.
- ★ சிதம்பரக்குருக்கள் ஸ்ரீரவி, இரத்தினபுரி.
- ★ மு.தெய்வீகரஞ்சனி, பதுளை.
- ★ சசிகலா நடேசபவானந்தம், திருக்கோணமலை.
- ★ எஸ்.அபிராமி, வாழைச்சேனை.
- ★ தமிழ்ச்செல்வி பெருமாள், பறகடுவ.
- ★ உதயகுமார் சதாசிவம், சிலாபம்.
- ★ எம்.பி.அபூபக்கர், கல்நாவ.
- ★ மொஹம்மட்டஷ்மீர், குறிஞ்சாக்கேணி-03
- ★ பவித்ரா, சிவா, சந்திரா (முகவரி காணப்படவில்லை...)
- ★ எஸ்.பி.சுப்பிரமணியம், அக்கரபத்தன.
- ★ எம்.ஸதாத், ஸலீம், நிக்கவெவ.
- ★ பஸ்மியா அனஸ், இர்பானா, களுத்துறை (தெற்கு)
- ★ றசீட் காசிம், புதிய காத்தான்குடி-03
- ★ என்.எம்.பஜீனா, ஹொரவபொத்தான.
- ★ என்.எம்.அஜார்தீன், நிக்கவெவ.
- ★ ஷஹிர்ஷா தாஸீம், தாக்கா நகர்.
- ★ ஏ.ஜி.எம்.ஜலால்தீன், சமீரகம, முந்தல்.
- ★ திருமதி ஜெ.ஜெகதீஸ்வரி, லிங்கநகர், திருமலை.
- ★ இசைநேசன் கரீம், பாலமுனை.
- ★ தி.அபயசேகரன், இந்தகல மேற்பிரிவு.
- ★ என்.கேதீஸ்வரன், கண்டி.
- ★ என்.டயஸ், பெரியநீலாவணை.
- ★ எஸ்.விஜயன், அக்கரைப்பற்று-07
- ★ செல்வி.சி.கௌஷிக்கா, கொழும்பு-06



படிப்பகம்

www.padippakam.com

# கொழும்பில் மேலும் குண்டுத் தாக்குதல்கள்!

# தலைநகரில் நடமாடும் வெடிகுண்டு வாகனங்கள்?

(நமது நிருபர்)

கொழும்பில் மத்திய வங்கி குண்டுத் தாக்குதலை அடுத்து மேலும் நான்கு குண்டுத் தாக்குதல்கள் நடத்த திட்டமிட்டிருந்ததாக தெரியவந்துள்ளது. கொழும்பு குண்டு வெடிப்பில் கைதுசெய்யப்பட்ட இருவர் மூலமாக மேற்படி தகவல் பெறப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

வெடிகுண்டுகள் பொருத்தப்பட்ட நிலையில் மேலும் நான்கு வாகனங்கள் தயார் செய்யப்பட்டிருந்தன. அந்த வாகனங்கள் தலைநகருக்குள் பிரவேசித்துள்ளனவா என்று கண்டறியும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் படையினர் நிலை கொண்டுள்ள நிலையில் புலிகள் இயக்கத்தின் முழுக்கவனமும் தலைநகரை நோக்கியே திரும்பியிருப்பதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்தை அடுத்து கிழக்கிலும் பாதுகாப்பு படையினர் பாரிய நடவடிக்கையில் ஈடுபடத் தயாரானார்கள். அதன்பின்னரே மத்திய வங்கி தாக்குதலுக்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஏனெனில் ஜனவரி 7ம் திகதிதான் குண்டுத்தாக்குதலில் ஈடுபடும் இருவர் கிளிநொச்சியில் இருந்து அனுப்பிவைக்கப் பட்டனர்.

வடக்கு-கிழக்கில் படைபலத்தை குவித்து பாரிய நடவடிக்கைகளில் படையினர் ஈடுபடும்போது அவர்களது கைகள் மேலோங்குகின்றன.

அதன்மூலமாக ஏற்படும் இராணுவ சமபல நிலையின் வீழ்ச்சியை கொழும்பு தாக்குதல்கள் மூலம் சரிக்கட்ட புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தம் குறித்து கவனம் செலுத்தாமல் இருக்கும் வெளிநாடுகளது கவனத்தை ஈர்க்கவும் தலைநகர தாக்குதல்களை மேற்கொள்ள புலிகள் முற்பட்டுள்ளனர்.

"யாழ்ப்பாணத்தில் படையினர் மீது பாரிய தாக்குதல் இப்போதைக்கு இல்லை. எமது கவனமெல்லாம் கொழும்பு மீதுதான்" என்று புலிகளது பிரமுகர்கள் சிலர் தமது நெருங்கிய வட்டாரங்களிடம் தெரிவித்துள்ளனர்.

வெடிகுண்டு பொருத்துவதில் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள் சிலர் கொழும்புக்கு வெளியே உள்ள புலிகளது இரகசிய தளத்தில் தங்கியுள்ளனர்.

வெடிகுண்டுகளை பொருத்துவதில் திறமைபெற்றவரான நியூட்டன் அந்த இரகசிய தளத்தில் தங்கியிருக்கக்கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

கொழும்பில் புலிகளது உறுப்பினர்கள் குறைந்தது நூறுபேர் உத்தரவுகளுக்காக தயார் நிலையில் இருப்பதாக கிளிநொச்சியில் இருந்து கிடைக்கும் தகவலொன்று தெரிவிக்கிறது.

# 'எல்லாளன் படை' விடுத்துள்ள எச்சரிக்கை!

## கொழும்பு குண்டுத்தாக்குதலுக்கு மறைமுக நியாயம் தெரிவிப்பு

'எல்லாளன் படை'யினரால் பத்திரிகைகளுக்கும், செய்தி நிறுவனங்களுக்கும் அறிக்கை ஒன்று அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கையில் அது வெளியிடப்பட்ட திகதி 19.1.96 என்று குறிக்கப்பட்டுள்ளது. எனினும் பத்திரிகைகளுக்கு 31.1.96 அன்று கிடைக்கக் கூடியதாக தபாலில் இடப்பட்டுள்ளது.

31.1.96 அன்றுதான் கொழும்பில் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

'மீண்டும் எச்சரிக்கை' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்யப்பட்ட அந்த அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

"சிறீலங்கா அரசாங்கம் சமாதானத்தைப் பற்றியும், புனர் நிர்மாணம் பற்றியும் அறிக்கைகள் விட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் தமிழர்களை இலக்காக வைத்து ஷெல் மற்றும் குண்டுத்தாக்குதல்களை நடத்திவருகிறது.

இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் சிறீலங்கா அரசாங்கத்திற்கு நிதிவசதியை ஏற்படுத்தும் வகையில் உல்லாசப் பயணிகளும், முதலீட்டாளர்களும் சிறீலங்காவுக்கு வரவேண்டாம் என்று எல்லாளன் படை எச்சரிக்கிறது.

தமிழ் மக்களின் கலாசார மையமான யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவதன் மூலமாக தமிழ் மக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கலாம் என்று சிறீலங்கா அரசு நினைக்கிறது.

மரபுப் போர் முறையில் பலம் வாய்ந்த




ஒரு இராணுவ அணி என்று தம்மைப் பற்றி தமிழர்களிடம் கூறிக்கொண்டு அவர்களை ஏமாற்றிவரும் புலிகளை கடுமையாகக் கண்டிக்கிறோம். புலிகளால்தான் தமிழர்கள் இன்று அகதிகளாகியுள்ளனர்.

கொழும்பில் குண்டுவெடிப்புக்கள் ஏற்படாது என்ற தோற்றத்தை ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் முயற்சிக்கிறது. உல்லாசப் பயணிகளும், முதலீட்டாளர்களும் அத்தகைய கூற்றுக்களை நம்பவேண்டாம்.

அவ்வாறு நம்பினால், எதிர்காலத்தில் குண்டு வெடிப்புக்களினால் ஏற்படப்போகும் பாதிப்புக்களுக்கு எல்லாளன் படை பொறுப்பல்ல.

முறியடிக்கப்பட்ட குழுவினரின் பிதற்றல் என்று எமது முன்னைய எச்சரிக்கைகளை சிறீலங்கா அரசாங்கம் குறிப்பிட்டு வந்துள்ளது.

ஆனால் அந்தக் கணிப்பு தவறானது என்பதை கொழும்பு நகரை செயலிழக்கச் செய்து ஏற்கனவே நிரூபித்துள்ளோம்.

தேவாலயங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் குண்டுவீச்சுக்களால் நூற்றுக்கணக்கானோர் பலியானதை இலங்கை அரசு நியாயப்படுத்துமானால், நாமும் எமது செயல்களை நியாயப்படுத்துகிறோம்.

தேவாலயங்களிலும், பாடசாலைகளிலும் இடம்பெற்ற தாக்குதல்களை கண்டிக்க முடியாதவர்களுக்கு, எமது செயல்களையும் கண்டிக்கும் உரிமை கிடையாது."

இவ்வாறு 'எல்லாளன் படை' தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கொழும்பு குண்டுத் தாக்குதலுக்கு நேரடியாக உரிமை கோராமல் அதனை மறைமுகமாக நியாயப்படுத்தும் வகையில் அறிக்கை அமைந்துள்ளது.

'எல்லாளன் படை' நேரடியாக பாரிய நடவடிக்கைக்கு உரிமை கோரினால், புலிகள் இயக்கத்தின் இமேஜ் குறைந்துவிடும். அதே நேரம் கொழும்பு குண்டுத்தாக்குதலில் பெருமளவு உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டால் வெளியுலகக் கண்டனங்கள் பெருமளவில் ஏற்படும். ஆகவே அதற்கான காரணத்தையும் சொல்லியாக வேண்டும். புலிகள் நேரடியாகச் சொன்னால் ஒப்புக்கொள்வதாகிவிடும்.

எனவேதான் பொதுவான எச்சரிக்கை போல 'எல்லாளன் படை'யின் பெயரில் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது. திகதி இடப்பட்டதிலும் தந்திரம் செய்யப்பட்டது.

ஆயினும் அறிக்கையில் உள்ள வாசகங்கள் பாரிய குண்டுவெடிப்பின் பின்னர் ஏற்படக்கூடிய நிகழ்வுகளை மனதில் வைத்தே எழுதப்பட்டுள்ளதை கூர்ந்து பார்த்தால் புலப்படும்.

## கைதான இருவருமே கரும்புலிகள்?

### உத்தரவை மீறியதால் மாட்டினார்களா?

கொழும்பு குண்டுத் தாக்குதலின் பின்னர் கைதுசெய்யப்பட்ட இருவரும் தலைமையின் உத்தரவை மீறியதாலேயே மாட்டிக்கொண்டதாக நம்பப்படுகிறது.

லொறி மத்திய வங்கிக்குள் உள்ளே நுழையும் வரை தாக்குதல் நடத்திக்கொண்டிருப்பதும், லொறி உள்ளே நுழைய ஏற்படும் தடைகளை அகற்றுவதுமே அவர்களுக்கு இடப்பட்ட கட்டளையாகும்.

லொறி வெடிக்கும்போது அவர்களும் பலியாக வேண்டி இருந்திருக்கும். தவிர தற்கொலைத் தாக்குதலுக்கான குண்டு பொருத்திய உடையும் உள்ளே அணிந்திருந்தனர். அருகிலுள்ள கடற்படையினர் குறுக்கே வந்தால் தற்கொலை நடத்த திட்டமிட்டிருக்கலாம்.

எனினும், லொறி அருகே வந்ததும் அவர்கள் இருவரும் தாக்குதலை நிறுத்திவிட்டு ஓட்டோ ஒன்றில் தப்பிச் சென்று விட்டனர்.

குண்டுலொறி வெடிக்கும்போது இருவரும் ஓட்டோவில் அந்தப் பகுதியை கடந்து சென்றுவிட்டனர்.

பின்னர் கொள்ளுப்பிட்டியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

குண்டுலொறியில் தாக்குதல் நடவடிக்கையில் மூவர் பங்கு கொண்டனரா- நால்வரா என்று சரியாகத் தெரியவில்லை. நால்வராக இருந்தால் மற்றொருவர் குண்டு வெடிப்பின் போது பலியாகியிருக்கக்கூடும்.

## கேலிக்குரிய பாதுகாப்பு

### இலண்டனில் புலிகள் தெரிவிப்பு

கொழும்பு குண்டுவெடிப்பையடுத்து இலண்டனில் உள்ள புலிகளது சர்வதேச தலைமையகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"கொழும்பின் இதயப் பகுதியில் பாரிய குண்டுத் தாக்குதல் ஒன்று நிகழ்ந்துள்ளது. இத் தாக்குதலால் சிறீலங்கா அரசுக்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. சிறீலங்கா அரசின் பாதுகாப்பு படையினரின் பாதுகாப்பு ஏற்பாடுகளை கேலிக்குரியதாக்கியிருக்கும் தாக்குதல் இதுவாகும்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வங்கிக்குள் புகுந்து வெடிப்பதே திட்டம்!

## கொழும்பு குண்டுவெடிப்பில் வெளியாகியுள்ள தகவல்கள்!

(அலுவலக நிருபர்)

கொழும்பு குண்டுத்தாக்குதலின் பின்னர் கைதுசெய்யப்பட்ட இருவரும் புலிகளது தற்கொலைப் படைப்பிரிவினர் என்று தெரியவருகிறது.

இவர்கள் இருவரும் ஜனவரிமாதம் 7ம் திகதியன்று தாண்டிக்குளம் வழியாக வவுனியா வந்து சேர்ந்தனர். இருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்.

இருவரில் ஒருவர் கொழும்பில் உள்ள தனியார் தங்கு விடுதியிலும், மற்றொருவர் வீடொன்றிலும் தங்கியிருந்தனர்.

குண்டுத்தாக்குதலுக்கான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்தவர் பெயர் சுரேஸ். அவர் எங்கு தங்கியிருந்தார்? தற்போது எங்கிருக்கிறார்? போன்ற விபரங்கள் இருவருக்கும் தெரியாது.

குண்டு பொருத்திய லொறியைச் செலுத்திச் சென்று பலியான கரும்புலியின் பெயர் ராஜு என்று தெரிகிறது. அவர் எங்கே தங்கியிருந்தார் என்பதும் கைது செய்யப்பட்ட இருவருக்கும் தெரியாது என்றே நம்பப்படுகிறது.

குண்டுத்தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட லொறி வவுனியாவில் இருந்து ஜனவரி 29ம் திகதி புறப்பட்டது.

புத்தளம், சிலாபம், அல்லது நீர்கொழும்புப் பகுதிகளில் ஒன்றில் வைத்தே லொறியில் வெடிகுண்டு பொருத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது.

கடல் மார்க்கமாக வெடிமருந்துகள் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிகிறது.

தலைநகரத் தாக்குதலுக்கான புலிகளது விநியோக தளம் கொழும்புக்கு வெளியே இருப்பதாகவும், தாக்குதல் நேரத்தில் மட்டுமே வெடிமருந்துகள் தலைநகருக்குள் வரும் என்றும் முரசு முன்னர் செய்தி வெளியிட்டமை தெரிந்ததே.

### தாக்குதல்

குண்டு பொருத்தப்பட்ட லொறி 30ம் திகதி மாலைதான் கொழும்புக்குள் நுழைந்திருக்கிறது.

31ம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் ஆகக்கூடியது நான்கு பேர் மட்டுமே நேரடியாக பங்குகொண்டிருக்கலாம் என்று கிடைத்துள்ள தகவல்கள் மூலம் தெரியவருகிறது.

ஓட்டோ ஒன்றில் வந்திறங்கிய இருவர் அல்லது மூவர் துப்பாக்கிப்பிரயோகத்தில் ஈடுபட்டனர்.

ரி.56 ரக துப்பாக்கி, டொம்பா அல்லது பசூக்கா என்றழைக்கப்படும் கிரைனைட் லோஞ்சர்கள் மூலம் கட்டிடப்பகுதிகளை நோக்கி தாக்குதலை ஆரம்பித்தனர்.

மத்திய வங்கி பாதுகாவலர்களை வாயிலிலிருந்து அப்புறப்படுத்திவிட்டு, குண்டு லொறியை வங்கிக் கட்டிடத்துக்குள் நுழைய வழி ஏற்படுத்துவதே திட்டமாக இருந்தது.

அதேநேரம் மத்திய வங்கி கட்டிடத்திற்கு அருகில் உள்ள கடற்படை முகாமில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதால், தாக்குதல் நடத்தியவர்களது கவனம் திசை மாறியது. கடற்படை முகாம் காவலரணை நோக்கி பதிலுக்கு திருப்பிச் சுட்டனர்.

அப்போது குண்டு லொறி மெல்ல மெல்ல வந்து சேர்ந்துவிட்டது. வங்கி வாயில் காவலர்களில் ஒருவர் ஓடிச்சென்று பிரதான கதவை மூடிவிட்டார். மற்றொரு காவலருக்கு சூடு விழுந்தது.

லொறி மத்திய வங்கிக்கு முன்னால் வந்ததும் தாக்குதல் நடத்தியவர்கள் தாக்குதலை நிறுத்திவிட்டு தப்பிச் சென்றனர்.

### தடுமாற்றம்

பிரதான கதவு மூடப்பட்டதால் லொறியைச் செலுத்தி வந்தவர் தடுமாறிவிட்டார். லொறியை பின்பக்கம் எடுத்த முழுவேகத்தில் சென்று மோத முற்பட்டார்.

அவ்வாறு தாமதம் செய்து கொண்டிருந்த நேரத்தில்தான் வங்கியில் இருந்த சிலர் தப்பிச்செல்ல வாய்ப்புக் கிடைத்தது.

பின்னால் சென்ற லொறி அதே வேகத்தில் முன்னால் சென்று வங்கி வாயில் கதவை நோக்கி சென்றபோது, குறுக்கே இருந்த இரும்புத் தடுப்பில் மோதிவிட்டது. மோதிய கணமே வெடித்தது.

திட்டமிட்டபடி லொறி உள்ளே புகுந்திருந்தால் வங்கிக் கட்டிடம் முழுவதும் தகர்ந்திருக்கும். நிலவறையும் அங்கு இருந்த பண நோட்டு கட்டுகள், தங்கம் போன்றவை நாசமாகியிருக்கும்.

வங்கியின் நிலவறைக் களஞ்சியம் எங்கே இருக்கிறது என்று முன்கூட்டியே தகவல் பெறப்பட்டே தாக்குதல் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

நிலவறையையும் தகர்க்கக் கூடிய முறையில் குண்டுலொறியை உள்ளே முழுதாக அல்லது பாதியளவு என்றாலும் நுழைத்து வெடிக்கவைப்பதே திட்டமாக இருந்தது.

வெளியில் வெடித்த குண்டு லொறி ஏற்படுத்தியுள்ள சேதமே பாரியளவில் இருக்கிறது. உள்ளே வெடித்திருந்தால் இன்னமும் இருமடங்கு சேதம் ஏற்பட்டிருக்கும்.

## படையினரின் பிரசுரம்

வடக்கு-கிழக்கு மக்களின் கவனத்திற்கு என்ற தலைப்பிட்டு பாதுகாப்பு படையினரால் பிரசுரம் ஒன்று விநியோகிக்கப்பட்டு வருகிறது.

சோதனைச் சாவடிகளில் வைத்து விநியோகிக்கப்படும் அப்பிரசுரத்தில், இன்றைய யுத்தத்திற்கு முடிவு காண்பதே அரசின் நோக்கமாகும். யுத்தத்தை முடித்து சமாதானத்தை ஏற்படுத்தவே ஜனாதிபதி விரும்புகிறார். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வானம் பொழிந்தது. வயிற்றில் அடித்தது

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலும் மற்றும் கிழக்கின் வேறுபகுதிகளிலும் கடந்தவாரம் பெய்த மழை காரணமாக அறுவடைக்குத் தயாராகவிருந்ததும் அறுவடை செய்யப்பட்டுக் கிடந்த நெல் வயல்களும் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளன. வயற் பகுதிகளில் வெள்ளநீர் தேங்கிக் காணப்படுகிறது.

சென்ற பெரும்போகத்தின்போது வழமையான பருவமழை பொய்த்ததால் அதிகளவான நெற்செய்கைக் காணிகள் கடும் வரட்சியினால் கருகிப் போயின. வரட்சியைத் தாங்கி ஈரமான பகுதிகளில் விளைந்த சிறிதளவு நெல் வயல்களும் கடந்தவார பெரு மழையினால் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் இங்கு உணவுப் பஞ்சம் ஏற்படுமென அஞ்சப்படுகிறது. வான் மழை பெய்யாது பெய்தும் தங்களது வயிற்றிலடித்துவிட்டதே என்று ஏழை விவசாயிகள் தலையில் அடித்துக் கொள்கிறார்கள்.

# அன்பளிப்புப் பெறும் இடங்களாக சோதனைச் சாவடிகள்!

## கொடுத்தால் அனுமதி! கொடுக்காவிட்டால் கெடுபிடி!

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பொலிஸ் சோதனைச் சாவடிகளில் கொழும்பிலிருந்தும் மற்றும் தூர இடங்களிலிருந்தும் உணவுப் பொருட்கள், நானாவிதப் பொருட்கள் ஏற்றி வரும் லொறிகள் மற்றும் போக்குவரத்து பஸ்கள், வெளிநாட்டிலிருந்து ஊர்திரும்பும் பயணிகள் போன்றோரிடம் பொலிசார் அன்பளிப்புகள் பெறுவது சர்வசாதாரணமாகிவிட்டது. அன்பளிப்புப் பொருட்களையோ அல்லது பணத்தையோ தாமாகக் கொடுக்காவிட்டால் பொலிசார் வாகனச் சாரதியையோ, நடத்துனரையோ அல்லது வெளிநாட்டிலிருந்து வருவோரையோ தனியாக அழைத்துச் சென்று வாய்விட்டுக் கேட்கின்றனர்.

அதற்கும் ஆட்கள் மசியவில்லை என்றால் வாகனம் பலத்த சோதனைக்கும் கெடுபிடிக்கும் உள்ளாவதுடன் பொருட்கள் கொட்டப்படுவதும் ஆட்கள் அதட்டி உருட்டப்படுவதும் நடைபெறும். சிலவேளை மணிக்கணக்கில் வாகனம் செல்லவிடாது காரணமின்றித் தடுக்கப்படும். இந்நிகழ்சிகள் இங்கு சகஜமாகிவிட்டன. ஆண், பெண், சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற பேதமின்றி சோதனைச் சாவடிகளில் நிற்கும் சகல பொலிசாரும் அன்பளிப்பு பெறுவதில் "தாராளத் தன்மையுடன்" நடந்து கொள்கின்றனர்.

சமீபத்தில் குருநாகலிலிருந்து ஏறாவூருக்குத் தேங்காய் ஏற்றி வந்த சிங்கள லொறிக்காரரிடம் சிங்களப் பொலிசாரே அன்பளிப்பு கேட்டு வாகனத்தைச் செல்லவிடாது தடுத்ததால் பின்னால் வந்து தடைப்பட்ட ஏராளமான வாகனங்கள் ஒரு மணித்தியாலமளவில் வீதியில் நிற்கவேண்டியதாயிற்று. கடைசியில் லொறிக்காரர் அன்பளிப்பு கொடுத்ததால் வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டது.

மேலும் சோதனைச் சாவடிகளுக்கு அருகிலுள்ள கடைகளில் மின்குமிழ், பதிவேட்டுக்கொப்பி, பேனா, சோடா, சாக்கு போன்றவற்றிற்காக பணம்கொடுத்துவிட்டு போகுமாறு (50/- ரூபாவுக்குக் குறையாமல்) கேட்கப்படுகிறது. மாலை கடமை முடிந்து போகும் போது மொத்தமாகப் பணத்தைச் சேர்த்துக்கொண்டு பொலிசார் செல்கின்றனர்.

ஆனால் இந்நிலைமை இராணுவ அதிரடிப்படை சோதனை நிலையங்களில் இல்லையென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## வெடிக்கும் குண்டுகளும் விரியும் சந்தேகங்களும்!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு நகரில் ஆங்காங்கே குண்டுகள் கண்டுபிடிக்கப்படுவதாலும், சில கண்டு பிடிக்கப்படாத நிலையில் வெடிப்பதாலும் பொதுமக்கள் பீதியடைந்துள்ளார்கள் கடந்த சில நாட்களில் முனைவீதி குளிர்பானச்சாலை, இந்துக்கல்லூரி விளையாட்டு மைதான சோதனைச் சாவடி, புகையிரத நிலையவீதி சந்தி, கல்லடி சிவானந்தா கல்லூரி அருகிலும் குண்டு வெடிப்பு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

இதைவிட சில இடங்களில் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன. மட்டக்களப்பு நகர நுழைவாயில்களில் பல முனைகளிலும் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்படும் நிலையில் இந்த மர்ம குண்டு வெடிப்புக்களின் பின்னணி குறித்து பொதுமக்கள் மத்தியில் சந்தேகம் நிலவுகிறது.

கடந்த சில நாட்களாக மட்டக்களப்பு நகரில் பொதுமக்கள் மிகுந்த அச்சத்துடனே நடமாடுகிறார்கள்.

## விவசாயிகள் அவதி

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்முனை, குறுமண்வெளி அம்பிளாந்துறை வாவித்துறைகளூடாக உழவு இயந்திரங்கள் மற்றும் வாகனங்களை எடுத்து வரவோ செல்லவோ அதிரடிப் படையினர் தடை விதித்துள்ளனர்.

இதனால் பொதுமக்களும், விவசாயிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது பெரும்போக நெல் அறுவடை ஆரம்பித்திருப்பதால் நெல்மூடைகளை எடுத்துவருவதிலும், சூடடிப்பதற்கு டீசலை எடுத்துச் செல்வதிலும் விவசாயிகள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.



படிப்பகம்

# இந்திய அரசியல் அரங்கில் 'ஹவாலா' புயல்

## அரசியல் தலைவர்களின் ஊழல்கள் அம்பலம்

(தமிழக நிருபர்)



இந்தியாவில் பொதுத்தேர்தல்கள் நெருங்கிவரும் சமயத்தில் ஊழல் குற்றச்சாட்டு ஒன்று புயல் போலக் கிளப்பியுள்ளது.

இந்தியாவின் பிரபல அரசியல் தலைவர்களின் தலைகளை அந்த ஊழல் புயல் பந்தாடிக்கொண்டிருக்கிறது.

ஊழல் புயலின் பெயர் 'ஹவாலா மோசடி.'

அது என்ன ஹவாலா மோசடி? ஒரு சுருக்கமான விளக்கம் இதோ: இந்தியாவில் பயங்கரமான பண முதலைகள் ஜெயின் சகோதரர்கள். அவர்களிடம் கோடி கோடியாக கறுப்புப் பணம் கொட்டிக் கிடப்பதாக தகவல் கிடைத்தது. அவர்களது வீடு சோதனையிடப்பட்டது. தகவல் பொய்யல்ல என்று தெரிந்தது. கோடி கோடியாகக் கறுப்புப் பணம் கைப்பற்றப்பட்டது.

ஜெயின் சகோதரர்கள் வீட்டில் இரண்டு டயறிகள் கைப்பற்றப்பட்டன. கிணறு வெட்டப்பூதம் புறப்பட்டதுபோல, அந்த டயரியில் இருந்த குறிப்புக்களும், கணக்குகளும் அதிர்ச்சிமேல் அதிர்ச்சியாக இருந்தன.

இந்தியாவின் பிரபல அரசியல் தலைவர்களுக்கு ஜெயின் சகோதரர்கள் கோடி கோடியாகக் கொடுத்த பணத்திற்கு கணக்கு எழுதிவைத்திருந்தார்கள்.

ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்று பாகுபாடே இல்லாமல் கோடி கோடியாக கொட்டிக் கொடுத்திருந்தார்கள்.

இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவு டயரியைப் படித்தது. எல்லாமே பெரிய இடம் என்பதால், டயறியை கிளறாமல் கிடப்பில் போட்டுவிட்டது. இது நடந்தது 1991ம் ஆண்டில்.

இந்த விஷயம் வினீத் நாராயணன் என்னும் பத்திரிகையாளருக்கு எப்படியோ தெரிந்து விட்டது. உச்ச நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு போனார். 'உடனே விசாரணை செய்க' என்று புலனாய்வுப் பிரிவுக்கு நீதிமன்றம் கட்டளையிட்டது.

15 அதிகாரிகள் மீது புலனாய்வுத் துறை வழக்குத் தொடர்ந்தது. பிரபல அரசியல் புள்ளிகளை விட்டுவிட்டு சாதாரண அதிகாரிகளை மாட்டி விடுவதா? என்று நீதிமன்றம் கண்டித்தது.

அதன்பின்னர்தான் விசாரணை சூடு பிடித்திருக்கிறது.

ஜெயின் சகோதரர்களது டயரியில் 115 பெயர்கள் இருக்கின்றன. மறைந்த பிரதமர் ராஜீவ் காந்தியின் பெயரும் இருக்கிறது.

இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர் அத்வானி, போட்டிக் காங்கிரஸ் தலைவர் அர்ஜுன் சிங், மற்றும் அமைச்சர்கள் வி.சி.சுக்லா, பல்ராம் ஜாக்கர், மாதவராவ் சிந்தியா, பீஹார் மாநில எதிர்கட்சித் தலைவர் யஷ்வந் சின்ஹா உட்பட பலர்மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அத்வானி தனது எம்.பி.பதவியை இராஜினாமா செய்துள்ளார். தன்மீதான குற்றச்சாட்டு பொய் என்று நீரூபிக்கப்படா விட்டால் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்றும் அறிவித்துள்ளார்.

ஆனால் அத்வானியின் பாரதிய ஜனதா கட்சியின் முக்கிய பிரமுகரான மதன்லால் குரானா, "அத்வானி லஞ்சமாகப் பணம் பெறவில்லை. தேர்தல் நன்கொடையாகவே பணம் வாங்கினார்" என்று சொல்லி குழப்பியிருக்கிறார்.

காங்கிரஸ் ஒரு ஊழல் கட்சி என்று சாட்டை வீசிய பாரதீய ஜனதாக் கட்சி இப்போது திணறிக்கொண்டிருக்கிறது.

பெரும்பாலான அரசியல்வாதிகள் பணம் வாங்கியதை ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால், "ஜெயின் சகோதரர்கள் தந்தது லஞ்சமல்ல, தேர்தல் நன்கொடை" என்கிறார்கள்.

பிரதமர் நரசிம்மராவும் ஜெயின் சகோதரர்களிடம் பணம் வாங்கினார் என்று ஆதாரம் காட்டுகிறது பாரதிய ஜனதாகட்சி.

சந்திரசாமி மூலமாக நரசிம்மராவ் லஞ்சம்வாங்கியதாக குற்றம் சாட்டப்படுகிறது.

ஆனால், புலனாய்வுத் துறையின் குற்றப் பத்திரத்தில் பிரதமர் நரசிம்மராவின் பெயர் இல்லை. விசாரணை தொடர்கிறது. டயரியில்




உள்ள சகலரும் விசாரிக்கப்படுவார்கள் என்று மத்திய புலனாய்வுத் துறை (சி.பி.ஐ.) உச்ச நீதிமன்றத்தில் உறுதியளித்துள்ளது. ஆனால் சி.பி.ஐ. பிரதமரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் பிரிவாகும்.

பிரதமர் நரசிம்மராவ்தான் சி.பி.ஐ. மூலம் தனது முக்கிய எதிரிகளை வீழ்த்த காய்களை நகர்த்துகிறாரோ என்றும் ஒரு சந்தேகம் எழுப்பப்படுகிறது.

எப்படியோ ஹவாலா மோசடி வழக்கின் முடிவு பெரும் அரசியல் முதலைகளை மக்கள் என்னும் கடலில் இருந்து தூக்கி வெளியே போடப்போகிறது. இந்திய உச்ச நீதிமன்றத்தின் கையில்தான் முடிவு இருக்கிறது.

# காட்டூன் மூலை




# கட்டிட வசதிக்கு 35 இலட்சம் ரூபா

(ஏறாவூர் நிருபர்)

சுமார் 55 ஆயிரம் மக்களின் சுகாதார நலன்களை கவனிக்க வேண்டிய செங்கலடி வைத்தியசாலையின் நீண்ட காலக்குறையாகவிருந்த கட்டிட வசதி தற்சமயம் கிடைத்துள்ளது. 35 இலட்ச ரூபா செலவில் சுகாதாரத் திணைக்களத்தினால் இந்த நிருவாக கட்டிடத் தொகுதி நிருமாணிக்கப்பட்டுள்ளது. குளோரினைப் பத்திரப்படுத்தி வைக்கக்கூட இடமில்லாமல் இதுவரை காலமும் பழைய மலசலகூடம் ஒன்றினுள் வைத்தே உபயோகப்படுத்தினார்கள். வைத்தியர்கள் தங்கும் அறை, களஞ்சிய அறை, பதிவறை, மகப்பேற்று தனி வாட், ஆண் பெண்களுக்கு தனியான வாட், கிளினிக் இடவசதி என்பனவற்றுடன் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் உடை மாற்றக்கூட இவ்வைத்தியசாலையில் இதுவரை காலமும் இடவசதி இல்லாதிருந்தது.

ஆண் பெண் நோயாளிகளுக்கு தனியான வாட் அமைக்க இன்னமும் நிதி உதவி கிடைக்கவில்லை. எனினும் இப்பிரிவை அமைப்பதற்கு வேண்டிய 3/4 ஏக்கர் காணியை வண. திஸவீரசிங்கம் அவர்கள் இவ்வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

இவ் வைத்திய சாலையில் நிலவிய குறைகளை வைத்தியர் திரு.ரீ.சுத்தானந்தம் பல வருடங்களாக சுகாதாரத் திணைக்களத்திற்கு சுட்டிக் காட்டி வந்துள்ளார். "தின முரசும்" இவ்வைத்தியசாலையின் சீர்கேடு குறித்து செய்தி வெளியிட்டிருந்தது.

# சந்தேகப் பார்வையில் பஸ்வண்டிகள்!

தமிழ்ப் பகுதிகளிலிருந்து கொழும்பு வரும் போக்குவரத்துச் சபை பஸ்வண்டிகளும் கொழும்பில் துவேஷப்பார்வைக்கு உள்ளாகின்றனவாம்.

வழக்கமாக தூர இடங்களிலிருந்து தலைநகர் வரும் பஸ் வண்டிகள் இரவில் கொழும்பு மத்திய பஸ் நிலையத்தில் தரித்து நின்றே அடுத்த நாள் பயணிகளுடன் திரும்புவது நீண்ட நாள் வழக்கமாகும்.

ஆனால் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக பஸ் வண்டி, வெடிகுண்டு ஏற்றிவருவதாகக் கற்பனை பண்ணப்பட்டு பஸ் நிலையத்தில் தரித்து இராப் பொழுதைக் கழிக்க அதிகாரிகள் அனுமதிப்பதில்லை. எங்காவது போய் நின்று விட்டு காலையில் வருமாறு கூறிவிடுகிறார்கள்.

அநேகமாகத் தமிழர்களே நடத்துநர், சாரதிகளாக இருப்பதால் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கடவத்தை டிப்போவுக்கு அருகில் தெருவில் பஸ்ஸை நிறுத்தி சத்தம் செய்யாமல் உறங்கி காலையில் கொழும்பு வந்து பயணத்தைத் தொடங்கவேண்டி இருக்கிறது.

தமிழர்கள் மாத்திரமல்ல, தமிழ்ப்பகுதி பஸ்கள்கூட தலைநகரத்தாரைப் பொறுத்தமட்டில் பயங்கரவாதிதானோ?


**கணனியில் தமிழ் புதிய Windows 95 க்கும் பாவிக்கக்கூடிய**

**Lestech இன்**

**Windows True Type Fonts**

**இப்பொழுது 21 குடும்ப தமிழ் எழுத்துக்கள் விற்பனையாகிறது. தமிழ் தட்டச்செழுத்திலும் (Key Board) பாவிக்கக்கூடியது. எந்தவொரு அளவுகளுக்கும் உருமாற்றக் கூடியதும் ஒவ்வொரு வரி வடிவத் திலும் விரும்பிய அளவுகளில் பொது நிலையானவை, தடிப்பானவை (Normal, Bold, Italic) ஆகிய வரி வடிவமைப்பிலும் கிடைக்கிறது. சிங்களம் ஒரு (1) குடும்ப எழுத்து விசயசேகரா Key Board ல் பிரயோகிக்கலாம்.**

**Page Maker Desk Top Publishing**

வகுப்புக்கள்நடத்தப்படுகின்றன. தொடர்புகொள்ளவும்

**ஸ்ரீ கிருஸ்ண துளசி**

127, புதுச்செட்டித்தெரு,
கொழும்பு - 13.
இலங்கை. (Sri Lanka)

தொ.பே: 335540
Fax: 94-1-434351



**ரிஷி அஜமாமிச லேகியம்**

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 195/=,105/=
தங்க பஸ்பம் கலந்தது 990/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

**ஞான சுந்தர வைத்தியசாலை**

187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398


# பரீட்சை நூல்கள் விநியோகம்

மலையக ஆசிரியர் பேரவையால் பெருந்தோட்ட பாடசாலைகளுக்கான ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கு மாதிரியான பொது அறிவு, நுண்ணறிவு தமிழ், கணிதம் போன்ற பாடங்களுக்கான தொகுப்பு நூல்களை இலவசமாக பின்வரும் இடங்களில் கொடுக்க ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளன என அதன் பொதுச் செயலாளரும் ஆசிரியருமான திரு. சுப்பையா இராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

**பதுளையில்**
அதிபர், தமிழ் மகளிர் மகா வித்தியாலயம்.
திரு.கே.சத்திவேல், திரு எஸ்.கமலநாதன், சரஸ்வதி தேசியக் கல்லூரி.

**பசறையில்**
திரு.பி.ஆறுமுகம், அதிபர் பசறை, த.ம.ம.வி.
திரு.கே.தனராஜ், ஆசிரியர், பசறை த.ம.ம.வி.
திரு.எஸ். சரவணபவா, கோணகலை த.வி.

**மொனறாகலையில்**
திரு.எஸ்.கணேசன்(உதவி கல்வி பணிப்பாளர்) கோட்டக்கல்வி காரியாலயம், மொனறாகலை.

**பண்டாரவளையில்**
அதிபர், தமிழ் மத்திய மகாவித்தியாலயம்.
திரு.எஸ். இராஜ்குமார், ஆசிரியர் ஊவாஹய்லண்ட் த.ம.வி.

**அப்புத்தளையில்**
அதிபர், தமிழ் மகா வித்தியாலயம்.
திரு.எஸ்.நவரட்ணம் ஆசிரியர், தமிழ் மத்திய மகா வித்தியாலயம்.

**கந்தகெதரயில்**
திரு.வை.தேவராஜா, அதிபர், சாரணியா த.ம.வி.

**மடுல்சீமையில்**
திரு.ஆர்.இராமசாமி, அதிபர், தமிழ் மகா வித்தியாலயம், மடுல்சீமை.

கிடைக்காத விண்ணப்பதாரிகள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்க:
திரு.எஸ்.இராஜ்குமார், ஆசிரியர் ப/ஊவாஹய்லண்ட், தமிழ் மகா வித்தியாலயம், பண்டாரவளை.


**கலை அலங்கார வகுப்புக்கள்**



* சிகை அலங்காரம்
* அழகுக்கலை
* மணப்பெண் அலங்காரம்
* 4 மாத கற்கை நெறி

**ஆரம்பம்: 01-02-96**

**FASNAZ BEAUTY SALON**

இல.142, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தை,
கொழும்பு-06.
தொலைபேசி: 589457



**மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHIATRIST)**

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திமிரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் ஹிஸ்டீரியா ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளையேறுதல், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

பெப்ரவரி **18** முதல் **28** வரை **Dr.P. ARUMUGAM,** AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P. 436383, 436390 மார்ச் **3,4** Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி ஒட்டமாவடியிலும், பெப்ரவரி **10,11,12**ம் மார்ச் **9,10,11** கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் **DR. P. ARUMUGAM** No: 50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.


**விளம்பரப் பகுதி**




33 வருட கடும் சேவைக்கு பின் உலக மாந்திரீக சக்ரவர்த்தி என பட்டமெடுத்த எமது நிர்வாகத்தில் தெட்டத்தெளிவான சேவை என்னவென்றால் மலையாள மாந்திரீகமோ அல்லது ஜோதிட ஆயுள் கணிப்போ வீட்டுக்கு வீடு வாசல்படி உண்டு. பல மொழிக்கு ஒப்ப எனது நிர்வாகத்தில் எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு என்ன கிழமை உங்கள் உந்தன் விடயம் சரிவரும் என்று கருதி உறுதிமுத்திரையுடன் வாங்கும் பணத்திற்கு அத்தாட்சி வழங்கி பெயர் வாங்கிக் கொண்டிருப்பது அரசு அங்கிகாரம் பெற்ற திரு.பி.கே.சாமி (ஜே.டி.ஜீ.ஏ) ஜே.பி.யின் பி.கே.சாமி அசோசியட் தனியார் நிறுவனம் உண்மை பொய் அறிய நேரில் வந்து காணலாம் திரு.பி.கே.சாமி அவர்களை காலை ஆறு முதல் மாலை 2.00 மணிவரையே சந்திக்கலாம். நேரில் மட்டுமே அவரின் ஆலோசனை பெறலாம். தெளிவுரையாளர் மூலமே தொலைபேசியில் பேசலாம். ஆலோசனைக் கட்டணம் ரூபா 250. வெளிநாட்டவர்கள் ஆலோசனைக் கட்டணம் ரூபா 2000. அவர் அவர் கையிலேயே மாந்திரீகப் பார்சலை ஒப்படைக்க அவர்களது உண்மையான தொலைபேசி சரியான இலக்கத்தை குறிப்பிட்டு அங்கத்தவர் கட்டணம் 2000 ரூபா அனுப்பினால், அவர் இல்லத்திலேயே அவர்களது கையிலேயே எமது பிரதிநிதி பார்சலை ஒப்படைப்பார். வெளிநாட்டவரோ உள்நாட்டவரோ மலையாள மாந்திரீக சக்தி உதவி தேவையென்றால் உண்மை சேவையான எமது ஸ்தாபனத்திற்கு வருகை தரலாம்.

**நேரிலோ, அல்லது தொலைபேசியிலோ, கடிதத்தொடர்புகளுக்கோ**

திரு.பி.கே.சாமி (J.D.G.A.N) JP
ஸ்ரீ துர்க்காதேவி ஸ்தானம்,
162, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13.

தொலைபேசி வரிகள்:- 01-342463, 342464, 344432, 344431.
நுவரெலியா:- 052 3093, 2508, 3570, 3336.

இன்னும் உண்மை விளங்க எமது விளம்பர சேவை 'ஜோதிடம் பார்ப்போம்' நிகழ்ச்சி பிரதி சனிக்கிழமைதோறும் காலை 10.45 மணிக்கு நடைபெறும் கேட்டு உண்மை அறியலாம்.

www.padippakam.com

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# கட்டம் மூன்று - சுற்று இரண்டு

# தகர்வுகளும் - தளர்வுகளும்

கொழும்பில் ஜனவரிமாதக் குளிரை மத்திய வங்கி தலைமையகத்தில் இருந்தும், சிலிங்கோ கட்டிடத்தில் இருந்தும் கிளம்பிய தீயின் உஷ்ணம் விழுங்கிவிட்டது.

அமெரிக்காவின் வர்த்தக மையத்தில் நடைபெற்ற குண்டுவெடிப்பை பிரபாகரன் கண்டித்திருந்தார்.

அதே பிரபாகரன் கொழும்பின் பொருளாதார இதயத்தை குறிவைத்து தனது தற்கொலைப் படைப்பிரிவை இந்த ஆண்டு அனுப்பிவைத்திருக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டன் கொழும்புக் குண்டுத்தாக்குதலை கண்டித்திருக்கிறார்.

கடந்த ஆண்டு இறுதியில் புலிகளது இதயமாக விளங்கிய யாழ்ப்பாணத்தளப் பிரதேசத்துக்கு அரசாங்கம் தனது படைகளை அனுப்பிவைத்திருந்தது.



**குண்டுத்தாக்குதலால் பாதிக்கப்பட்டவை 6**

1. நாட்டின் பொருளாதார இரத்த ஓட்டம்.
2. சூரியக்கதிர் வெற்றிச் செய்தி.
3. யுத்தத்தில் வெற்றியீட்டிய அரசு என்ற பெருமிதம்.
4. கொழும்பின் பாதுகாப்பு நம்பிக்கை.
5. யாழ்ப்பாண பின்னடைவு மூலமாக புலிகள் தலைமை பலவீனமாகிவிட்டது என்ற தோற்றப்பாடு.
6. யுத்த வெற்றிச் செய்தியை அரசியல் ஆயுதமாகக் கொண்டு வாக்காளர்களை வென்றெடுக்கும் கனவு.

நவாலி தேவாலய வளாகத்தில் இடம் பெற்ற குண்டுவீச்சு மிகப் பாரிய சோகம். சிறுவர் பெண்கள் உட்பட 150ற்கு மேற்பட்டோர் பலியாகியிருந்தனர். முன்னேறிப்பாய்ச்சல் நடவடிக்கையின் போது நேர்ந்த கோரம் அது.

அப்படியொரு தாக்குதலே நடக்க வில்லை என்று அரசு மறுத்திருந்தது. அரச பத்திரிகைகளும், வெகுஜன தொடர்பு சாதனங்களும் 'நவாலித் தேவாலயம் சேதமாகவில்லை' என்று காட்டுவதில் வரிந்து கட்டி நின்றன.

அதன்மூலம் தேவாலய வளாகத்தில் பலியான மக்களுக்காக கவலைப்படுவதை விட, தேவாலயத்தைப் பற்றிதான் கவலைப்பட்டுக்கொண்டார்கள்.

அதற்கு காரணமில்லாமல் இல்லை. வெளியுலகில் கிறிஸ்தவமத மக்களை எண்ணிக்கையும், தேவாலயம் தாக்கப்பட்டதாக நினைத்து அவர்கள் இலங்கை அரசுமீது வெறுப்படையக் கூடாது என்பதுமே பிரதான நோக்கமாக இருந்தது.

கிட்டத்தட்ட நவாலி தேவாலய வளாகச் சம்பவத்தின் பின்னர் காணப்பட்ட அவலத்திற்கு ஒத்ததாகவே கொழும்பு குண்டுத்தாக்குதல் விளைவுகளும் காணப்பட்டன.

நவாலி தாக்குதலை அரசு மறுத்திருந்தது. கொழும்பு குண்டுத் தாக்குதலை புலிகள் மறுத்திருக்கிறார்கள்.

ஆயினும், தாக்குதலின் நோக்கத்தை வெளியில் சொல்லாமல் இருக்கவும் புலிகள் தயாரில்லை.

'எல்லாளன் படை'என்ற பெயரில் வெளியான அறிக்கை தாக்குதலின் நோக்கத்தை வெளிச்சமிடுகிறது.

'வெளிநாட்டு முதலீட்டாளருக்கு அரசால் பாதுகாப்பு வழங்க முடியும் என்பது சுத்தமான பொய். ஆகவே வெளியேறிவிடுங்கள். எங்களால் தாக்குதல் நடத்த முடியும்' என்கிறது அறிக்கை.

அறிக்கையில் 19.1.96 என்று திகதியிடப்பட்டுள்ளது. ஆனால் முரசு உட்பட பத்திரிகைகளுக்கு அறிக்கை கிடைத்தது 31.1.96 அன்றுதான். அதாவது குண்டு வெடிப்பு நடைபெற்ற நாள்.

இது தபால் இலாகாவால் ஏற்பட்ட தாமதமல்ல. 'எல்லாளன் படை' திட்டமிட்டுச் செய்த ஏற்பாடு.

நேரடியாக உரிமை கோரினால் பழி புலிகள் மீதுதான்விழும். 'எல்லாளன் படை'க்கும் தமக்கும் தொடர்பில்லை என்று புலிகள் கூறினாலும் யாரும் அதனை நம்பப்போவதில்லை.

ஆகவே, நேரடியாக உரிமை கோராமல் நோக்கத்தை தெளிவுப்படுத்துவதும், வெளிநாட்டு முதலீட்டாளர்களை அச்சுறுத்துவதுமே எல்லாளன் படை முன்கூட்டியே திகதியிட்டு தாமதித்து அனுப்பிய அறிக்கையின் நோக்கம்.

குண்டு தாக்குதலால் ஏற்படும் விளைவுகளை வெளிநாடுகள் கண்டிக்கும் என்பது எதிர்பார்க்க முடியாதது அல்ல. அதனால் 'எல்லாளன் படை' அதற்கும் பதில் சொல்லியிருக்கிறது.

"நவாலி தேவாலய தாக்குதல் போன்றவற்றை கண்டிக்காதவர்களுக்கு எமது தாக்குதல்களை கண்டிக்கும் தார்மீக உரிமை கிடையாது" என்று சொல்கிறது அறிக்கை.

இலண்டனிலும் 'எல்லாளன் படை' அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. அதன் பின்னணியில் இருந்தவர்கள் புலிகளது இலண்டன் தலைமையகத்தினர்.

முன்கூட்டியே அந்த அறிக்கையை வெளியிட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களை அச்சுறுத்தியிருக்கலாமோ என்று கேள்வி எழலாம்.

அப்படி செய்திருந்தால் விதிச் சோதனை நடவடிக்கைகள் இறுக்கமாகியிருக்கும். பாரிய தாக்குதல் முயற்சி பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்படுவதை புலிகள் விரும்பவில்லை.

தவிர, குண்டுவெடிப்பு நடைபெற்ற தினத்தன்றே அறிக்கையும் பத்திரிகைகளுக்கு கிடைத்தால் புலிகள் செய்தார்கள் என்ற தீர்மானமான குற்றச்சாட்டு சற்று பலவீனமாகும் என்றும் புலிகள் நினைத்திருக்கலாம்.

ஆனால், பாரிய தாக்குதலை புலிகள் தவிர வேறுயாரும் செய்திருக்கலாம் என்று நினைத்துப் பார்க்கவே முடியாத நிலையில் 'எல்லாளன் படை' அறிக்கை நினைத்த பலனை சாதிக்கவில்லை. மாறாக 'எல்லாளன் படை' புலிகளது ஒரு பிரிவுதான் என்பதை அழுத்தமாக உறுதி செய்தது போலாகி விட்டது.

'எல்லாளன் படை' அறிக்கையில் புலிகளையும் சாடியிருந்ததுதான் அருமையான தந்திரம். ஆனால் அந்த தந்திரத்துக்கான பாராட்டையும் புலிகளை நோக்கியே சொல்லுமளவுக்கு 'எல்லாளன் படை' யாருடையது என்பது சகலருக்கும் தெரிந்திருக்கிறது.

'எல்லாளன் படை' தங்களுடையதல்ல என்று புலிகள் மறுத்திருக்கிறார்கள். கரிகாலனும் மறுத்திருக்கிறார். ஆனால் அது மிகப் பலவீனமான மறுப்பு.

'எல்லாளன் படை' பற்றிய பேச்சுக்கள் பரவலாக அடிபடுகின்றன. தம்மோடு தொடர்பில்லை என்று புலிகள் மறுக்கிறார்களே தவிர, அதனைப் பற்றி நல்லதோ கெட்டதோ ஒரு அபிப்பிராயமும் சொல்லவில்லை.

தாம் மட்டுமே தமிழீழத்துக்காகப் போராடும் ஒரேயொரு அமைப்பு என்கிறார் கரிகாலன். 'எல்லாளன்படை' புலிகளின் ஒரு பிரிவு இல்லையென்றால் கரிகாலன் சொல்வது தவறாகிவிடும். ஏனெனில் புலிகளைத் தவிர இன்னொரு அமைப்பும் புலிகளை விட தீவிரமாகவும், தேர்ந்த முறையிலும் தமிழீழத்துக்காகப் போராடுகிறது என்றுதானே அர்த்தம்.

ஆனால், இது சகஜம்தான். பொறுப்பு வாய்ந்த ஒரு அரசாங்கமே சில தாக்குதல்களை அப்பட்டமாக மறுக்கும்போது, அதற்கு எதிராகப் போராடும் ஒரு அமைப்பு மட்டும் உண்மைகளை பட்டவர்த்தனமாக ஒப்புக் கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஆனால், புலிகளது மறுப்பெல்லாம் வெளியுலக அபிப்பிராயம் தமக்கெதிராக திரும்பாமல் இருப்பதற்காகத்தான்.

உள்நாட்டில் அரசுக்கும், சகல மக்களுக்கும் தாம்தான் தாக்குதலின் சூத்திரதாரிகள் என்று தெரியவருவதையிட்டு புலிகளுக்கு ஒரு பாதகமுமில்லை.

அவ்வாறு தெரியவருவதன்மூலமாக புலிகள் சில செய்திகளை வெளிப்படுத்த நினைக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் படைகளை நிலை கொள்ள வைத்துக்கொண்டு, தென்னிலங்கையில் அரசோ, மக்களோ நிம்மதியாக இருக்க முடியாது.

யாழ்ப்பாணத்தை இழந்தது மூலம் புலிகளது தாக்குதல் திறன் குறைந்து விடவில்லை.

புலிகளை ஒதுக்கிவைத்துவிட்டு இலங்கை அரசியலில் எந்தவொரு முடிவையும் எடுக்க முடியாது.

போருக்கு ஆதரவாக அரசின்பின்னால் திரள்வது, எத்தனை ஆபத்தானது என்பதை தென்னிலங்கை மக்கள் உணரவேண்டும்.

அதுதான் புலிகள் தெரிவிக்க விரும்பும் செய்திகள்!

4/2/96 அன்று கிளிநொச்சியில் வெளியான ஈழநாதம் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் பின்வருமாறு சொலகிறது: "இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வுதான் முடிவு. ஆனால் புலிகள் பங்குகொள்ளாத தீர்வு என்பது கனவு."

கொழும்பு குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் அழுத்தி எழுதப்பட்ட தலையங்கம் அது.

கொழும்பு குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் அரச தரப்பு தனது உறுதி தளரவில்லை என்று காட்டநினைத்தாலும், உள்ளே ஆடிப்போய்த்தான் இருக்கிறது.

ஜனாதிபதிகூட அதிர்ந்து போயிருப்பது

## நாரதர்

போலவே தோன்றுகிறது.

பெப்ரவரி 4ம் திகதி சுதந்திர தின அணிவகுப்பும், கொண்டாட்டமும் களை கட்டவில்லை. ஜனாதிபதியின் வழக்கமான வசீகரப் புன்னகை காணாமல்போயிருந்தது.

எவ்வளவு வேகமாக நிகழ்ச்சியை முடித்து ஜனாதிபதியை அனுப்பிவைக்கலாம் என்பதில்தான் முழுக்கவனமும் குவிந்திருந்தது.

கொழும்பு குண்டுத்தாக்குதல் மட்டும் நிகழ்ந்திருக்காவிட்டால் சுதந்திரதினக்கொண்டாட்டம் கோலாகலமாக இருந்திருக்கும்.

யாழ்ப்பாண வெற்றிச் செய்தியை ஜனாதிபதி மீண்டுமொரு முறை தனது உரையிலும் நினைவூட்டியும் இருக்கக்கூடும்.

பெப்ரவரி 4ல் தலைநகரமே வெறிச்சோடியிருந்தது. ஹெலிக்கொப்டர் ஒன்று நாள்முழுவதும் தலைநகரின்மீது நோட்டமிட்டுக் கொண்டிருந்தது.

எங்காவது குண்டு வெடிக்கலாம் என்று மக்கள் அஞ்சிக்கொண்டிருந்தார்கள். அதன் மூலம் பாதுகாப்பு படையினர் மீது கடந்த ஆண்டு இறுதியில் ஏற்பட்ட நம்பிக்கை மீண்டும் தளரத் தொடங்கிவிட்டது.

நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப படைத்தரப்பு புலிகளை நோக்கி மற்றொரு பாரிய நடவடிக்கையை ஆரம்பிக்க நினைக்கலாம்.

ஆனால், முன்னர் யாழ்ப்பாண இராணுவ நடவடிக்கைக்கு இருந்த வரவேற்பு இனிமேல் தென்னிலங்கையில் கிடைக்குமா என்பது சந்தேகம்தான். ஏனெனில் புலிகளது பதிலடி நடக்கக்கூடும் என்ற எதிர்ப்பார்ப்பும் எழவே செய்யும்.

இந்த யுத்தம் எந்தவொரு தரப்புக்கும் இறுதி வெற்றியைத் தரப்போவதில்லை என்ற உண்மையை அரசாங்கம் மக்களுக்கு சொல்லலாம். அதன்மூலம் சூதாட்டம்போல வெற்றி குறித்த நப்பாசையில் தொடரும் யுத்தத்தை நிறுத்தும் தீர்வு திட்டத்துக்கு முன்வந்து, மக்கள் ஆதரவை திரட்டிட முன்வரலாம்.

ஆனால், அரசு அதற்கு முன்வருமா என்பது கேள்விக்குறிதான். எப்படியாவது மீண்டுமொரு பாரிய வெற்றியை நிலைநாட்டி தனது 'இமேஜை' காப்பாற்ற அரசு நினைக்கும்.

அரசியல் செல்வாக்கை உயர்த்தும் சுலபமான ஆயுதமாக யுத்தத்தை கையிலெடுத்துள்ள நிலையில், அதனை நிறுத்துவதும், உண்மையை ஒப்புக்கொள்வதும் அரச தரப்புக்கு கஷ்டமான விடயம்.

சமாதானக் கோஷத்தோடு பொதுஜன முன்னணி பதவிக்கு வந்தது. அது தோல்வியில் முடிந்தது. புலிகளை நம்பி ஏமாந்துவிட்டதாக தன்மீதுள்ள நம்பிக்கை சரிந்துவிடாமலிருக்க, 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற கோஷத்தை கையிலெடுத்தார் ஜனாதிபதி.

'சூரியக்கதிர்' மூலமாக தனது இரண்டாவது கோஷத்தை பெருமிதமாய் உச்சரித்துக் கொண்டிருந்தார் ஜனாதிபதி. தலைநகரின் இதயப்பகுதியில் ஊடுருவித்தாக்கியது மூலம் அந்தக் கோஷத்தையும் பலவீனமான தொனியாக்கிவிட்டார்கள் புலிகள்.

புலிகளைப் பொறுத்தவரை ஆட்டம் சமனாக முடிந்திருக்கிறது. தமது இயக்கத்தின் இதய தளமான யாழ்ப்பாணத்திற்குள் படைகள் சென்றதால் சரிந்த கௌரவத்தை, அரசாங்கத்தின் தலைநகருக்குள் புகுந்து சமன் செய்திருக்கிறார்கள்.

இப்போது அரசு பேச்சுக்கு தயாராக இருந்தால் புலிகள் கௌரவத்தோடு பங்கு கொள்ளக்கூடிய நிலையில் இருக்கின்றனர்.

ஆனால் அரசு புலிகளை நோக்கி நட்புக்கரத்தை நீட்டினால், புலிகளது பலத்தின் முன்னர் பணிந்ததாக முடிந்துவிடும். புலிகளை ஓரம் கட்டிவிட்டு பிரச்சனையை தீர்க்க முடியும் என்று கடந்த ஆண்டில் பேசிய உறுதி காற்றில் பறந்துவிட்டதாக முடியும்.

தற்போது அரசு புலிகளோடு பேச்சுக்கு சென்றால், அதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்க முடியும். புலிகள் இல்லாமல், புலிகளது பங்குபற்றல் இல்லாமல் இனப்பிரச்சனையை தீர்க்க முடியாது. இலங்கையில் அமைதியும் திரும்ப முடியாது என்பதை அரசு ஏற்றுக் கொண்டதாகத்தான் அர்த்தப்படும்.

எனினும், உண்மை அதுதான். உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற உண்மை. அதனை ஏற்றுக்கொள்ள அரசியல் துணிச்சல் நிறையத் தேவைப்படும்.

துரதிஸ்டவசமாக அத்தகைய அரசியல் துணிச்சல் காணாமல் போய்க் கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சி கேலி செய்யும் என்று ஆளும் தரப்பு பயப்படவேண்டியிருக்கிறது.

யுத்தத்தில் ஒரு சமரில் வெற்றிபெற்றவுடன் முன்னைய அரசாங்கங்கள் கையாலாகாதவை என்று பிரசாரம் செய்யப்பட்டதில் அரசியல் நோக்கமே முன்னணியில் நின்றது.

இப்போது யுத்தத்தை நிறுத்தவும் அந்த அரசியல் நோக்கம்தான் தடையாக இருக்கும். முன்னைய அரசாங்கங்களை விட மேம்பட்டதாக தன்னைக் காட்டிக் கொள்ள இன்றைய அரசுக்கு கிடைத்த வரப்பிரசாதம் 'சூரியக்கதிர்'.

கொழும்பு குண்டுதாக்குதல் அந்த வரப்பிரசாதத்தை விழுங்கிவிட்டது. மீண்டும் ஒரு வரப்பிரசாதம் கிடைக்காதா என்றுதான் அரசு தேடப்போகிறது.

கொழும்பு குண்டுத்தாக்குதலின் பின்னர் அரச தரப்பின் முக்கியமானவர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்கள் அதனைத் தெளிவுபடுத்துகின்றன.

புலிகள் மூன்றாம் கட்ட ஈழப் போரின் இரண்டாவது சுற்று ஆட்டத்தை கொழும்பில் துவக்கிவைத்துவிட்டார்கள்.

முதல் சுற்று ஆட்டம் யாழ்ப்பாணத்தில் படைத்தரப்பால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. புலிகள் ரன்களை குவிக்கவில்லை. தற்காப்பு தடுப்பாட்டம் ஆடினார்கள். ஆனால் ஆட்டமிழக்கவில்லை. இரண்டாவது சுற்றில் புலிகள் முதலில் துடுப்பெடுத்தாடி, தமது எதிர்த் தரப்பை திணறடித்துள்ளார்கள்.

திணறிப் போனாலும் அரசும் ஆட்டமிழக்கவில்லை. அரசின் இன்றைய நிலவரம் Not அவுட், No ரன். ரன்குவிக்கப் போவதாக அரசு சொல்லிக் கொண்டிருக்கிறது.

ஆனால், வெற்றி தோல்வியின்றி தொடரப்போகும் ஆட்டம் இது என்பதை இரு தரப்புமே உணரவில்லை.

கொழும்பு உண்மையான உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கு தயாராகி வருகிறது.

தலைநகரில் எழுந்த, கூக்குரல்கள் இன்னமும் செவிகளில் ஒலித்துக்கொண்டிருக்க, இரத்தக் கறைகள் இன்னமும் காயாத நிலையில் கிரிக்கெட் ஆட்டத்துக்கும் நாடு தயாராவது ஒரு உண்மையை சுட்டிக்காட்டுகிறது.

இந்தக் குட்டித்தீவு தனது இதயத்தில் ஈரத்துக்குப் பதிலாக, நெருப்போடு வாழப் பழகிக் கொண்டுவிட்டது. சாவுகள் சர்வசாதாரணமாகிவிட்டன.

கட்டிடங்களுக்குள் சிக்கியுள்ள பிணங்களை அப்புறப்படுத்தும் பணியும், விளையாட்டுப்போட்டிக்காக மைதானத்தை அழகு படுத்தும் பணியும் ஒரே நேரத்தில் நடத்தப்படக்கூடிய நிலை இருப்பது அதனால்தான்.

ஏனைய நாடுகள்தான் இலங்கையில் வந்து ஆடுவதற்கு பயந்திருக்கின்றன. அவர்களுக்கு புலிகள் சார்பாக இலங்கை கிரிக்கெட் சபை உத்தரவாதம் கொடுக்க, முன்வந்ததுதான் வேடிக்கை.

எப்படியோ கிரிக்கெட் சமாதான பூர்வமான விளையாட்டுத்தான். அதற்குப் போட்டியாக அரசியலும், யுத்தமும் களத்தில் இறங்கியிருப்பதுதான் ஆபத்தான விளையாட்டு.

## அதிரடி அய்யாத்துரை



நம்மூருக்கு வந்து விளையாட சில நாடுகளுக்கு திக், திக் என்றிருக்குதாம். வாறது பந்தோ அல்லது குண்டோ எண்டு எப்படிக் கண்டுபிடிக்கிறது எண்டு யோசிக்கினமாக்கும்.

பொதுத் தேர்தல் வரப்போகுது டும்டும்டும் எண்டு குடு குடுப்பை அடிச்சுக் கொண்டிருந்த விமர்சன வித்தகர்கள் தலைமறைவாக இருப்பதாகத் தகவல். இந்த நாட்டின் அரசியல் முடிவுகளும், தீர்மானங்களும் வடக்கிலிருந்துதான் செய்யப்படுகின்றன எண்டு அவையள் விளங்கிக் கொள்ளவில்லையாக்கும்.

தலை நகரில் உள்ள தமிழ் வர்த்தகர்களுக்கு ஒரு கடிதம் வந்திருக்குதாம். முன்னாள் தமிழ் மன்னனின் பெயரில் உள்ள படைதான் கடிதம் போட்டிருக்குதாம். அதிகாரத்தரப்பாருக்கு நிதி கொடுக்க வேண்டாம் என்று அன்பாகவும், பண்பாகவும் எச்சரித்துக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்களாம்.

தேனகத்தில் நிலத்தில் கால்வைக்க முன்னர் ஆயிரத்தெட்டு தெய்வங்களையும் உதவிக்கு அழைத்துக் கொண்டுதான் சனம் கால் எடுத்து வைக்குதாம். வெளியிலை போனவை வீடு வந்து சேரும் வரைக்கும் வீட்டிலுள்ளவை நேராத தெய்வங்கள் இல்லையாம். என்று தணியுமிந்த 24 மணி நேர அவதி?

தலைநகருக்கு ஆபத்து என்று முரசு செய்தி போட்டதல்லோ. செய்தியோடு போட்ட படத்தில் மத்திய வங்கிக் கட்டிட பகுதிக்கு மேலாக குண்டுத்தாக்குதல் அபாயமும் குறித்துக் காட்டப்பட்டிருந்தது. அதை நினைவில் வைத்திருந்து நாரதருக்கு கரிநாக்கு எண்டு முரசு அலுவலகத்திற்கு போன் மேல் போன். நாரதர் சொன்னதில் ஒரு திருத்தம். வானுக்கு பதிலாக தரை மூலம் தாக்குதல் நடந்திருக்கு.

மத்திய வங்கியில் பணியாற்றும் தமிழ் ஊழியர்களில் உயிர்தப்பிய சிலரை விசாரணை செய்யப் போனார்களாம் அதிகாரிகள். வங்கியில் பொறுப்புள்ள பதவியில் உள்ளவர் ஒருவர் காயத்துடன் தப்பி சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்தார். காய வலியில் இருந்தவரிடம் கேள்விக் கணை தொடுக்க முற்பட்டவர்களை செமர்த்தியாக கிழித்து விட்டாராம் மனிதர்! குண்டு வெடிப்புகளில் உயிர்தப்பினாலும் இப்படியொரு பிரச்சனை இருக்கு. குறிப்பாக செந்தமிழ் மொழியினருக்கு!

கனடா கடும் போக்கில்தான் இருக்கிறது. ரெண்டு எழுத்தார் விடயத்தில் கடும் உஷார் நிலையில் இருக்குதாம். ரெண்டு எழுத்துக்காரர் எண்டு கனடாவுக்கு எப்படித் தெரியும் எண்டு யோசித்துக் கொண்டிருந்தவை பல பேர். ரெண்டு எழுத்து இயக்க முன்னாள் பிரமுகர்களை வைத்தே மோப்பம் பிடிச்சிருக்கு கனடா.

சிங்கப்பூர் கூட்டம் போகக்கென்று தடைப்பட்டதில் தமிழ் கட்சிகளில் சிலருக்கு கடும் வருத்தமாம். ஓசிப் பயணம் இப்படி ஊசி குத்தின பலூன் மாதிரிப் போகுமெண்டு யார் கண்டது! அதிகாரத் தரப்பாரின் தடை மட்டும் கூட்டம் நிறுத்தப்பட்டதற்கு காரணம் என்டு சொல்லப்பட்டதில் உண்மையில்லையாம். ரெண்டு எழுத்தார் தரப்பில் இருந்து பின்போடும்படி இரகசியச் செய்தி கூட்ட ஒழுங்கமைப்பாளர்களில் ஒருவருக்கு கிடைத்ததாம். இல்லாவிட்டால் வேறு ஏதாவது ஒரு நாட்டில் அதே திகதியில் நடத்த முடியாமல் போயிருக்குமோ? அவனின்றி ஒரு அணுவும் அசையாதுங்கோ?

தமிழ் அமைப்புக்களது ஒற்றுமைக்கூட்டத்தில் ரெண்டு எழுத்தாரின் அமைப்பான உலகத் தமிழர் இயக்கமும் கலந்துகொள்ள இருந்ததாம். அதன் சார்பாக சிங்கப்பூர் செல்ல இருந்தவர் முன்னாள் எம்.பியும், வெளிநாடொன்றில் குடியுரிமை பெற்றிருப்பவருமான சூசைதாசன். கதை அப்படிப் போகுதோ?

சுயாதீன தொலைக்காட்சியிலை வண்ணக் கோலத்தை காணவில்லை. திடீரென்று வண்ணக் கோலம் நிறுத்தப்பட்டது! இது எந்தவகையான எண்ணக் கோலம்?!

சுதந்திரதின விழாவில் தமிழ் உரையை வாசித்தவர் அடிக்கடி வார்த்தைகளில் தடுக்கி விழுந்து எழுந்தது! ஏன்? சூழ்நிலை அப்படியோ?!

இனி ஒரு குட்டிக் கவிதை. குறும்பு கலந்தது.

**புடவை**

"கண்ணனும் அவனே...
துரியோதனும் அவனே!
ஆசையாய் வாங்கிக்கொடுத்ததை
'ஆசையால்' அவிழ்த்தெறிந்தான்."

(சிரில் விக்டர்)


படிப்பகம்

www.padippakam.com



**அற்புதன் எழுதுவது**

# 65

# டயரில் எரிந்த பிணங்கள்

# புலிகள் விதித்த தடை

## திருப்பமான மோதல்

1986 ஏப்ரல் மாதம் புலிகள் இயக்கத்திற்கும் ரெலோவுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்தான் போராளி இயக்கங்களின் வரலாற்றில் திருப்பமாக அமைந்தது.

அதுவரை எங்காவது ஒரு பகுதியில் நடைபெறும் மோதலோடு பூர்த்தியான இயக்க மோதல்கள் முதன் முதலாக முழு மோதலாக வெடித்தது அப்போது தான்.

புலிகள் இயக்கத்தின் கோப்பாய் பகுதி பொறுப்பாளர் லிங்கம். அவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். தமது இயக்க சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த லிங்கத்தோடு ரெலோ இயக்க உறுப்பினர்கள் சிலருக்கு பிரச்சனை ஏற்பட்டது.

பிரச்சனை முற்றியதால் ரெலோ உறுப்பினர்கள் துப்பாக்கிமுனையில் லிங்கத்தை தமது வாகனத்தில் கடத்திச் சென்றார்கள்.

சிறீசபாரத்தினம் தங்கியிருந்த கல்வியங்காடு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டார் லிங்கம். அங்குவைத்து லிங்கத்தை விசாரிக்க முற்பட்டனர் ரெலோ இயக்கத்தினர். லிங்கம் ஒத்துழைக்கவில்லை. அதேநேரம் லிங்கம் கடத்திச் செல்லப்பட்ட விடயத்தை அறிந்த புலிகள் ரெலோவோடு தொடர்பு கொண்டனர்.

லிங்கம் தப்பியோட முற்பட்டபோது நம்மவர்கள் சுடவேண்டியேற்பட்டது. அதனால் லிங்கம் இறந்துவிட்டார். என்று பதில் சொல்லப்பட்டது.

உடனடியாக செயலில் இறங்கினார்கள் புலிகள். ரெலோ இயக்க முகாம் ஒன்றுக்குள் புகுந்து பதிலடி நடவடிக்கையில் ஈடுபடுமாறு ஒரு குழுவை அனுப்பி வைத்தார் கிட்டு.

யாழ்ப்பாணம் பழைய பூங்காவீதியில் ரெலோ முகாம் ஒன்று இருந்தது.

ஏனைய முகாம்களைவிட அதனைத் தாக்குவது தான் சுலபமாக இருக்கும் என்று கிட்டு திட்டம் போட்டார்.

ரெலோ முகாம் ஒன்றை தாக்கிவிட்டு பின்னர் ரெலோவோடு பேச்சுக்குச் செல்லலாம் என்பதுதான் கிட்டுவின் திட்டம்.

## தாக்குதல் ஆரம்பம்

திட்டப்படி பழைய பூங்காவீதி முகாம் புலிகளால் தாக்கப்பட்டது. ரெலோ உறுப்பினர்கள் பதிலடியில் ஈடுபடவில்லை. அதற்கு தயாராகவும் இருக்கவில்லை.

லிங்கம் கடத்தப்பட்ட விவகாரமும் அங்கிருந்தவர்களுக்குத் தெரியாது.

முகாமிலிருந்த சிலர் கொல்லப்பட்டனர். முகாம் பொறுப்பாளர் உட்பட பலர் தப்பிச் சென்றனர்.

அந்த முகாமின் பொறுப்பாளரது மருமகன் ஒருவர் புலிகளிடம் சிக்கிவிட்டார். அவரது வயது 13. முதல்நாள்தான் மட்டக்களப்பில் இருந்து தனது மாமனாரைக் காண வந்திருந்தார்.

அவரையும் ரெலோ இயக்க உறுப்பினர் என்று நினைத்துவிட்டார்கள் புலிகள். 'தனக்கு எதுவும் தெரியாது' என்றான் சிறுவன். நம்பவில்லை.

வேன் ஒன்றுக்குள் போட்டு பூட்டி வெடி குண்டை வைத்தனர் புலிகள். வேன் சிதறியது. சிறுவனின் காலில் ஒரு பகுதி மரத்தில் போய் தொங்கியது.

பழைய பூங்காவீதி முகாமில் பதிலடி இருக்கவில்லை என்பதால் கிட்டு திட்டத்தை மாற்றிக்கொண்டார்.

ரெலோ முகாம்கள் அனைத்தையும் தாக்குமாறு சகல முகாம்களுக்கும் 'வோக்கி' யில் உத்தரவு பிறப்பித்தார்.

திலீபன் தலைமையில் கல்வியங்காடு ரெலோ முகாம் நோக்கியும் ஒரு அணி சென்றது.



அந்தக் காலகட்டத்திலேயே புலிகள் தொலைத்தொடர்பு சாதன விடயத்தில் முன்னணியில் இருந்தனர். அநேகமாக சகல முகாம்களிலும் வோக்கிடோக்கி இருந்தது.

அதனால் உத்தரவுகளையும், உடனடித் தகவல்களையும் விரைவாகப் பரிமாற முடிந்தது.

ஏனைய இயக்கங்களிடம் தலைமையில் உள்ளவர்களுக்கு மட்டுமே வோக்கிடோக்கி இருந்தது.

பழைய பூங்காவீதி முகாம் தாக்கப்பட்ட செய்தியை அங்கிருந்து ஒருவர் தப்பி ஓடிவந்துதான் கல்வியங்காடு ரெலோ முகாமுக்கு தெரிவிக்க வேண்டியிருந்தது.

அதற்கிடையே கல்வியங்காட்டுப் பகுதியில் புலிகளது வியூகம் வகுக்கப்பட்டு விட்டது.

பழைய பூங்காவீதி முகாம் தாக்கப்பட்ட செய்தியை முதலிலேயே அறிந்திருந்தால் கல்வியங்காட்டில் பிரதான முகாமில் இருந்த ரெலோ உறுப்பினர்கள் முந்திக்கொண்டு பதிலடிக்கு தயாராகியிருப்பார்கள்.

ரெலோவின் பிரதான முகாமுக்கும் யாழ்ப்பாணத்தில் இருந்த ஏனைய ரெலோ முகாம்களுக்கும் இடையில் வானொலித் தொடர்பு இருந்திருந்தால் பிரதான முகாமை நோக்கி அவர்களை அழைத்திருக்கலாம். பதில் தாக்குதலுக்கு தயார் படுத்தியிருக்கலாம்.

வானொலி தொடர்பு சாதனங்களின் பெறுமதியை அன்றுதான் ரெலோ உணர்ந்திருக்கும். முதலிலேயே உணர்ந்திருந்தால் ரெலோவாலும் வாங்க முடிந்திருக்கும்.

## டயரில் போட்டார்கள்

தமது முகாம்கள் தாக்கப்படும் விடயமே தெரியாமல் வீதிவழியாக வாகனங்களில் சென்று கொண்டிருந்த ரெலோ உறுப்பினர்கள் புலிகளால் சுட்டுத் தள்ளப்பட்டார்கள்.

ரெலோ வாகனம் ஒன்றை மறித்த புலிகள் "நீங்கள் எந்த இயக்கம்?" என்று கேட்டார்கள். புலிகள் தமது இயக்கத்திற்கு எதிராக தாக்குதலை ஆரம்பித்துவிட்டதை அவர்கள் அறியவில்லை.

"நாங்கள் ரெலோ...நீங்கள்?"

புலிகள் பதிலே சொல்லவில்லை.

கண்ணை மூடிக்கொண்டு சுட்டுத்தள்ளினார்கள். வேனில் இருந்தவர்கள் ஆறுபேரும் கொல்லப்பட்டார்கள்.

திருநெல்வேலிச் சந்தியில் மட்டும் முப்பதுக்கு மேற்பட்ட ரெலோ உறுப்பினர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.

கல்வியங்காடு பிரதான முகாமில் இருந்து மட்டும் ரெலோ பதில் தாக்குதலில் ஈடுபட்டது.

அதனால் பிரதான முகாமை புலிகள் நெருங்கிச் செல்ல முடியவில்லை.

பிரதான முகாமுக்கு வெளியிலிருந்து ஆட்பலம் வந்து சேராமல் புலிகள் வியூகம் அமைத்துக் கொண்டனர்.

அதேவேளை திருநெல்வேலி சந்தியில் சூடுபட்டு விழுந்து கிடந்த ரெலோ உறுப்பினர்களது உடல்களை ஒன்று சேர்த்தனர். சகல உடல்களையும் ஒரே இடத்தில் குவித்து, அவற்றின்மீது டயர்களை போட்டுக் கொளுத்தினார்கள். கிட்டு, திலீபன் ஆகியோரது உத்தரவுப்படியே உடல்கள் டயர் போட்டு எரிக்கப்பட்டன.

சொக்கப்பானை எரிவது போல திருநெல்வேலி சந்தியில் தீயெழுந்து அப்பகுதியை சுடுகாடு போல மாற்றியிருந்தது.

தமது ஜீன்ஸ்களை முழங்கால்வரை மடித்துவிட்டுக்கொண்டு எரியும் நெருப்பில் உடல்களை தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தார்கள் புலிகள் இயக்க உறுப்பினர்கள்.

## திசை தெரியவில்லை

கல்வியங்காடு பிரதான முகாமைத்தவிர யாழ்ப்பாணத்தில் உள்ள சகல ரெலோ முகாம்களும் புலிகள் தாக்குதலை ஆரம்பித்த முதலாவது நாளே வீழ்ச்சியடைந்தன.

ரெலோ உறுப்பினர்களில் முகாம்களில் இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஏனைய பிரதேசங்களை சேர்ந்தவர்கள்.

குறிப்பாக மட்டக்களப்பு, திருகோணமலை பகுதியைச் சேர்ந்தவர்கள்தான் அதிகம்பேர்.

புலிகளால் ரெலோ முகாம்கள் தாக்கப்பட்டபோது தப்பியோடிய அவர்களுக்கு பாதைகள் தெரியவில்லை. யாரிடம் சென்று அடைக்கலம் கேட்பது என்றும் விளங்கவில்லை. புலிகளிடம் மாட்டிக் கொண்டார்கள்.

முதல் நாளன்று அப்படி மாட்டியவர்களில் கிட்டத்தட்ட நூறுபேர் வரை புலிகள் இயக்கத்தினரால் கொல்லப் பட்டனர்.

திருநெல்வேலி சந்தி தவிர இருபாலைச் சந்திக்கு அருகாமையிலும் டயர்களில் பிணங்கள் எரிந்து கொண்டிருந்தன.

ரெலோ இயக்க முக்கியஸ்தர்கள் பலர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்திடமும், ஈரோசிடம் சென்று பாதுகாப்பு கேட்டனர்.

கிட்டத்தட்ட நூறு ரெலோ உறுப்பினர்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். முகாம்களிலும், 50க்கு மேற்பட்டவர்கள் ஈரோஸ் இயக்க முகாம்களிலும் முதல் நாளன்று அடைக்கலம் பெற்றனர்.

ரெலோ உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டாம் என்று கிட்டு நேரில் சென்று டக்ளஸ் தேவானந்தாவிடம் கூறினார்.

பாதுகாப்பு கொடுப்பது மூலம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கும், புலிகள் இயக்கத்திற்கும் இடையில் கசப்புகள் ஏற்படலாம் என்றார் கிட்டு.

எனினும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். ரெலோ இயக்க உறுப்பினர்களுக்கு தொடர்ந்து புகலிடம் வழங்கியது.

வெள்ளைக் கொடிகளை வீதிகளில் பறக்கவிட்டு சமாதானத்தை வலியுறுத்தியது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

## மக்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம் நாவாந்துறையில் இருந்த ரெலோ முகாமை தாக்குவதற்காகச் சென்ற புலிகள் இயக்கத்தினரை பொதுமக்கள் தடுத்தனர்.

பொதுமக்களுக்கும் புலிகளுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. முடிவில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள் புலிகள். பொதுமக்களில் இருவர் கொல்லப்பட்டனர்.

ஆத்திரமடைந்த மக்கள் புலிகள் சென்ற வாகனங்களில் இரண்டை கொளுத்தினார்கள்.

திரும்பிச்சென்ற புலிகள் மீண்டும் வந்து வாகனத்தை கொளுத்தியவர்களை தம்மிடம் ஒப்படைக்குமாறு கேட்டனர்.

இறந்தவர்களது உயிர்களை உங்களால் திருப்பித்தரமுடியுமா? என்று கேட்டனர் கூடியிருந்த மக்கள்.

பிரச்சனையை வளர்க்காமல் புலிகளது அணி திரும்பிச் சென்றது.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் புலிகள் இயக்கத்தினரால் ஊரடங்கு அறிவித்தல் செய்யப்பட்டது.

ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனங்களில் ஊர் ஊராகச் சென்று, "ரெலோ இயக்க உறுப்பினர்கள் எம்மிடம் உடனடியாகச் சரணடைய வேண்டும். ரெலோ இயக்கத்தினருக்கு புகலிடம் வழங்குவோர் துரோகிகளாகக் கருதப்படுவார்கள்.

இந்திய அரசின் கைக்கூலிகளாக இருந்து தமிழ்ப் போராட்டத்தை காட்டிக் கொடுத்த ரெலோ இயக்கத்தை தடை செய்திருக்கிறோம்." என்று அறிவித்தார்கள் புலிகள்.

ஈழப் போராட்ட வரலாற்றில் இயக்கமொன்றை பிறிதொரு இயக்கம் தடை செய்துவிட்டதாக அறிவித்தது அதுதான் முதல் தடவை.

(தொடர்ந்து வரும்.)

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# எம்.ஐ.17 எங்கே வீழ்ந்தது?

## கிளம்பிய வதந்திகளும், கிடைத்துள்ள தகவல்களும்

**ஸ்பெஷல் ரிப்போர்ட்**

**நாரதர்**

### எம்.ஐ.17 சிறப்புத்தகுதிகள்

- சோவியத் யூனியன் ஒன்றாக இருந்த போதே தயாரான தரமான உற்பத்தி.
- 24 இருக்கைகள் உள்ளன.
- 12 தற்காலிக படுக்கைகளை ஏற்படுத்தி நோயாளர்களை காவிச்செல்ல முடியும். மருத்துவ சாதனங்களையும் பொருத்தலாம்.
- வசதிக்கு ஏற்ப மாற்றக்கூடிய கதவுகள்.
- மீட்புப் பணிகளுக்கும் நன்கு ஒத்துழைக்கும்.
- மணிக்கு 240 கி.மீட்டர் வேகத்தில் செல்லும்.
- ஒரு முறை எரிபொருள் போட்டு விட்டால் 800 கி.மீட்டர் தூரம் வரை தாக்குப்பிடிக்கும். பூரண சுமையோடு என்றால் 550 கி.மீட்டர்.
- மேலதிக எரிபொருள் தேவைக்கு ஓரிரு பெற்றோல் தாங்கிகளையும் எடுத்துச் செல்லும் வசதி இருக்கிறது.

**எம்.ஐ.17** ஹெலிகொப்டர் எங்கே? சுட்டு வீழ்த்தப்பட்டதா? அல்லது சிறு சேதத்தோடு புலிகளால் தரையிறக்கப் பட்டதா?

கொழும்பு குண்டுத்தாக்குதலுக்கு முன்னர் தலைநகர ஆங்கில, சிங்கள பத்திரிகைகளில் பரபரப்பான கேள்வி அதுதான்.

இதற்கிடையே ஹெலிகொப்டரில் பயணம் செய்தவர்களில் சிலரது உடல் பகுதிகள் கரையொதுங்கி உள்ளன.

மொத்தம் 39 பேர் பயணம் செய்தனர். கரையொதுங்கிய உடல்பகுதிகள் சிலரது தான். மீதிப் பேர் என்ன ஆனார்கள்? அது அடுத்த கேள்வி.

ஹெலிகொப்டர் எப்படித் தாக்கப் பட்டது என்பதற்கான விடையில் மேற்கண்ட கேள்விகளுக்கும் பதில் இருக்கிறது.

கடந்த ஆண்டு பலாலி விமானத்தளம் அருகே இரண்டு அவ்ரோ விமானங்களை புலிகள் வீழ்த்தியிருந்தனர்.

முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கையின்போது புக்காரா விமானம் ஒன்று புலிகளால் வீழ்த்தப்பட்டது.

மூன்று விமானங்களுமே விமான எதிர்ப்பு ஏவுகணைகளால் தாக்கப் பட்டிருந்தன.

அதனால் மூன்று விமானங்களும் வானிலேயே வெடித்துச் சிதறியிருந்தன.

கடந்த வருட இறுதியில் சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் வை.8 ரக விமானம் ஒன்று புலிகளால் தாக்கப்பட்டது.

பலாலி கூட்டுப்படை தளம் அருகே கடற்பரப்பின்மீது தாழ்வாகப் பறந்து கொண்டிருந்தபோதே வை.8 தாக்கப்பட்டது.

தாக்கப்பட்ட வை.8 கடலில் விழுந்தது. இருவர் உயிர்தப்பவும் முடிந்தது.

அதற்கு என்ன காரணம்? வை.8 தாக்கப்பட்டது ஏவுகணையால் அல்ல. ஒலிகன் ரக பீரங்கியால்தான் சுடப்பட்டது.

ஏவுகணை என்றால் விமானத்தில் பட்டதும் வெடித்து, விமானத்தையும் வெடித்து சிதறவைத்துவிடும். உள்ளேயிருப்பவர்கள் தப்பமுடியாது.



விமானதளத்தில் தரையிறங்க தாழ்வாகப் பறந்தால்தான் ஒலிகன் ரக பீரங்கியால் குறி தப்பாமல் சுட முடிந்தது. தாழ்வாக பறந்த நிலையில் கடலில் விழுந்தமையால் இருவர் தப்பிக்கொண்டார்கள்.

ஆனால் எம்.ஐ.17 விவகாரம் வேறு மாதிரியானது.

பலாலியில் இருந்து வெற்றிலைக்கேணி நோக்கி சென்று கொண்டிருந்தபோது இடை நடுவில் வைத்து தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது.

ஹெலி தாக்கப்பட்டதையோ, வெடித்து சிதறியதையோ வெற்றிலைக் கேணி முகாமிலிருந்தவர்கள் காணமுடியாத தூரத்தில் வைத்துத்தான் தாக்கப்பட்டிருக்கிறது.

எனவே, தரையிறங்கும் நோக்கத்தோடு எம்.ஐ.17 தாழப்பறந்திருக்க முடியாது. உயரத்தில் பறந்து கொண்டிருந்தபோது தான் குறிவைக்கப்பட்டிருக்கிறது.

உயரத்தில் பறந்து சென்று கொண்டிருக்கும் ஹெலியையோ, விமானத்தையோ ஏவுகணையால் தாக்குவதுதான் சுலபம்.

ஒலிகன் ரக பீரங்கியால் சுட்டால் குறி தவறலாம். அப்படி குறி தவறும்போது ஹெலியில் உள்ளவர்கள் கவனித்துவிட்டால் மற்றொரு தாக்குதலுக்கு வசதியில்லாமல் போய்விடும்.

ஏவுகணையென்றால் இலக்கு தவறினாலும் தனது ரகத்திற்கு ஏற்ப வெப்பத்தையோ, அல்லது உலோகத்தையோ மோப்பம்பிடித்து சென்று தாக்கிவிடும்.

புலிகளது நோக்கம் ஆனையிறவு, மற்றும் வெற்றிலைக் கேணி முகாம்களில் படையினர் பாரிய தாக்குதலுக்கு தம்மை தயார்படுத்தாமல் தடுப்பதுதான்.

வடக்கில் அடுத்த கட்ட பாரிய நடவடிக்கைக்கு ஆனையிறவு கூட்டுப்படைத் தளம்தான் முக்கிய பங்காற்றும். எனவே அதற்குரிய விநியோக பாதையில் அச்சுறுத்தல் ஏற்படுத்துவதுதான் நோக்கம்.

எனவே, கிடைக்கும் சந்தர்ப்பத்தை தவறவிடாமல் பயன்படுத்தவே புலிகள் நினைத்திருப்பர். அதனால் ஏவுகணைத் தாக்குதலையே மேற்கொண்டிருக்க வேண்டும் என்பது நூற்றுக்கு 95 வீதம் நம்பத்தகுந்தது.

மீதி 5 வீதம் தான் ஒலிகன் ரக பீரங்கி தாக்குதலுக்கான சாத்தியம் இருக்கலாம்.

ஒலிகன் ரக பீரங்கியால் தாக்கி இருந்தால்கூட ஹெலி உயரத்தில் பறந்த நிலையில் சூடுபட்டு வெடித்திருக்கும்.

கரையொதுங்கியுள்ள உடல்பாகங்கள் சிதைந்துள்ளன. வெடித்து சிதறியதற்கான நம்பகமான ஆதாரம் அதுதான். வெடிக்காமல் கடலில் விழுந்திருந்தால் சில உடல்களாவது முழு உடல்களாகவே கரையொதுங்கியிருக்கும்.

எனவே எம்.ஐ.17 வானில் வெடித்து கடலில் பாகங்களாக விழுந்தது மட்டும் நூறுவித உறுதி.

எம்.ஐ.17 எங்கே வைத்து தாக்கப்பட்டது? முரசுக்கு கிடைத்துள்ள தகவலின் படி பருத்தித்துறை முனையருகே வைத்துத் தான் புலிகள் தாக்கியிருக்கிறார்கள்.

ஹெலியின் பாகங்களும் அந்தக் கடற்பகுதியில்தான் விழுந்திருக்கின்றன. அதனை மக்கள் சிலரும் நேரடியாகக் கண்டிருக்கிறார்கள்.

ஆனால், படைத்தரப்பினருக்கு ஹெலி எங்கு வைத்து தாக்குதலுக்கு உள்ளானது என்பது சரியாகத் தெரியாது.

காரணம், பாதுகாப்பு காரணங்களுக்காக ஹெலி புறப்பட்ட பின்னர் அதற்கும் தரை முகாம்களுக்கும் இடையில் வானொலி தொலைத் தொடர்புகள் இருப்பதில்லை. தொடர்புகளை வைத்து விஷயமறிந்து புலிகள் தாக்கக்கூடும் என்பதால் அந்த ஏற்பாடு.

அதுதவிர கடலில் பரந்த தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடவும் கடற்கரும்புலிகளது அச்சுறுத்தல் அபாயம் ஒரு பிரதான தடை.

ஆக, எம்.ஐ.17 விவகாரம் முடிந்து போன கதைதான். புலிகளது விமானத் தாக்குதல் பட்டியலிலும், அரச தரப்பின் விமான இழப்பு பட்டியலிலும்தான் அந்த எம்.ஐ.17 பத்திரமாக இருந்து கொண்டிருக்கும்.

எம்.ஐ.17 இல் பயணம் செய்தவர்களில் சிலர் உயிரோடிருப்பதாக கூறப்படுவது அப்பட்டமான வதந்தி. நம்பாதீர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# மத்திய வங்கி குண்டு வெடிப்பு!

## ஆட்டங்கண்டுள்ள அரசியல் பொருளாதாரத் தளங்கள்

### அலசுவது – இராஜதந்திரி



இலங்கை அதன் 48 வது சுதந்திர தினத்தை பூர்த்தி செய்துள்ள தறுவாயில், இலங்கை பொருளாதாரத்தின் உயிர்நாடியாக உயர்ந்து நின்ற மத்திய வங்கி ஆட்டங்கண்டுள்ளது.

ஆச்சரியமும், அதிர்ச்சியும் ஏற்படும் வகையில்– ஜனாதிபதி மாவத்தை என்ற கொழும்பு நகரின் மையப்பகுதி சின்னாபின்னமாகியுள்ளது.

சுமார் 400 இறாத்தல்கள் எடைகொண்ட பாரிய குண்டு மத்திய வங்கியையும், அதன் சுற்றுப்புறத்தையும் படுமோசமாகப் பதம் பார்த்துவிட்டுள்ளது.

கொழும்பு நகரம் குண்டு வெடிப்புகளுக்குப் புதிதானதொன்றல்ல.

கடந்த 13 வருடகால இனப்பிரச்னை காரணமாக கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் பல்வேறுபட்ட சூழ்நிலைகளிலும் குண்டு வெடிப்புகள் இடம் பெற்றுள்ளன.

இக்குண்டு வெடிப்புகள் ஒவ்வொன்றிலும் பெருமளவு மக்கள் கொல்லப்பட்டும், காயமடைந்தும் உள்ளதுடன் கோடிக்கணக்கான ரூபாக்கள் பொருள் நஷ்டமும் ஏற்பட்டுள்ளது.

இவைதவிர இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த ரணசிங்க பிரேமதாசா உட்பட முக்கிய அரசியல் வாதிகள், மற்றும் படைத்தளபதிகள் ஆகியோரும் குண்டு வெடிப்புகளினால் கொல்லப்பட்டுள்ளனர்.

கொழும்பு நகரில் இடம் பெற்றுவரும் குண்டுத்தாக்குதல்களை அவதானிக்கும் போது ஆசியாவிலேயே அதிகளவு குண்டு வெடிப்புகள் இடம் பெற்றுள்ள ஒரு தலைநகரமாகவே கொழும்பு நகரை நோக்க முடிகின்றது.

சில மாதங்களுக்கு முன்னரே கொழும்பின் பிரதான எண்ணெய்க்குதங்கள் தாக்கியழிக்கப்பட்டிருந்தன.

இதனால் கொழும்பு நகரமே தீப்பிடித்து எரிவது போன்ற பிரமையே ஏற்பட்டிருந்தது. பல்லாயிரக்கணக்கான தொன்கள் எடை கொண்ட எரிபொருள் கருகி நாசமானதுடன், கோடிக்கணக்கான ரூபாக்களுக்கும் இதனால் நஷ்டமேற்பட்டிருந்தது.

எனவே கொழும்பின் எண்ணெய்க் குதங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பெருந்தாக்குதலின் பின்னர் நடத்தப்பட்ட ஒரு பாரிய தாக்குதலாகவே மத்திய வங்கி, சிலிங்கோ கட்டிடம் ஆகியவற்றின் மீதான தாக்குதல்கள் விளங்குகின்றன.

எல்.ரி.ரி.ஈ.யினரே இத்தாக்குதலின் சூத்திரதாரிகள் என்பது தற்போது தெளிவாகியுள்ளது.

இதன் மூலம் அவர்களது இராணுவரீதியிலான நடிவடிக்கைகள் பலவீனமடைந்துவிடவில்லை என்பதும் நிரூபணமாகியுள்ளது.

'ரிவிரெச' இராணுவ நடவடிக்கையின் வெற்றியை அரசு டிசம்பர் மாதம் கொண்டாடியிருந்தது. அமர்க்களமாக இல்லாவிட்டாலும் அமைதியாக அக்கொண்டாட்டம் விளங்கியிருந்தது.

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பமைச்சர் கேர்ணல் அனுருத்த ரத்வத்த, முப்படைத்தளபதிகள் சகிதம் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். இதனையடுத்து எல்.ரி.ரி.ஈ.யினர் முறியடிக்கப்பட்டுள்ளார்கள்; அவர்களது முதுகெலும்பு முறிக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்பமைச்சரும், அரசதரப்பினரும் குறிப்பிட்டிருந்தனர்.

கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தில் முப்படையினரும் அணிவகுத்து நின்று 'ரிவிரெச' வெற்றியை ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தனர்.

இதன் பின்னர் ஜனாதிபதி செயலகத்திலிருந்தும் அணிநடையாக படையினர் வீறு நடைபோட்டுச் சென்றனர்.

இருந்தபோதிலும், படையினர் அணிவகுத்துநின்ற ஜனாதிபதி செயலக வீதி வழியாக வந்து, கோட்டையின் ஜனாதிபதி மாவத்தையூடாகச் சென்றே கடந்தவாரம் எல்.ரி.ரி.ஈ.யினரின் தற்கொலைப்படையினர் மத்திய வங்கிக் கட்டிடத்தைத் தகர்த்துள்ளனர்

இத்தகர்ப்பின் மூலம் ஏற்பட்டுள்ள இழப்புகள் பாரதூரமானவையாக இருக்கும் அதே சமயம், கொழும்பின் எதிர்காலப்பாதுகாப்பும் கேள்விக்குறியாகியுள்ளது.

எல்.ரி.ரி.ஈ.யினர் இராணுவ ரீதியாக இருவகையான போர் முறைகளைக் கொண்டிருப்பதையே அறிய முடிகின்றது. ஒன்று மரபு வழிப்போர்முறை; மற்றையது கெரில்லாத்தாக்குதல் முறையாகும்.

மரபு வழிப்போர்முறையில் எல்.ரி.ரி.ஈ.யினர் வடக்கே பின்னடைவைக்கண்டிருந்தனர். ஆனால் அவர்களது கெரில்லாத்தாக்குதல்கள் தொடர்ந்து பலமானதாகவே இருந்து வருவதையே மத்திய வங்கி மீதான தாக்குதல் புலனாக்குகிறது.

எல்.ரி.ரி.ஈ.யினரது சிரேஷ்ட உறுப்பினரான எஸ்.கரிகாலன் கூட இருவாரங்களுக்கு முன்னர் ராய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய பேட்டியொன்றில் தமது இயக்கம் கொழும்பிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் தொடர்ச்சியாகத் தாக்குதல்களை மேற்கொள்ளும் என்று கூறியிருந்தார்.

இந்நிலையில் எல்.ரி.ரி.ஈ.யினரது பலத்தை குறைவாக எடைபோடுவதன் மூலம் ஆட்சியாளர்கள் பாதுகாப்பு விடயங்களில் தொடர்ந்து பலவற்றைக் கோட்டை விடும் சூழ்நிலைகளே தோற்றம் பெறும் என்பதே தெளிவாகியுள்ளது.

தலைநகர குண்டு வெடிப்பு மட்டுமல்ல, அதற்கு இரு தினங்களுக்கு முன்னர் புல்மோட்டைப் பகுதியில் இடம்பெற்ற எல்.ரி.ரி.ஈ.யினரது தாக்குதல் ஒன்றிலும் 20 க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டிருந்தனர்.

எனவே எல்.ரி.ரி.ஈ.யின் விடயத்தில் இராணுவரீதியாக முழு அளவில் ஆட்சியாளர்களின் கரங்கள் ஓங்கியிருப்பதாகக் கூறுவதற்கில்லை.

இதேவேளை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, கடந்தவாரம் பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் ஒரு முக்கிய மகாநாட்டில் பங்குபற்றியிருந்தார்.

இம் மகாநாட்டில் அவர் இலங்கையின் அனைத்து பௌத்தமத பீடங்களையும் சேர்ந்த பிக்குமார்களைச் சந்தித்து உரையாற்றியிருந்தார்.

அரசியல் தீர்வின் அவசியம், ஆட்சியாளர்கள் முன்வைத்துள்ள அரசியல் தீர்வு யோசனைகள் என்பவை பற்றி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பிக்குமார்கள் மத்தியில் ஒரு நீண்ட விளக்க உரையை நிகழ்த்தியிருந்தார்.

இந்த உரையில் ஜனாதிபதி சந்திரிகா ஒரு முக்கியமான விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார்:

"இன்றைய இனப்பிரச்னை நீடிக்குமானால் மேலும் ஆயிரம் பிரபாகரன்கள் உருவாகுவார்கள்" என்பதே ஜனாதிபதி குறிப்பிட்ட விடயமாக இருந்தது.

இந்நிலையில் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கமாக வெளி உலகுக்குக் காட்டிவரும், அதே சமயம், எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தலைவர் வே.பிரபாகரன் தோன்றியதற்கான காரணத்தை நியாயப்படுத்துவதாகவுமே ஜனாதிபதி சந்திரிகாவின் உரை காணப்பட்டிருந்தது.

வே.பிரபாகரனும், எல்.ரி.ரி.ஈ. இயக்கமும் தோன்றுவதற்கான மூலகாரணம் இலங்கையின் இனப்பிரச்னையே என்பதனை ஆட்சியாளர்கள் நன்கு உணர்ந்துள்ளதையும், நாட்டு மக்கள் இதனை மேலும் தெளிவாக உணரவேண்டும் என்பதிலேயே ஆட்சியாளர்கள் முனைப்பாக இருப்பதையும் ஜனாதிபதியின்–பிக்குமார்கள் மத்தியிலான உரை உணர்த்தியிருந்தது.

எனவே பிரபாகரன் என்ற நாமம், ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை இனப்பிரச்னைத்தீர்வின் தேவையை ஒரு வித அச்ச உணர்வுடன் வலியுறுத்துவதொன்றாகவே இருக்கின்றது.

இந்நிலையில் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தலைவர் வே.பிரபாகரன் பங்குபற்றாத பேச்சுவார்த்தை மூலம் நிரந்தரத் தீர்வொன்றை எட்டுவது கடினம் என்பதும் முன்பைவிட தற்போது மேலும் உறுதியாகியுள்ளது.

எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தின் இராணுவ பலம் உறுதியாக இருக்கும்வரை அந்த இயக்கத்தை நிராகரித்து அரசியல் தீர்வை நோக்கி நகர முடியாது.

அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தை என்னும்போது அப்பேச்சுக்கள் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்துடனேயே பிரதானமாக நடத்தப்படவேண்டியதும் அவசியமானதாகின்றது.

வடக்கு–கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை அரசபடைகள் ஒரு சில வெற்றிகளை ஈட்டியிருக்கலாம். ஆனால் ஒரு நிரந்தர வெற்றியைப் பெறமுடியாத தன்மையே அம்மாகாணங்களில் நிலவுகின்றது.

கடந்தவாரம் தாக்குதலுக்குள்ளான மத்திய வங்கியின் ஆளுநரான டாக்டர் ஏ.எஸ்.ஜயவர்த்தன முன்பு நிதி அமைச்சின் செயலாளராக இருந்தவர்.

அத்துடன் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் நிதி விவகாரங்களில் ஒரு முக்கிய ஆலோசகராக இருந்து வருகின்றார்.

டாக்டர் ஜயவர்த்தன பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்தபோது மத்திய வங்கியின் உதவி ஆளுநர்களில் ஒருவராக இருந்தார்.

ஐ.தே.க. வின் ஜனாதிபதியாகவிருந்த டி.பி.விஜேதுங்க பதவி விலகுமுன்னர் செய்த இறுதிப்பணியாக ஆயுதப்படையினருக்கென பெருந்தொகையான ஆயுத–தளபாடங்களை வாங்குவதற்கு அங்கீகாரமளித்திருந்தார்.

இந்த அங்கீகாரத்தையடுத்து பெருமளவிலான விமானங்கள், டாங்கிகள், ஹெலிகப்டர்கள் என்பனவற்றை ரஷ்யாவிடமிருந்து வாங்குவதற்கு கொள்வனவுக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

ஆனால் ஐ.தே.க. வின் ஜனாதிபதி ஆட்சி கவிழ்ந்ததும், ஜனாதிபதி சந்திரிகா நிதி அமைச்சர் என்ற ரீதியில் அக்கொள்வனவுக் கட்டளைகளை மறுபரிசீலனை செய்யும்படி தமது நிதி ஆலோசகர் டாக்டர் ஏ.எஸ்.ஜயவர்த்தனவுக்குப் பணிப்புரை விடுத்திருந்தார்.

இதனையடுத்து திறைசேரியிலேயே பணமில்லாத நிலையில் விடுக்கப்பட்ட அக்கொள்வனவுக் கட்டளைகள் நிராகரிக்கப்பட்டன.

ஜனாதிபதி சந்திரிகா பதவிக்கு வந்ததும் சமாதானத்தின் தேவையை பெரிதும் வலியுறுத்தியிருந்தார்.

ஆனால் தற்போது அனைத்துமே தலைகீழாக உள்ளன. ஐ.தே.க. ஆட்சியில் விடுக்கப்பட்ட ஆயுதக்கொள்வனவுக் கட்டளைகள் இன்றைய ஆட்சியில் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஆயுத தளபாடங்களும் முன்பில்லாதவாறு பெரிதும் வாங்கிக் குவிக்கப்பட்டுள்ளன.

ஆனால் இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்டுள்ளதையே மத்திய வங்கிமீதான தாக்குதல் உணர்த்தி நிற்கின்றது.

எனவே எதிர்காலத்தில் பொருளாதார ரீதியான ஸ்திரப்பாட்டைப் பேணுவதற்கும் வடக்கு–கிழக்குப்பிரச்னைக்கான தீர்வு அவசியமென்பதையே மத்திய வங்கி மீதான தாக்குதல் புலனாக்குகிறது.

இந்நிலையில் யுத்தத்தை நீடித்து பணத்தைக் கருக்குவதைவிட, பேச்சுக்களை ஆரம்பித்து அரசியல் அணுகுமுறைகளை நீடிப்பதே விடிவுக்கு வழிவகுக்கும்.

எல்.ரி.ரி.ஈ.–அரசு பேச்சுக்கள் உடன் ஆரம்பிக்கப்படவேண்டியதே அவசர தேவையாக இருக்கின்றது.

# பாகிஸ்தான் மீது திலகர் பாய்ச்சல்

## "இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் இலங்கைக்கு உதவுகிறது. எம்மிடம் ஆதாரமிருக்கிறது."



❑ **இந்தப் போரில் ஏன் உலக நாடுகள் இலங்கை அரசைக் கண்டிக்கவில்லை? ஏன் பொஸ்னியாவைப் போல் உங்கள் பிரச்சனை உலக நாடுகளைக் கவரவில்லை?**

திலகர்:– உண்மைதான். இந்தப் போரில் இலங்கை அரசின்மீது பல்வேறு நாடுகளின் அழுத்தங்கள் அதிகமாக இல்லை. இந்த அழுத்தங்கள் உருவாகினால்தான் இலங்கை அரசு பணியும். அப்படி மீறித் தலையிடும் நாடுகளை இலங்கை அரசு திசை திருப்பி விடுகிறது. வெளிநாட்டு மத்தியஸ்தம் வராமல் பார்த்துக் கொள்கிறது. ஆனால், இப்போது நிலமை மாறி விட்டது. ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச அமைப்புக்கள் இனப் படுகொலையைக் கண்டிக்கத் தொடங்கி உள்ளன. ஆனால், இலங்கைமீது போதிய அழுத்தம் இல்லை. அதே சமயம் மற்ற நாடுகள் இதை ஒரு உள்நாட்டுப் போராகத்தான் கருதுகின்றன. இனப்படுகொலை என்பது சர்வதேச விஷயம்.

❑ **ராஜீவ் கொலைக்குப் பிறகுதான் சர்வதேச நாடுகள் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாகப் பார்க்கத் தொடங்கியதாகக் கூறலாமா?**

திலகர்:– ராஜீவ் கொலை என்பது விடுதலைப் புலிகள் மீது போடப்பட்ட திட்டமிட்ட பழியாகும். சட்டரீதியாக இதற்கு நீதி கிடைப்பதற்கு முன்னர், குற்றவாளிகளாகச் சித்தரிக்கப்படுகிறோம். அரசியல் நோக்கங்களுக்காக இந்தியாவில் எங்கள் மீது போடப்பட்ட குற்றச்சாட்டு இது. இந்தக் குற்றச்சாட்டு எங்களை சர்வதேச அளவில் பாதிப்பது உண்மை. ஆனால் அந்த தாக்கங்கள் இப்போது குறைந்து வருகின்றன.

❑ **அப்படியென்றால் விடுதலைப் புலிகள் ராஜீவைக் கொல்லவில்லை என்று கூறுகிறீர்களா?**

திலகர்:– ராஜீவ் கொலைக்கும் எங்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்ற– மறைக்கப்பட்ட உண்மை வெளிவரும் நாள் நெருங்கி வருகிறது. ராஜீவ் மரணத்திற்கு முன்பு லண்டனிலிருந்து கிட்டு, தமிழகத்திலிருந்து கவிஞர் காசி ஆனந்தன் போன்றோர் சென்று ராஜீவைப் பார்த்தார்கள். அந்த நல்ல உறவில் நாங்கள் அந்தச் சமயத்தில் குறை காணவில்லை. பிரதமராக அவர் எங்களை எதிர்த்திருக்கலாம். சர்வதேச ரீதியாக விடுதலைப்புலிகளை ஓரம்கட்ட சில வெளிநாட்டு சக்திகளும், இந்திய அரசியல் வாதிகளும் செய்த திட்டமிட்ட சதிதான் ராஜீவ் கொலை.

❑ **அப்படியென்றால் ராஜீவ் காந்தியை கொன்றது யார்?**

திலகர்:– உங்களுக்குத் தெரியாதா? இந்தியாவில் ராஜீவுக்கு எதிராக பல்வேறு சக்திகள் இருந்தன. அவரது மரணத்தால் லாபமடையக் கூடிய அவர் கட்சியினர்... இந்தியாவை பலவீனப்படுத்த நினைக்கும் வெளிநாட்டுச் சக்திகள்... ஏன் காங்கிரஸ்காரர்கள் சில ஈழத் தமிழர்களை வைத்து ராஜீவைக் கொன்றிருக்கக்கூடாது? சோனியா காந்தியின் கேள்விகளுக்கு முதலில் காங்கிரஸ் தலைவர்கள் பதில் சொல்லட்டும்.

❑ **இந்தப் போரில் பாகிஸ்தான் அரசு இலங்கை இராணுவத்தை ஆதரிப்பதாகக் கூறப்படுவது உண்மையா?**

திலகர்:– உண்மைதான்; பாகிஸ்தான் அரசு ஆயுதங்களை இலங்கைக்கு கொடுத்து வருகிறது. இவை இந்தியாவுக்கு எதிரான செயல்களே? தென்பிராந்தியத்தில் இலங்கை அரசை இந்தியாவுக்கு எதிரான ஒரு சக்தியாக மாற்ற பாகிஸ்தான் துடிக்கிறது. அதற்கான ஆதாரங்கள் எங்களிடமுள்ளன.

***ஜுனியர் விகடனுக்கு புலிகளது பிரமுகர் திலகர் பாரிசிலிருந்து அளித்த பேட்டியில் இருந்து.......***



படிப்பகம்

www.padippakam.com

# நகரும் மலை



ஜப்பானின் வீரவிளையாட்டான சுமோ மல்யுத்தத்தில் 'கிராண்ட் சாம்பியன்' பட்டம் வென்றவர் அகிபோனா.

மூக்குமுட்ட ஒரு பிடி பிடிக்கும் அகிபோனா சமையல் விஷயத்திலும் படுகில்லாடி. சமையல் அறையில் தீவிரமாக இருக்கிறார் அகிபோனா, (கையில் பெரிய சுத்தியல் போல் ஒன்று வைத்திருக்கிறாரே. அவர்தான்)–

அகிபோனாவை பெண் இரசிகைகள் துரத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அவரது உடலைத் தொட்டுப்பார்ப்பதில் அவர்களுக்கு அலாதிப்பிரியமாம். பாவம், அகிபோனா கூச்சத்தில் நெளிந்து போவாராம். அதனால் பெண்களைக் கண்டாலே மலை அசைந்து நகரத் தொடங்கிவிடுகிறது.

# கொஞ்சம் சாகசம் + கொஞ்சம் காதல் = 007

ஜேம்ஸ் பொண்ட் 007 படங்கள் என்றால் சிறுவர் முதல் பெரியோர்வரை விரும்பிப் பார்ப்பார்கள்.

கடந்த மூன்று தலைமுறையாக ஜேம்ஸ் பொண்ட் படங்கள் சக்கை போடு போடுகின்றன.

சமீபத்தில் வெளியாகியுள்ள ஜேம்ஸ் பொண்ட் 007 படம் 'கோல்டன் ஐ'. புதிய ஜேம்ஸ் பொண்டாக அறிமுகமாகியிருக்கிறார் பியர்ஸ் பிராஸ்னன்.



இசபெல்லாவோடு 007

கடந்த பத்துவருடங்களாக ஜேம்ஸ் பொண்ட் படங்கள் வெளிவரவில்லை. ஜேம்ஸ் பொண்டாக நடித்தவர்களில் சீன் கொனரியும், ரோஜர் மூரும்தான் இரசிகர்களின் அபிமானம் பெற்றிருந்தார்கள்.

அதேயளவு அபிமானத்தை பியர்ஸ் பிராஸ்னன் இப்போது பெற்றுவிட்டார். உலகெங்கும் வசூல் மழை பொழிந்து கொண்டிருக்கிறது 'கோல்டன் ஐ'.

பியர்ஸ் பிராஸ்னன் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். இதற்கு முன்னர் 'மிஸஸ் டவுட் பயர்', 'தி டிஸீவர்ஸ்' போன்ற படங்களிலும், 'ரெமிங்டன் ஸ்டீலி' என்ற புகழ்பெற்ற தொலைக்காட்சித் தொடரிலும் நடித்திருக்கிறார்.

'கோல்டன் ஐ' படத்தின் வில்லியாக நடித்திருக்கிறார் கவர்ச்சி நடிகை இசபெல்லா. ஜேம்ஸ் பொண்ட் 007ஐ மயக்க தன் கட்டான உடலை உபயோகப்படுத்திக் கொள்கிறார். இரசிகர்களை சூடாக்கும் காட்சிகளுக்கும் ஜேம்ஸ் பொண்ட் படங்களில் பஞ்சமிருப்பதில்லை.

புதிய ஜேம்ஸ் பொண்ட 007 சீன் கொனரியையும், ரோஜர் மூரையும் சாயலில் நினைவூட்டுகிறார். கட்டான உடல். துடிப்பான நடிப்பு.

இயான் பிளாமிங் என்ற எழுத்தாளரின் கற்பனைதான் ஜெம்ஸ் பொண்ட் பாத்திரம். அந்த எழுத்தாளரின் வீடு ஜமைக்காவில் இருக்கிறது. வீட்டின் பெயர் 'கோல்டன் ஐ'. அவரது நினைவாக படத்திற்கும் 'கோல்டன் ஐ' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

கோல்டன் ஐ யோடு சேர்ந்து இதுவரை 17 ஜேம்ஸ் பொண்ட் படங்கள் வந்துவிட்டன.

அமெரிக்க உளவுத்துறையைப் பற்றி பெருமையாக கூறும் படங்கள் என்பதால் முன்னர் ரசியாவில் தடை இருந்தது. தற்போது தடை இல்லை. 'கோல்டன் ஐ' ரசியாவிலும் திரையிடப்பட்டுள்ளது.

கொஞ்சம் வீரசாகசம், கொஞ்சம் காதல் சாகசம் இரண்டும் கலந்தால் ஜேம்ஸ் பொண்ட் 007.

# அதனால் கண்களுக்கு.....

தாம்பத்திய உறவில் ஈடுபடும்போது இரத்த ஓட்டம் அளவுக்கு அதிகமாக இருக்கும். அந்த இரத்த ஓட்டம் கண்களில்தான் அதிகமாக இருக்குமாம்.

எனவே, தாம்பத்திய உறவின் போது கண்பார்வை பாதிக்கப்படலாம் என்று பிட்பர்க் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.



உடனே பயந்து விடாதீர்கள்! அப்படி நடப்பது மிக மிக அரிதான விஷயமாம்.

இன்னொரு எச்சரிக்கை– கொழுப்பு சத்து நிறைந்த உணவுப் பொருட்கள் 'அந்த' உணர்வுகளை கட்டுப்படுத்துகிறதாம். இதுவும் ஒரு ஆராய்ச்சி முடிவுதான். எனவே கொழுப்பு சத்துள்ள உணவுப்பொருட்களை குறைத்துக் கொள்வது மிக நல்லது.

### இரத்த அழுத்தமா?

உங்களுக்கு இரத்த அழுத்தம் அதிகமாக இருக்கிறதா? கவலைப் படாதீர்கள். 1 1/2 மாதத்திற்கு தினமும் தோடம்பழ ஜூஸ் குடித்து வாருங்கள்.

தோடம்பழத்தில் உள்ள உப்புச் சத்து இரத்த அழுத்தத்தை குறைக்க உதவுகிறது.

# நீ வேறு... நான் வேறு

## ஒரு வருடத்தில் முறிந்த உறவு

பொப்பிசைப் புயல் மைக்கேல் ஜாக்சனுக்கு கடந்த வருடம் ராசியான ஆண்டு. லிசா மேரி என்ற பெண்ணை காதலித்து கைபிடித்தார்.

முதலில் காதலை பத்திரமாக மூடி வைத்திருந்தார்கள். பத்திரிகைகள் மோப்பம் பிடித்து செய்திக்கு மேல் செய்தி போட்டதால் இறுதியில் உண்மையை ஒப்புக்கொண்டார்கள்.

லிசா மேரியின் தந்தை பிரஸ்லியும் ஒரு பொப்பிசைப் பாடகர்தான்.

மைக்கேல் ஜாக்சன் ஓரினச் சேர்க்கையில் விருப்பம் உள்ளவர் என்ற சர்ச்சை கிளம்பிய பின்னர்தான் லிசா மேரி ஜாக்சனை காதலித்தார். பின்னர் வாழ்க்கைத் துணைவியானார்.

"அவர் ஓரினச் சேர்க்கையாளரல்ல; நாங்கள் சந்தோசமாக இருக்கிறோம். தினமும் ஒரே கட்டிலில்தான் தூங்குகிறோம்" என்றெல்லாம் லிசா மேரி பேட்டியளித்தார்.

இதெல்லாம் கடந்த வருடம் நடந்த கதை. இந்த வருட ஆரம்பத்திலேயே கதை மாறிவிட்டது.

"மைக்கேல் ஜாக்சனிடம் இருந்து விவாகரத்து வேண்டும். சமரசமே கிடையாது" என்று அறிவித்துவிட்டார் லிசா மேரி.

அப்படி என்னதான் பிரச்சனை? சுவாரசியமான சங்கதிகளை அமெரிக்க பத்திரிகைகள் வெளியிட்டு வருகின்றன.

மைக்கேல் ஜாக்சன் தனது பழைய தொடர்புகளையும், பழக்கங்களையும் மாற்றிக் கொள்ளவில்லை. லிசாவுக்கு வெறுத்துப் போய்விட்டது.

ஒருவருடம் பொறுத்துப் பார்த்தார்.



இறுதியில் பொங்கி எழுந்துவிட்டார் என்றெல்லாம் சொல்லப்படுகிறது.

எப்படியோ உலகின் பிரபல நட்சத்திர தம்பதிக்குள் விரிசல் வந்துவிட்டது மட்டும் உண்மை.

# மனித 21 வெடிகுண்டு

எண்ணெய் வளநாடுகளது மாநாடான ஒபேக் மாநாட்டில் புகுந்த கார்லோஸ் குழுவினர் முக்கிய அமைச்சர்கள் உட்பட 70 பேரை பணயக்கைதிகளாகப் பிடித்தனர். ஒஸ்ரியாவின் தலைநகரான வியன்னாவில் பணய நாடகம் அரங்கேறியது. கார்லோஸ் குழுவினரின் கோரிக்கைக்கு ஒஸ்ரியா பணிந்தது. விமானம் வழங்கியது. விமானத்தில் அமைச்சர்கள்–பிரதிநிதிகள் உட்பட 35 பேருடன் கார்லோஸ் புறப்பட்டான். அல்ஜீரியா மட்டுமே விமானத்தை தரையிறக்க அனுமதித்தது.

சவுதி அரேபியா–ஈரான் எண்ணெய்வள அமைச்சர்களை தீர்த்துக்கட்டிவிட்டு ஏனையோரை விடுவிப்பதுதான் கார்லோஸுக்கு இடப்பட்ட உத்தரவு. உத்தரவிட்டவரும், பணய நாடகத்தின் சூத்திரதாரியும் ஈராக் உப அதிபர் சதாம் ஹூசைன். (இன்றைய அதிபர்)

பாலஸ்தீன விடுதலைக்காகப் போராடும் பாலஸ்தீன மக்கள் முன்னணியின் உறுப்பினரான கார்லோஸ், அதன் தளபதி வாடி ஹாட்டாட் திட்டத்தை முடித்தால் பெருந்தொகைப் பணம் தருவதாக வாக்குறுதி கொடுத்திருந்தார் சதாம் ஹூசைன்.

இனி..



கார்லோசின் காதலி அஞ்சலா

# கட்டம் இரண்டும் காட்டிக் கொடுப்பும்

அல்ஜீரியாவில் – அல்ஜியர்சில் விமான நிலையத்தை பரபரப்பு தொற்றிக்கொண்டது.

அல்ஜீரியா அதிபர் அடிக்கடி விமான நிலையத்துடன் தொடர்பு கொண்டு 'விமானம் வந்துவிட்டதா?' என்று கேட்டுக்கொண்டிருந்தார்.

சகல எண்ணெய் வளநாடுகளும் அல்ஜீரியா அதிபருடன் தொடர்பு கொண்டு "எங்கள் அமைச்சர்களையும், பிரதிநிதிகளையும் பத்திரமாக மீட்டுத் தாருங்கள்" என்று கேட்டுக்கொண்டிருந்தன.

விமானம் தரையிறங்கியது. கார்லோஸ் கம்பீரமாக எழுந்தான்.

பணயக்கைதிகளை புன்னகையோடு நோக்கினான். அனைவருமே மிகவும் களைத்துப் போயிருந்தனர். கார்லோஸுக்கு பதில் புன்னகை வழங்க மிக்க சிரமப்பட்டனர்.

கார்லோஸ் தனது இடுப்பிலிருந்து பிஸ்டலை எடுத்து, சவுதி அரேபியா எண்ணெய்வள அமைச்சர் யமானியை குறிபார்த்தான்.

அமைச்சர்கள் முகங்களில் சட்டென்று இருள் ஒட்டிக்கொண்டது. யமானி தனது இரு கைகளையும் மேலே உயர்த்திக் கொண்டார்.

கார்லோஸ் சத்தம் போட்டு சிரித்துவிட்டு பிஸ்டலை தாழ்த்தினான். "குரோச்சியா இதைப்பிடி" கொடுத்தான். வாங்கினாள்.

அல்ஜீரியா அதிபர் விமான நிலையத்தில் காத்திருப்பார் என்று கார்லோஸுக்கு முதலிலேயே ஊகம் இருந்தது.

அவரைச் சந்திக்கும்போது ஆயுதம் இருப்பது முறையல்ல என்பதால்தான் குரோச்சியாவிடம் கொடுத்துவிட்டு புறப்பட்டான்.

புறப்படும்போது பணயக்கைதியாக இருந்த அல்ஜீரியா அமைச்சரை தன்னோடு அழைத்தான்.

"இனி.. இந்த நிமிடம் முதல் நீங்கள் சுதந்திரப் பறவை! விமான நிலையத்தில் அதிபர் காத்திருப்பார். கைகுலுக்கிவிட்டு வீட்டுக்கு செல்லலாம். அங்கு மனைவி காத்திருப்பாள். ஜமாயுங்கள்!" என்று சிரித்தான்.

"நன்றி கார்லோஸ் நன்றி. ஒரு ஆசை!"

"என்னைக் கொல்ல வேண்டும் என்றா?"

"சே..ச்..சே. உன்னிடமிருந்து ஒரு நினைவுப்பரிசு வேண்டும் எனக்கு. பிரியும்போது நினைவுப்பரிசு வேண்டுமல்லவா?"

கார்லோஸ் யோசித்தான். 'என்ன கொடுக்கலாம். என்னிடம் எதுவுமில்லையே...'

"குரோச்சியா அந்த பிஸ்டலைத்தா!"

அல்ஜீரியா அமைச்சர் கொஞ்சம் பயந்தார். 'நினைவுப் பரிசை கேட்காமல் இருந்திருக்கலாமோ?'

கார்லோஸ் பிஸ்டலில் இருந்து மகசீன் கழற்றி அதிலிருந்த இரண்டு தோட்டாக்களை




கார்லோசின் போலிக்கடவுச் சீட்டுக்களில் ஒன்று

உருவினான். அல்ஜீரியா அமைச்சரிடம் கொடுத்தான். அவர் மலர்ந்தார்.

"ஒருவேளை இது எனக்குப் பயன்படுத்தப்பட்டிருக்குமோ?" தமாஷாகக் கேட்டார்.

"இல்லை. அப்படி ஒரு அவசியம் நேர்ந்திருந்தால்கூட இறுதியாக-மிகக் கவலையோடுதான் உங்களைச் சுட்டிருப்போம்" என்றான். இருவரும் புறப்பட்டார்கள்.

புறப்படும் முன்பாக, அல்ஜீரியா அமைச்சரின் காதில் விழும்படியாக குரோச்சியாவிடம் கார்லோஸ்:

"குரோச்சியா! சரியாக ஒரு மணிநேரத்தில் நான் திரும்பிவராவிட்டால் விமானத்தை தகர்த்துவிடு!"

விமானநிலையத்தில் அல்ஜீரியா அதிபர் கார்லோஸை கட்டியணைத்து வரவேற்றார். பணயக்கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

"லிபியாவில் திரிபொலி விமான நிலையத்தில் வைத்துத்தான் முக்கிய அமைச்சர்கள் விடுவிக்கப்படுவார்கள். முடிவில் மாற்றமில்லை. மன்னித்துக் கொள்ளுங்கள்," என்றுவிட்டான் கார்லோஸ்.

நடுநிலை நாடுகள் என்று கருதப்பட்ட நாடுகளது அமைச்சர்கள் சிலரையும், பிரதிநிதிகளையும் மட்டும் கார்லோஸ் விடுவித்தான்.

எப்படியாவது பணய நாடகத்தின் பழியை லிபியாமீது போடுவதுதான் கார்லோஸின் திட்டம்.

விமானம் மீண்டும் புறப்பட்டது.

கடாபி கொதித்தார். "அனுமதி கொடுப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை" என்றுவிட்டார்.

லிபிய அமைச்சர் மூலமாக லிபிய பிரதமரோடு தொடர்புகொண்டான் கார்லோஸ்.

இரவு 7.10 க்கு திரிப்பொலி விமானநிலை ஓடு பாதையில் விமானம் முத்தமிட்டது.

பணயக்கைதிகளுக்கு தூக்கமில்லாத இரண்டாவது இரவு. கார்லோஸ் குழுவினர் தாம் தூங்கி விடாமலிருக்க மாத்திரைகளை அடிக்கடி விழுங்கிக் கொண்டிருந்தனர்.

திரிப்பொலி விமானநிலைய அதிகாரிகள் கார்லோஸிடம் வந்தனர்.

"மன்னிக்க வேண்டும் கார்லோஸ். லிபியா மண்ணில் உங்கள் காலடி படக்கூடாது என்பது அதிபர் கடாபியின் உறுதியான கட்டளை!"

கார்லோஸ் கோபப்பட்டான். கார்லோஸ், தான் அவமதிக்கப்படுவதாகக் கவலைப்பட்டான். லிபியா அசைந்து கொடுக்கவில்லை.


திரிப்பொலியில் வைத்து மேலும் சிலரை கார்லோஸ் விடுவித்தான். இப்போது சவுதி, ஈரான் அமைச்சர்கள் உட்பட 10 பேர் மட்டுமே பணயக்கைதிகளாக இருந்தனர்.

ரியூனிச் விமானநிலையத்தில் தரையிறங்குமாறு கார்லோஸ் கட்டளையிட்டான்.

விமானி தொடர்பு கொண்டு கேட்க, அனுமதி மறுக்கப்பட்டது.

கார்லோஸ் மிக அதிகமாகக் கோபப்பட்டான்.

"விமானம் இறங்கட்டும். என்ன செய்



கார்லோஸ்–ஃபிரான்ஸ் உளவுத்துறையால் இரகசியமாக எடுக்கப்பட்ட படம்.

கிறார்கள் என்று பார்த்துவிடலாம்." என்று கிட்டத்தட்டக் கத்தினான்.

விமானி பயந்து போனார்.

பயந்துபோன விமானி ஓடுபாதையை தேடினார்; அதனைக் காணவில்லை.

விமானம் கட்டாயமாக தரையிறக்கப்படலாம் என்று தெரிந்து, ஓடுபாதை வெளிச்சங்களை சுத்தமாக அணைத்துவிட்டார்கள்.

வேறுவழியே இல்லை. மீண்டும் அல்ஜீரியாவுக்கு திரும்பிச்செல்ல உத்தரவிட்டான் கார்லோஸ்.

அல்ஜீரியா விமானநிலையத்துக்குள் மீண்டும் அடிவழுத்துச் செல்லப்பட்டான் கார்லோஸ்.

கார்லோஸால் விடுவிக்கப்பட்ட அல்ஜீரிய அமைச்சர் உட்பட பல அதிகாரிகள் கார்லோஸை சூழ்ந்து கொண்டனர். கை குலுக்கினர்.

தனியொரு அறைக்கு கார்லோஸை அழைத்துச் சென்றார் அல்ஜீரியா அமைச்சர்.

சுமார் அரைமணிநேரம் மூடிய அறைக்குள் வாதப் பிரதிவாதங்கள் நடந்தன.

கார்லோஸ் சூடாக மாறினான்; கார்லோஸ் குழம்பினான்; கார்லோஸ் மீண்டும் சூடானான். கார்லோஸ் மீண்டும் குழம்பினான்; கார்லோஸ் இறுதியில் குளிர்ந்தான்.

அந்த அறையில் இருந்த தொலைபேசி எடுத்து, அல்ஜீரியா அமைச்சர் தனது அதிபரிடம் சொன்னார்;

"இரண்டு அமைச்சர்களை விடுவிப்பதில் தான் சிக்கல்! ஒருவர் சவுதி அமைச்சர்; இன்னொருவர் ஈரான் அமைச்சர்."

"......."

"ஆம். அதிக விலைதான். இருவருக்கும் தலா ஒரு கோடி டொலர் வேண்டுமாம். பணத்தை கார்லோஸ் தனக்கு கிடைக்கும் படியாக அல்ஜீரியா வங்கியில் போடவேண்டுமாம்."

"............"

மறுமுனையில் அதிபர் ஏதோ சொல்ல;

"காத்திருக்கிறோம்..... சொல்கிறேன்!"

பேசிமுடித்துவிட்டு கார்லோஸ் பக்கம் திரும்பி; "பதில் வரும். ஒரு கோடி டொலர் சவுதிக்கும் பிரச்சனையில்லை. ஈரானுக்கும் பிரச்சனையில்லை. சம்மதிப்பார்கள். கார்லோஸ் நீ திரும்பிச் சென்றால் உன்னவர்களால் ஆபத்து வரலாம் என்றால் இங்கேயே தங்கலாம்! தனியான ஆடம்பர பங்களா ஒன்றை உனக்கு பரிசாகத் தரலாம் என்று அதிபர் சொல்கிறார்."

"நன்றி! அப்படியொரு பிரச்சனையும் வராது. கார்லோஸின் சேவை தளபதி வாடி ஹாட்டாட்டுக்கு தேவை."

"கார்லோஸ் நீ புத்திசாலியான அழகான கம்பீர இளைஞன். எனக்கொரு மகள் இருந்தால் என்ன கேட்டிருப்பேன் தெரியுமா?"

"என்ன கேட்டிருப்பீர்கள்?"

"அவளை மணந்துகொள்கிறாயா என்று!"

கார்லோஸ் புன்சிரித்தான். அதிபரிடமிருந்து போன் வந்தது.

## ரசிகன்

"இருநாடுகளும் தலா ஒரு கோடி டொலர் கொடுக்க சம்மதம்."

விமானத்திற்கு திரும்பிச் சென்று தனது குழுவினரோடு பேசினான் கார்லோஸ்.

"வேறு வழியே இல்லை. நாம் இங்கிருந்து தப்ப வேண்டுமானால் பணயக்கைதிகளை விடுவித்தேயாக வேண்டும்."

குரோச்சியாதான் வெடித்தாள்.

"கூடாது. இவர்கள் இருவரையும் என்கையால் நானே கொல்லுவேன். கார்லோஸ் நீ பயந்துவிட்டாய்! நம் உயிர் முக்கியம் என்றால் நாம் இதில் ஏன் இறங்கினோம்? திரும்பிச் செல்வோம் என்று நம்பியா வந்தோம்? நம் முடிவு எப்படியானாலும், இவர்கள் முடிவு சாவுதான்! நான் உன் முடிவை ஏற்க மாட்டேன்!"

கார்லோஸ் சினந்தான்.

"நான்தான் பொறுப்பாளர். நான் எடுக்கும் முடிவு சரியோ, தவறோ முதலில் கட்டுப்படவேண்டியது குழுவின் கடமை. அதுதான் தளபதி வாடி ஹாட்டாட்டின் உத்தரவு. நடவடிக்கை முடிந்த பின் உங்கள் கருத்துக்களை தளபதிக்கு சொல்லுங்கள்."

கட்டுப்பட்டாள். கட்டுப்பட்டார்கள். அமைச்சர்களிடம் சென்றான் கார்லோஸ்.

"இன்று நண்பகலோடு நீங்கள் சுதந்திரப் பறவைகள்!" என்றான். நம்ப முடியாமல் பார்த்தார்கள். களைப்பை மறந்து முதல் தடவையாக மனதாரப் புன்னகைத்தார்கள்.

பணயக்கைதிகள் அனைவரும் விமானத்திலிருந்து இறங்கிக்கொண்டிருக்க,

சவுதி அரேபிய அமைச்சர் யமானி அருகே சென்ற குரோச்சியா; "தப்பிவிட்டதாக நினைக்காதே! விரைவில் உன்கதை முடியும்." என்றாள்.

விமான நிலைய வரவேற்பறையில் அல்ஜீரிய அமைச்சர் விடுதலையாகிவரும் அமைச்சர்களை வரவேற்க காத்திருந்தார். கையில் பூங்கொத்து வைத்திருந்தார்.

**கார்லோஸின் கதை இத்தோடு முடியவில்லை. பயங்கர சாகசங்கள் நிறைந்த சம்பவங்கள் இன்னமும் இருக்கின்றன. அவற்றை சில வாரங்கள் கழித்து மீண்டும் சொல்ல ஆசை. அதுவரை இடைவேளை விடப்படுகிறது.**

(தற்காலிகமாக முற்றும்)



படிப்பகம்

www.padippakam.com

# உலகக் கோப்பை வயசு 114



வில்ஸ் ஏழாவது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் வெல்லும் அணிக்கு 114 ஆண்டு பழமையான கோப்பை வழங்கப்பட உள்ளது. பிரித்தானிய அரச குடும்பத்துக்கு நகை செய்து வழங்கும் ஜெராட் அண்ட் கொம்பனி 1882 இல் உருவாக்கிய கோப்பை இது. இதுவரை பயன்படுத்தப்படாமல் இருந்த இதனை 'உலகக்கோப்பை அமைப்புக்குழு' வாங்கியுள்ளது. இரண்டேகால் அடி உயரமான வெள்ளியிலான கோப்பை இது. இதனைக் கைப்பற்றுவதற்குத்தான் போட்டி. மார்ச் 17ம் திகதிதான் இது யாரிடம் செல்லப்போகிறது என்று தெரியப்போகிறது. அன்றுதானே பாகிஸ்தானில் லாகூரில் கிரிக்கெட் உலகக் கிண்ண இறுதிப் போட்டி. அபாரமாய் ஆடும் அணியின்கரத்தில் இந்த வெள்ளிக் கிண்ணம் தாவிச் செல்லும். ●

# மாறும் காலங்களும் மாறாத கோலங்களும்

யுத்தம் எப்படியிருக்கும்? வரலாறு மிகத் தெளிவாக நான் சொல்வதெல்லாம் சத்தியம் என்ற உறுதியோடு சாட்சி சொல்லியிருக்கிறது. அதனை நினைவில் வைத்திருக்கத் தவறியதால் நமது நாடும் அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

படத்தில் இருப்பது ஜெர்மன் நாட்டில் 'ஹம் போர்க்' நகரில் இடம் பெற்ற குண்டுத்தாக்குதல். வானை முத்தமிடும் கட்டிடத் தொகுதி பற்றி எரிந்து கரைய, புகைமுட்டம் வானைத் தழுவுகிறது.

ஜெர்மன் படைகள் சோவியத் யூனியனுக்குள் புகுந்து தாக்கின. ஒரு கட்டத்தின் பின்னர் சோவியத் யூனியனும் நேசநாடுகளும் ஜெர்மன்மீது திருப்பியடிக்கத் தொடங்கின. அவ்வாறு திருப்பியடித்ததில் தாக்கப்பட்ட கட்டிடமே எரிந்து கொண்டிருக்கிறது.

காலங்கள் மாறலாம், யுத்தத்தின் கோலங்கள் மாறுவதில்லை. ஒப்புக்கொள்கிறீர்களா?



பெண்கள் ஆயுதம் ஏந்துவது நம்நாட்டில் சமீபகால ஆச்சரியம். தற்போது சர்வசாதாரணம். இராணுவத்திலும் பெண்கள் உண்டு. புலிகள் இயக்கத்திலும் பெண்கள் அணி பிரதான இடத்தில் இருக்கிறது.

ஆனால் கிட்டத்தட்ட 10 வருடங்களுக்கு முன்னர் பெண்கள் அகப்பை பிடிக்கத்தான் இலாயக்கு என்று நம்நாட்டில் பலர் நம்பிக்கொண்டிருந்தார்கள். காரணம் வரலாறு நமக்குத் தெரியவில்லை. நமது சின்ன சன்னல்கள் மூலம் வெளியுலக மாற்றங்கள் வந்து சேரவில்லை.

படத்தில் பாருங்கள். வீராங்கனைகள் அத்தனைபேரும் முஸ்லிம் பெண்கள். இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டது நேற்று, இன்றல்ல. 1954ம் ஆண்டில்! பிரான்ஸ் ஆதிக்கத்தை எதிர்த்து அல்ஜீரியா மூர்க்கமாகப் போராடியது. தேசிய விடுதலை முன்னணி (FLN) என்னும் இயக்கத்தின் போராளிகள்தான் இவர்கள். கனவு கைப்பட்டு அல்ஜீரியா சுதந்திரம் பெற்றது 1962 இல். ●

# அன்றே- அங்கேயே! முன்னணியில் பெண்கள் அணி



# வயசு 118 காத்திருக்கிறார் கல்லறை அருகே

சின்ன சின்ன ஆசை. எல்லோருக்கும்தான் இருக்கிறது.

தமிழ் நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த ஏசுதாசன் என்பவருக்கும் சின்ன சின்ன ஆசை இருக்கிறது.

அது என்ன ஆசை என்று அறிவதற்கு முன்னர் ஏசுதாசன் பற்றி ஒரு சுருக்கமான அறிமுகம். அவர் பிறந்தது 30 மார்ச் 1877. தொழில், விவசாயம். மனைவி பெயர் ஆனி. இருவரும் இணைந்து 6 குழந்தைகளை சனத்தொகை கணக்கில் வரவு வைத்தனர். ஆனி 20 வருடங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார். ஏசுதாசன் கொள்ளுப்பேரன் வரை நான்கு தலைமுறைகளைக் கண்டு பூரித்துக் கொண்டிருக்கிறார். இப்போது வயது 118.

இனி அவரது ஆசைக்கு வருவோம். யாரோ ஒரு ஜோசியர் ஏசுதாசனிடம் உங்களுக்கு விரைவில் ஒரு திருப்பம் வரும் என்று சொல்லிவிட்டாராம். அந்த திருப்பம் தனது மரணமாகத்தான் இருக்கும் என்று நினைத்து ஏசுதாசன் மளமளவென்று கல்லறை ஒன்று கட்டிமுடித்து விட்டார்.

கல்லறை கட்டியது 16 வருடங்களுக்கு முன்பு. ஆனால் இன்றுவரை ஏசுதாசனை மரணதேவன் திரும்பியும் பார்க்கவில்லை. (ஜோசியரை தாராளமாக உதைக்கலாம்)

கல்லறையில் தனது பெயர், முகவரி, பிறந்த ஆண்டு அனைத்தையும் எழுதிவைத்துவிட்டு காதலியை எதிர்பார்க்கும் சுவாரசியத்தோடு காத்திருக்கிறார் 118 வயது இளைஞர்.

118வயது ஏசுதாசனின் பொழுது போக்குகள்; கொள்ளுப் பேரன்களோடு விளையாடுவது, நாட்டு நடப்புக்களை அறிந்து அலசுவது, தனது கடமைகளை தானே செய்வது, கல்லறைக்கு அருகே தினமும் சில மணிநேரங்கள் காற்றாட அமர்ந்திருப்பது. தில்லாடி கிழ வாலிபன்தான்! ●



# ←வரலாறு மறக்காத படுகொலை வேட்டை

## இலட்சோப இலட்சமாய் குவிந்த பிணங்கள்



இரண்டாம் உலக யுத்தத்தில் ஜெர்மனியில் ஹிட்லரின் படைகள் யூதர்களை கொன்று குவித்தன என்பது தெரிந்த செய்திதான். ஆனால் அந்த காலகட்டத்தில் நடைபெற்ற மனித வேட்டையின் ஒவ்வொரு கட்டத்தையும் அறிந்தால் நெஞ்சு அதிரும். சோவியத் யூனியனுக்குள் புகுந்த ஹிட்லரின் படைகள் யூதர்களை மூலை முடுக்கெல்லாம் தேடியலைந்தன. தேடியழித்தன. எஸ்.எஸ். என்னும் விசேடபடைப்பிரிவு கொலை வேட்டைக்காக என்றே அமைக்கப்பட்டிருந்தது.

சோவியத் யூனியனில் மட்டும் எஸ்.எஸ் படையால் கொல்லப்பட்ட யூதர்களது எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? ஏழரை லட்சம்!

புகைப்படத்தில் இருப்பது ஹிட்லரின் எஸ்.எஸ் படைப்பிரிவு செய்த படுகொலை வேட்டையில் ஒரு கட்டம். இவ்வாறு கொல்லப்பட்டு குழிகளில் போடப்பட்ட யூதர்களது எண்ணிக்கை எவ்வளவு என்று நினைக்கிறீர்கள்? 33 ஆயிரம் பேர்.

குரூர ரசனையோடு தமது கொலை வெறி வேட்டையை புகைப்படம் எடுத்து வைத்திருக்கிறார்கள். அதனால் வரலாறு காறிஉமிழ வசதியாக இருக்கிறது.

அடுத்ததாக கொல்லப்பட இருக்கும் அந்த மனிதனின் மனநிலை எப்படி இருந்திருக்கும்? நினைத்துப்பாருங்கள்.


படிப்பகம்

# சினிவிசிட்

## நெருக்கடியில் ரேவதி

தமிழ் படவுலகில் குடும்பப் பாங்கான நடிகைகள் பட்டியலில் நிரந்தர இ
பிடித்திருப்பவர் ரேவதி. இப்போது ரேவதியின் குடும்பத்திற்குள் விரிசல் தோன்றியிருக்கிற
கணவர் சுரேஸ் மேனன் ரேவதி தொடர்ந்து நடிப்பதை விரும்பவில்லையாம்.

கார்த்திக்கும்-ரேவதியும் முன்பு இணைத்துப் பேசப்பட்டவர்கள். பின்னர் நடிகரும் தயாரிப்பாளருமான பாலாஜியின் மகன் சுரேஸ் பாலாஜியை ரேவதி காதலித்தார். இறுதியில் சுரேஸ் மேனனை கைப்பிடித்தார்.

தொட்டாச்சிணுங்கி படத்தில் கார்த்திக்கோடு நடித்தார் ரேவதி. படப்பிடிப்பில் இருவரும் நெருங்கிப் பழகியதாக அரசல் புரசலாக கதை பரவியது. அதன்பின்னர்தான் ரேவதிக்கும் சுரேஸ் மேனனுக்கும் இடையில் கசமுசா என்று தகவல் கசிந்திருக்கிறது.

## ☆ ஊர்வசியின் காதலர் ☆

நடிகை ஊர்வசி மனோஜ் ஜெயன் என்பவரோடு அடிக்கடி காணப்படுகிறார். அவர்தான் தனது மணமகன் என்கிறார். ஜெயன் விஜயன் என்னும் இசையமைப்பாளரின் மகன்தான் அந்த மனோஜ் ஜெயன்.

## குஷ்புவிடம் நாலு கேள்விகள்
### குஷ்பு செயின், குஷ்பு இட்லி, குஷ்பு ஐஸ்கிறீம்

'இரட்டை ரோஜா' படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் குஷ்பு ஒரு சுற்று மெலிந்திருக்கிறார். சமீபத்தில் வெளிவந்த நாட்டுப்புறப்பாட்டில் நன்கு பெருத்திருந்தார். கடும் உணவுக் கட்டுப்பாட்டால் இப்போது தசையை குறைத்திருக்கிறார்.

கேள்வி: உங்களுக்கு இருந்த மவுசு குறைந்துவிட்டதாகக் கருதலாமா?

பதில்: எதை வைத்து இப்படிச் சொல்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஒரு விஷயம் தெரியுமா உங்களுக்கு? சமீபத்தில் நான் துபாய் நாட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கு ஒரு நகைக்கடையில் 'குஷ்பு செயின்' விற்றுக் கொண்டிருந்தனர். மேலும் தமிழ்நாட்டில் கரூரில் ஒரு ஹோட்டலில் 'குஷ்பு இட்லி' என்ற பெயரில் இட்லி விற்கிறார்கள்.

ஒரு நாள் நான் சென்னை மெரினா கடற்கரைக்குச் சென்றிருந்தேன். குஷ்பு ஐஸ்கீரீம் ஜில்லனு இருக்குது. சாப்பிடறீங்களா மேடம்? என்று கேட்டனர். ஆக என்மீது ரசிகர்களுக்குள்ள மவுசு குறையவில்லை.

கேள்வி: இப்போதெல்லாம் கனமான பாத்திரங்களில் நடிக்கிறீர்களே?

பதில்:- பிரபுவுடன் எனக்குத் திருமணம் நடப்பதற்கு முன்னர் அதிக படங்களில் கதாநாயகியாக நடித்தேன். பின்னர்தான் பொறுப்போடு கதை கேட்டு, என் வேடத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து நடிக்க ஆரம்பித்தேன். ஆனால், எதிர்பாராதவிதமாக என் திருமண வாழ்க்கை முறிந்து போய்விட்டது. அதனால் சற்று கலங்கிப் போய் நின்றேன்.

மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டு தொடர்ந்து நடிப்பில் கவனம் செலுத்தினேன். என் சொந்த வாழ்க்கையில் நடந்த கனமான சம்பவங்களின் காரணமாக, நான் நடிக்கின்ற கதாபாத்திரங்களும் கனம் நிறைந்ததாக அமைகிறதோ என்னவோ!

கேள்வி:- இயக்குநர் சுந்தரை திருமணம் செய்து கொள்வீர்களா?

பதில்:- நிச்சயமாக என் இரண்டாவது திருமணம்பற்றி இதுவரை நான் யோசிக்கவே இல்லை.

கேள்வி:- தற்போது நடித்து வரும் படங்கள்?

பதில்:- இராமராஜன் இயக்கத்தில் ஒரு படம். சுந்தர் இயக்கத்தில் ஒரு படம். மலையாளத்தில் ஜெயராமுடன் ஒருபடம். கன்னடத்தில் ரவிச்சந்திரன் ஜோடியாக ஒருபடம்.



ஷில்பா ஷெட்டி
படம் :-மிஸ்டர் ரோமியோ



விஜயசாந்தி
படம் :-இசைப்பயணம்

## இந்தியில் வசூல் மழை

1994-95 இல் அதிக வசூல் குவித்த இந்திப் படங்களது பட்டியலை பம்பாய் சினிமா வார இதழ் ஒன்று வெளியிட்டுள்ளது.

முதலிடத்தில் இருப்பது: ஹம் ஆப்கே ஹென் கோன்: இந்திய பண மதிப்பின் படி 150 கோடி ரூபாயை வசூல் செய்திருக்கிறது. சல்மான்கானும், மாதுரி டிக்ஷித்தும் ஜோடியாக நடித்தார்கள்.

இரண்டாவது இடத்தில் இருப்பது: 'டில் வாலே துல்ஹனியா'. இப்போதும் இந்[...] ஒடிக்கொண்டிருக்கிறது. இதுவரை 75 கோடி ரூபாய் வசூலாகியிருக்கிறது. ஷாருக்கானும், க[...] ஜோடியாக நடித்திருக்கின்றனர்.

மூன்றாவது இடத்தில் இருப்பது: கரன் அர்ஜுன். சல்மான்கான்-ஷாருக்கான் இருவரும் கதாநா[...] 30 கோடி ரூபாய் கனையான வசூல்.

'பம்பாய்' படத்திற்கு இந்தியா முழுவதும் பரவலான வரவேற்பு. இந்தியில் மட்டும் 20 கோடி வசூலாகியிருக்கிறது.

'ரங்கீலா' இப்போதும் ஓடிக்கொண்டிருக்கிறது. ஜாக்கிஷெரப் அமீர்கான் ஊர்மிளா நடித்த[...] இதுவரை வசூல் 20 கோடி.

## இளமையும் முதுமையும்

'அந்தி மந்தாரை' படத்தில் ஜெயசுதாவுக்கு வயதான வேடம்தான். இடையில் பழைய நினைவுக்காட்சிகளில் ஜெயசுதாவை இளமை குலுங்கக் காட்டியிருக்கிறார் பாரதிராஜா. இளமை, முதுமை இரண்டிலும் ரவிக்கை போடாமல்தான் ஜெயசுதா நடித்திருக்கிறார்.

## இரண்டு முடிச்சு

செங்கோட்டை படத்தில் மீனா கொலைக்குற்றவாளி. பயப்படாதீர்கள். கொலையை அவர் செய்யவில்லை. வீண்பழி சுமத்தப்படுகிறது. மீனாவை திருமணம் செய்கிறார் அர்ஜுன். தாலிகட்டி இரண்டு முடிச்சு போடுகிறா். மூன்றாவது முடிச்சை ஏன் போடவில்லை? உண்மையான கொலையாளியை பிடித்து விட்டுத்தான் மூன்றாவது முடிச்சு என்கிறார் அர்ஜுன்.

தாலி சென்டிமென்ட் என்ன பாடுபடுகிறது பாருங்கள்.

## 16 ஞ 16

கன்னடப்படமொன்றுக்கு வைக்கப்பட்டுள்ள பெயர்தான் 16 ஞ 16. கன்னடப்படம் என்றாலும் நடிப்பவர்கள் நமக்கெல்லாம் அறிமுகமானவர்கள். சில்க் சுமிதா, டிஸ்கோ சாந்தி, ஆகியோர்தான் பிரதான பாத்திரங்களில் தோன்றுகிறார்கள். கிராமத்து பெண் ஒருவரை ஒருவன் ஏமாற்றி விபசார விடுதியில் விற்றுவிடுகிறான். அங்கிருந்து அந்தப் பெண் தப்புவதுதான் கதை. கதையை வைத்தே தெரிகிறது, கவர்ச்சி தூள் கிளப்பும்

## வீர விளையாட்டு

சிரஞ்சீவியும், விஜயசாந்தியும் ஜோடியாக நடிக்கும் படம் 'வீர விளையாட்டு. ஐந்து பாடல் காட்சிகளோடு அதிரடி சண்டைக் காட்சிகளும் இருக்கின்றன. தமிழில் ஜல்லிக்கட்டு, சூரசம்ஹாரம் போன்ற படங்களை தயாரித்த சித்ரா ராமு, சித்ரா இலட்சுமணன் இணைந்து தாயாரிக்கின்றனர். இயக்கம், கோதண்டராமரெட்டி.

வாணிஸ்ரீ, சுதாகர், சத்தியநாராயணா ஆகியோரும் நடிக்கின்றனர்.

## காதோடு சொல்லுகிறோம்

மீன் நடிகை தொழிலதிபர் ஒருவர் வீசிய தூண்டிலில் சிக்கிக் கொண்டாராம். சென்னையில் பங்களா, பல ஏக்கர் நிலம் என்று நடித்துச் சம்பாதித்துள்ளார் மீன் நடிகை. அவர் இறுதியாகச் சம்பாதித்த பெரிய சொத்துத்தான் அந்தத் தொழிலதிபர். அவர் டும் டும் கொட்டலாம் என்கிறாராம். நடிகையோ காற்றுள்ளபோது தூற்றிக்கொண்டுவிட்டு பின்னர் கழுத்தை நீட்டலாம் என்றிருக்கிறாராம்.

உலக அழகி நடிகைக்கு பிரபல தயாரிப்பாளர் ஒருவர் வசிய கணை வீசினாராம். அழகி நயமாக மறுத்து நழுவிவிட்டாராம். ஐஸ் வைத்தாலும் படியமாட்டேன் என்கிறாளே என்று புலம்புகிறாராம் தயாரிப்பாளர்.

படப்பிடிப்பில் 'கனக' நடிகையை கணக்குப் பண்ணிக் கொண்டிருக்கிறாராம். 'கா' நடிகர். ஏற்கெனவே 'ரே' நடிகை வீட்டில் புகைச்சல். இப்போது 'கனக' நடிகையில் தாய்க் குலமான முன்னாள் நடிகை விஷயமறிந்து கொதித்துப் போயுள்ளாராம். படப்பிடிப்பு முடிந்த பின்னர் ஒரு நாள் 'கனக' நடிகை மிஸ்ஸிங். பதறிப் போனாராம் தாய்க்குலம். தற்போது படப்பிடிப்பில் பலத்த கண்காணிப்பாம்.

'சத்ய'மான நடிகர் மீண்டும் சுகன்ய நடிகைக்கு சிபாரிசு செய்திருக்கிறார். பழசையெல்லாம் மறந்து போகாமல் இருப்பவர்கள் அவரைப் போல சிலர் மட்டும்தான் என்கிறாராம் சுகன்யநடிகை. 'பழசையெல்லாம்' என்று அவர் எதைப்பற்றி சொல்லுகிறார்?

## மீண்டும் தேவராகிறார் சத்யராஜ்

'வேதம் புதிது' படத்தில் பாலுத்தேவராக நடித்திருந்தார் சத்யராஜ். மீண்டும் ஒரு தேவர் பாத்திரம் கிடைத்திருக்கிறது. 'சேனாதிபதி' படத்தில் சத்யராஜிக்கு இரண்டு வேடம்.

ஜாதிவெறியை எதிர்க்கும் சேனாதிபதித் தேவராகவும், பொறுப்பில்லாமல் ஊர்சுற்றும் சேதுபதியாகவும் இரட்டை வேடத்தில் நடிக்கிறார் சத்யராஜ்.

சத்யராஜின் ஜோடிகளாக சுகன்யாவும், சௌந்தர்யாவும் நடிக்கின்றனர்.

'கிழக்குச் சீமையிலே' படத்திற்கு கதை-வசனம் எழுதிய ரத்னகுமார், கதை, வசனமெழுதி முதன் முதலாக இயக்கும் படம் சேனாதிபதி.

பாரதிராஜாவிடம் கற்றபாடத்தை 'சேனாதிபதி'யில் காட்டப்போகிறார் ரத்னகுமார்.

சின்னக் கவுண்டர், நாட்டாமை போன்ற படங்களைப் போல 'சேனாதிபதி'யும் மாபெரும் வெற்றி பெறும் என்று நம்புகிறார் ரத்னகுமார்.

சத்யராஜுடன் மோதுபவராக விஜயகுமார் நடிக்கிறார். அவருக்கு ஜோடி ஸ்ரீவித்யா.

படத்தின் கதையைக் கேட்டவுடன் மறுபேச்சே இல்லாமல் நடிக்கச் சம்மதித்தாராம் சத்யராஜ். முதல் கட்டப்படப்பிடிப்பு முடிவடைந்துவிட்டது.

## உளவுத்துறை சில தகவல்கள்

தலைப்பைப் பார்த்துவிட்டு எந்தநாட்டு உளவுத்துறை? என்று நினைத்திருப்பீர்களே. நமக்கேன் வம்பு. நாம் சொல்வது விஜயகாந்த் நடிக்கும் 'உளவுத்துறை.' இதோ சில தகவல்கள்.

"எவ்வளவு சோதனை வந்தாலும் கடைசியில் வெற்றி எனக்குத்தான்" என்று விஜயகாந்த் பேசிய முதல் வசனத்தோடு படப்பிடிப்பு தொடங்கியது.

'உளவுத்துறை' படத்தின் தயாரிப்பாளர்கள் மிகச் சிறியவர்கள் (அதாவது வயதில்) ஒருவர் விஜயகாந்தின் ஐந்து வயது மகன் விஜய பிரபாகரன். மற்றவர் இப்ராகீம் ராவுத்தரின் தம்பி மகன் அபுகான். வயது நாலு.

புதிய இசையமைப்பாளர் அறிமுகமாகிறார். அவரது பெயர்: ஷா: ரொம்பச் சுருக்கமான பெயர்.

படத்தை இயக்குபவர் திரைப்படக் கல்லூரி மாணவர் ரமேஷ் செல்வன். கதை, வசனம், எஸ்.என்.பிரேம்நாத்.

## பிரபுவின் பெயர் 'கிட்டான்'

'பாஞ்சாலங்குறிச்சி' படத்தில் பிரபுவின் ஜோடி மதுபாலா. பிரபு கிட்டான் என்ற பெயரிலுள்ள பாத்திரத்திலும், மதுபாலா பொட்டுக்கண்ணி என்னும் பெயருள்ள பாத்திரத்திலும் நடிக்கின்றனர்.

'கருத்தம்மா' படத்தில் அறிமுகமான மகேஸ்வரி, விஜயகுமார், சந்திரசேகர் ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: தேவா. இயக்கம்: சீமான். முதல் கட்டப் படப்பிடிப்பு முடிவடைந்துள்ளது.



பிரபு-மதுபாலா
படம் :-பாஞ்சாலங்குறிச்சி



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



## புதிய 'காவல்காரன்'

எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா நடித்து வெற்றிகரமாக ஓடிய படம் 'காவல்காரன்'. தெலுங்கில் இருந்து தமிழுக்கு மொழி மாற்றப்படும் படம் ஒன்றுக்கு 'காவல்காரன்' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

அருண்பாண்டியன் கதாநாயகனாக நடித்திருக்கிறார். அவருக்கு ஜோடி யமுனா. ஏன்தான் இப்படி பிரபலமான வெற்றிப் படங்களின் பெயர்களை கெடுக்கிறார்களோ?!

## கியாஸ்லைட் தங்கம்மா

கதர் வேஷ்டி கந்தசாமியை கியாஸ்லைட் தங்கம்மா வெள்ளைக்காரர்களிடமிருந்து காப்பாற்றுகிறார். இருவருக்கும் காதல் அரும்புகிறது. சுதந்திரப் போராட்டத்திற்காகப் பிரியும் இந்த ஜோடி வயதான பின்னர் சந்தித்துக் கொள்கிறது. இதுதான் பாரதிராஜாவின் 'அந்தி மந்தாரை' படத்தின் கதையாம்.

கதர்வேஷ்டி. கந்தசாமி; விஜயகுமார். கியாஸ்லைட் தங்கம்மா; ஜெயசுதா. படப்பிடிப்புக்கள் 95 சதவிதம் முடிந்துவிட்டன. விருதுதான் பாரதிராஜாவின் குறி.

## மயக்கும் தேவி

'தேவராகம்' படத்தில் அரவிந்தசாமியுடன் பாவாடை தாவணியோடு நடித்துக் கொண்டிருக்கிறார் ஸ்ரீதேவி. 'பதினாறு வயதினிலே' "படத்தில் பார்த்ததைப் போலவே இருக்கிறீர்களே!" என்று வியந்து பாராட்டினாராம் அரவிந்த சாமி. அவரை விட ஸ்ரீதேவிக்கு வயது அதிகம் என்பது தெரியவே இல்லையாம்.

சமீபத்தில் இந்திப் படமொன்றில் ஸ்ரீதேவி ஒரு பாடல் காட்சியில் நடித்துக் கொண்டிருந்தார். பார்த்துக்கொண்டிருந்த இளம் ஹீரோ ஷாருக்கான் மெய் மறந்து போனராம்.

## ஒத்துவந்தால் ஒப்புக்கொள்வேன்

'மன்னன்' படத்தில் ரஜினியுடன் நடித்தபின்னர் தமிழில் விஜயசாந்தி நடித்துக் கொண்டிருக்கும் படம் 'இசைப்பயணம்!

"மன்னனுக்குப் பிறகு தாயின் மணிக்கொடி படத்தில் நடிக்கக் கேட்டார்கள் சம்மதிச்சேன். இப்போது இசைப்பயணம் படத்தில் கேட்டார்கள், சம்மதித்து நடிக்கிறேன். எனக்குத் தகுந்த மாதிரி கதை என்றால் மறுக்காமல் ஒத்துக்கொள்வேன்.

இரண்டு பாட்டு, ஐந்து சண்டை என்று உள்ள மாமூல் மசாலாப் படங்களை நான் தவிர்த்து வருகிறேன். அப்படிப்பட்ட படங்களுக்கு விஜயசாந்தி தேவையில்லைஎன்று தயாரிப்பாளர்களே முடிவு செய்து என்னிடம் வருவதில்லை." என்கிறார் விஜயசாந்தி.




## வள்ளல் மகன்

ராமராஜனுக்கு சென்ற வருசத்தில் அதிஷ்டம் திரும்பியது. 'தேடிவந்த ராசா' படத்தின் வெற்றியால் மள மளவென்று புதுப்படங்கள் ஒப்பந்தமாகியுள்ளன. தற்போது இறுதியாக ஒப்பந்த மாகியுள்ள படம் 'வள்ளல் மகன்'. ராமராஜனுக்கு ஜோடி யுவராணி.

கவுண்டமணி, செந்தில், நிழல்கள் ரவி, காிகாலன், தியாகு ஆகியோரும் நடிக்கின்றனர்.

கதை, திரைக்கதை வசனம், இசை, ஒளிப்பதிவு, இயக்கம் அனைத்தும் ராஜகீர்த்தி. மேமாதம் 1ம் திகதி திரையிடும் வகையில் படப்பிடிப்பு நடந்து வருகிறது.

## முகப்பில்

விஜயகாந்த்
படம்—உளவுத்துறை

பிரேமா
படம் — பொலீஸ்பவர்

## கல்லூரிக் கதை

'ஆசை' படநாயகி சுவலட்சுமி, விக்னேஷ் ஜோடியாக நடிக்கும் படம் வானி மஹால். படப்பிடிப்புக்கள் பூர்த்தியாகும் கட்டத்தில் இருக்கின்றன.

கல்லூரி ஆசிரியர்கள், மாணவர், மாணவிகள் மத்தியில் நிலவும் உறவை அடிப்படையாக வைத்து பின்னப்பட்ட கதையாம். இசை; தேவா. கதை, திரைக்கதை வசனம், இயக்கம் ஜெயராமன்.

'ஆசை' படத்தின் பின்னர் சுவலட்சுமி பெரிதும் எதிர்பார்க்கும் படம் இது.

## பிரசாந் நடிக்கும் உளிச்சத்தம்

'புகுந்தவீடு' 'சூரியகாந்தி', 'அந்தமான் காதலி' 'சாதனை' போன்ற வெற்றிப்படங்களுக்கு கதை வசனம் எழுதியவர் ஏ.எஸ்.பிரகாசம். அவர் கதை, வசனம் எழுதி இயக்கும் புதிய படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர் 'உளிச்சத்தம்'.

கல்லில் பெண்ணை வழக்கும் திறமையான சிற்பியாக நடிக்கிறார் பிரசாந்த். கதாநாயகி இன்னும் முடிவாகவில்லை. இசை; இளையராஜா. டி.டி.எஸ் என்னும் நவீன ஒலிப்பதிவு முறையில் பாடல்கள் பதிவு செய்யப்படவுள்ளன. இத்தகைய ஒலிப்பதிவில் மெல்லிய சப்தங்களும் தெளிவாகக் கேட்குமாம்.



வெங்கடேஷ்-நக்மா

## கஜோல் முதலிடத்தில்

மிஸ்டர் ரோமியோ படத்தில் பிரபுதேவாவுக்கு ஜோடி ஷில்பா ஷெட்டி. 'காதலன்' 'லவ்பேட்ஸ்' படங்களில் பிரபுதேவாவுக்கு ஜோடியாக நடித்தவர் நக்மா. ஆனால் ஷில்பா ஷெட்டிக்குத்தான் அதிக சம்பளம் கொடுக்கப் பட்டிருக்கிறது. இவர்கள் இருவரையும் ஊதிய விஷயத்தில தூக்கிச் சாப்பிட்டுவிட்டார் கஜோல். 'மின்சாரக் கனவு' படத்தில் நக்மாவையும், ஷில்பாவையும்விட இரண்டு மடங்கு அதிக சமபளம் வாங்கியிருக்கிறார் கஜோல்.



நாகார்ஜுன்-நக்மா

## நக்மா தொடர்ந்து நிலைப்பாரா?

பம்பாயிலிருந்து தமிழுக்கு வந்த நடிகைகளில் குஷ்புவுக்குப் பின்னர் தனியிடம் பிடித்திருப்பவர் நக்மா.

மனிஷாகொய்ராலா, ஷில்பாஷெட்டி, தபு, கஜோல் என்று பம்பாய் நடிகைகள் பலர் தமிழ் படவுலகுக்கு படையெடுத்திருக்கிறார்கள். என்றாலும் 'நக்மா' தனது இடத்தை தக்கவைத்துக் கொள்ளும் இரகசியம் என்ன? தமிழில் மட்டுமே அதிக கவனம் செலுத்துவதுதான் முதல் காரணம்.

தெலுங்குப் படவுலகிலும் நாகார்ஜுனா, வெங்கடேஷ் போன்ற கதாநாயகர்களோடு நக்மாவுக்கு படு நெருக்கம். நாகார்ஜுனாவோடு படு படு நெருக்கம். அதனால் மனிஷா கொய்ரால்ாவோடு உரசல் ஏற்பட்டதெல்லாம் சற்றுப் பழைய கதை.

இப்போதும் தெலுங்கில் கவனம் இருந்தாலும் தமிழில் நடிப்பதற்கே முன்னுரிமை கொடுக்கிறார் நக்மா. அவரை பம்பாய் நடிகை என்று தமிழ் பட ரசிகர்கள் நினைக்காமலிருப்பதுதான் வெற்றியின் இரகசியம்.

95 இல் 'காதலன்' படத்தோடு நக்மாவின் கவர்ச்சிக் கண்காட்சி ஆரம்பமானது. 'வில்லாதி வில்லன்', ரகசிய பொலிஸ் படங்களில் கவர்ச்சி அஸ்திரத்தை கடுமையாகவே பிரயோகித்தார். எனினும் தமிழில் நம்பர் வன் இடத்தை பிடிக்க முடியவில்லை.

தெலுங்கு படவுலகில் ஐந்து வருடங்களாக கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கிறார் நக்மா. அதேபோல தமிழிலும் மேலும் சில வருடங்களாவது நீடிக்க விரும்புகிறார். தற்போது வெளியாகியுள்ள 'லவ் பேட்ஸ்' நன்றாக ஓடினால் நக்மாவுக்கு மேலும் வாய்ப்புக்கள் குவியலாம்.

## கல்லூரி அகராதியும் காதலும்

தமிழ் பட பாடல்கள் பலவற்றுக்கு அர்த்தம் தெரியாமல் ரசிக மகாஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள் பாடலோடு தனியாக ஒரு அகராதியும் தயாரித்துக் கொடுத்துவிட்டால் உபயோகம் இருக்கும்.

'சாதி சனம்' படத்தில் பாடல் எழுதியுள்ள தமிழ் சிற்பி புத்திசாலி. 'கொக்கோ கோலா ஜிப்லி வாலா' என்று தொடங்கும் பாடலை எழுதியிருக்கிறார். பாடலில் இடம்பெறும் புதிய நூதனமான சொற்களுக்கு தனியாக ஒரு விளக்கம் தந்திருக்கிறார். சென்னையில் கல்லூரி மாணவர்கள் மத்தியில் புழக்கத்தில் உள்ள வார்த்தைகளாம் இவை. கொஞ்சம் கேட்கிறீர்களா?

சிக்னல் பொயின்ட்:- லிப்ஸ்டிக்.
நூல் விடுதல்:- பெண்ணிடம் காதல் முயற்சி.
மீன்பிடித்தல்:- பெண்ணை வசப்படுத்தி விட்டறிலை.
இஸ்திரி அடித்தல்:- படியவைத்தல்.
ட்ராலி பண்ணுவது:- தள்ளிக்கொண்டு போவது.
டெஸ்டைல் பண்ணுவது:- சடிதார் வாங்கிக் கொடுப்பது.
பேமிலி மெப்பர்:- வகுப்புப் பெண்.
கேபிள் ரி.வி:- காதல் கடிதம்.
அஞ்சு மிற்றர் பார்ட்டி:- சேலை கட்டிய பெண்.
ரபர்ஸ்டாம்பு:- முத்தம்
காற்றாடி ஸ்டாம்பு:- பறக்கும் முத்தம். (ப்ளையிங் கிஸ்)

பாத்தீர்களா, தமிழ் சிற்பி பாடலை எப்படி செதுக்கியிருக்கிறார்?!

www.padippakam.com

# அழகுக்கு அழகு

உங்கள் பாதங்கள் அழகாகவும் மிருதுவாகவும் இருக்க, படுக்கப்போவதற்கு முன்னர் உங்கள் பாதங்களில் கிளிசரின் (Glycerine) தடவித் தேய்த்துவிடுங்கள். மறுநாள் காலையில் வெந்நீரும், சோப்பும் போட்டுக் கழுவிவிடுங்கள். இதனால் பாதங்கள் வழவழப்பாகின்றன. புத்துணர்ச்சி பெறுகின்றன.



பெண்களாகிய நாம் தண்ணீரில் அடிக்கடி நம் கரங்களை உபயோகிக்கிறோம். கைகளைக் கழுவிக்கொண்டிருக்கும்போது திடீரென்று வாசலில் யாராவது கதவைத் தட்டுவார்கள். உடனே பாதி துடைத்ததும், துடைக்காததுமாகப்போய் கதவைத் திறப்போம். இல்லாவிட்டால் திடீரென்று ஃபோன் வரும். பால்காரர் வருவார். இந்தச் சமயங்களில் என்ன செய்துவிடுகிறோம்? அவசரம் அவசரமாகக் கைகளைத் துடைத்துக்கொண்டு விடுகிறோம். கரங்களில் இப்படிப் பெரும்பாலும் நீர்த்துளிகள் இருந்துகொண்டே இருப்பதால் கரங்களில் தோல் உலர்ந்து விடுகிறது. இது கேட்பதற்கு வியப்பாக இருக்கும் ஆனால், விஞ்ஞான ரீதியாகக் கண்டுபிடிக்கப்பட்ட உண்மை. உலர்ந்த தோலினால் கைகள் சொரசொரப்பாகி விடுகின்றன. பளபளப்பு போய் விடுகிறது. அழகு குறைகிறது. இது நேராமல் தடுக்க மூன்று வழிகள் இருக்கின்றன.

(அ) தண்ணீரில் அடிக்கடி கைகளை உபயோகிக்க வேண்டுமானால், அப்பொழுதெல்லாம் மெல்லிய ரப்பர் உறைகளை அணிந்து கொள்ளுங்கள். இந்த உறைகளில் சிறிய துளைகள் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். இல்லா விட்டால் உறையின் உட்பாகத்தில் வேர்வை சேர்ந்துவிடும்.

(ஆ) இது முடியாவிட்டால் கைகளை நன்றாகத் துடைத்து விடுங்கள். முக்கியமாக விரல் இடுக்குகள், நகங்களுக்கு உள்ளே நன்றாகத் துடையுங்கள்.

(இ) இல்லாவிட்டல் இதற்காக விற்கப்படும் கிரீம்களைப் பயன்படுத்தலாம். காலையில் ஒரு தடவையும், மாலையில் ஒரு தடவையும் இக்கிரீம்களைத் தடவிக்கொள்ளலாம்.

கிளிசரின், சீனி இவற்றைச் சேர்த்து உங்கள் உட்கரங்களில் அடிக்கடி தடவி வந்தாலும் கரங்கள் மிருதுவாக இருக்கும்.

உங்கள் முகத்தில் தோல் உரிந்தால் அதைப்போக்க, சிறிது கிளிசரின், எலுமிச்சைபழச்சாறு, சீனி இவற்றைக் கலந்த நன்கு தடவுங்கள், உரிந்த தோலும் வந்து விடும். இவ்வாறு மாதம் ஒரு முறை செய்தால் தோல் உரியாது.

ஒரு நாளைக்கு இரண்டு மூன்று தடவை குளிப்பதால் உடம்பு 'வீக்' ஆகிவிடும் என்பது தவறான கருத்து. ஆனால், தோல் உலர்ந்துவிடலாம். அடிக்கடி குளிப்பதில் தவறேதும் இல்லை. தோல் உலர்ந்துவிடாமல் இருக்க கிரீம்களைப் பயன் படுத்துங்கள்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## பெண்களும் அலர்ஜியும்

அலர்ஜியைப் பற்றிப்போசாத பெண்களே இருக்க முடியாது. அலர்ஜி என்று சொல்லிக்கொள்வது எப்பொழுதுமே ஒரு நாகரிகமாகும். அலர்ஜி எதனால் வருகிறது? நம் உடம்பிற்கு ஒத்துக் கொள்ளாத உணவுப் பொருளை உட்கொள்வதாலோ அல்லது அத்தகைய உடையை உடுத்திக்கொள்வதாலோ அலர்ஜி ஏற்படுகிறது. சிலருக்குப் பவுடர் அல்லது ஸ்நோ பயன்படுத்தினால் அலர்ஜி உண்டாகும். சிலருக்கு லிப்ஸ்டிக் பயன்படுத்தினால் அலர்ஜி ஏற்படும்; இத்தகையவர்கள் டாக்டரிடம் ஆலோசனை கேட்பது நல்லது.



ஆனால் காதுகளிலோ, மூக்கிலோ தங்கம் அல்லது வெள்ளியால் செய்யப்பட்ட நகைகள் அணிந்துகொள்வதால் அலர்ஜி வருவது குறையும் என்று கண்டுபிடித்து இருக்கிறார்கள். இதனால்தான் நம் முன்னோர்கள் இந்த நகைகளைஅணிந்து கொண்டார்கள். இன்று நாம் மலிவாக இருக்கிறது என்று கண்ட கவரிங் நகைகளைவாங்கி அணிகிறோம். இவைகள் காதோடு ஒட்டிக்கொண்டுவிடுகின்றன. இதனால் காற்றுப் புகமுடியாமல் நகை இருக்குமிடங்களில் அலர்ஜி உண்டாக வழி ஏற்படுகிறது. பொதுவாக தங்க, வெள்ளி நகைகள் அணிந்தாலே அலர்ஜி வராது என்பது மேல் நாட்டு டாக்டர்கள் கருத்து.

## காய்கறிகளைச் சமைக்கும் சரியான முறை



காய்கறிகளை வேகவைக்க முடிந்தவரை எவர்சில்வர் பாத்திரங்களைப் பயன்படுத்துங்கள். வாணலிகளையும் பயன்படுத்தலாம். வாணலியில் கறி செய்த பின்னர் எடுத்து வேறு ஒரு பாத்திரத்தில் வைத்துவிடுங்கள். அடுப்பிலிருந்து இறக்கியபின்னர் வாணலியிலேயே வைத்திருந்தால் கறி கறுத்துவிடும்.

காய்கறிகளில், பல்வேறுவிதமான விட்டமின்களும், தாதுச்சத்துக்களும் அடங்கியுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை நீரில் கரையக்கூடியன. அடிக்கடி காய்கறிகளை நீரில் கழுவினால் இச் சத்துக்கள் கரைந்துவிடும். ஆகவே, காய்கறிகளை அடிக்கடி நீரில் கழுவாதீர்கள். புதிதாக இருக்கும் காய்கறிகளில் அதிக சத்துக்கள் இருக்கின்றன. ஆகவே, முடிந்தவரையில் புதிய காய்கறிகளை வாங்கிச் சமையுங்கள். குளிர் சாதனப் பெட்டி வைத்திருப்பவர்கள்கூட ரொம்ப நாட்களுக்குத் தேவையான காய்கறிகளை வாங்கி வைக்க வேண்டாம்.

கீரையை நறுக்குவதற்குமுன்னர் நன்கு கழுவிவிடவும். காய்கறிகளைத் தோலை அரிவதற்குமுன்னால் ஒரு முறை தண்ணீரில் கழுவுங்கள். காய்கறிகளை ரொம்பவும் பொடிப் பொடியாக நறுக்காதீர்கள். இவ்வாறு செய்தால் அதிலுள்ள சத்துக்கள் மறைந்து விடலாம். அதேபோல், மிகவும் ஆழமாகத் தோலை அரிந்துவிடாதீர்கள். உருளைக்கிழங்கு, வள்ளிக்கிழங்கு இவற்றைத் தோலுடனே வேகவைக்கலாம். ருசியாகவும் இருக்கும். அவற்றின் தோலில் நிறைய சத்துக்களும் இருக்கின்றன.

காரட், முள்ளங்கி, வெங்காயம் இவற்றின் இலைகளில் அல்லது தோல்களில் விட்டமின் A,C சத்துக்கள் மிகுந்து இருக்கின்றன. ஆகவே, அவற்றை வீணடிக்காமல் பச்சடி, கூட்டு இவைகளில் சேர்க்கலாம்.

குழம்பு, ரஸம் முதலியன செய்கையில் புளித் தண்ணீரைக் கரைத்துவிடுவதைக் கடைசியில் வைத்துக்கொள்ளுங்கள். ஏனென்றால், காய்கறிகளில் ( தக்காளி போன்றவை) உள்ள பசுமையை முதலிலேயே புளித் தண்ணீரைக் கரைத்து விட்டால் அது போக்கிவிடும்.

## அறிதல் மூலமான பகிர்தல்



தாம்பத்திய உறவில் தம்பதியினர் மத்தியில் புரிந்துணர்வு அவசியம். அதுதான் பூரண பலனை அடையும் வழி என்கிறார்கள் உளவியல் நிபுணர்கள்.

தம்பதியர் இருவரில் ஒருவருக்கு சில சமயங்ளில் 'மூட்' அவுட்டாக இருக்கலாம். அப்போது பூரண ஈடுபாட்டோடு இல்லாமல் போகலாம். அதனை மற்றவர் கேலி செய்தால் பிரச்சனை வந்துவிடும். மனம் துவண்டுபோய் தன்னால் முடியாதோ என்று கேலிக்கு உள்ளானவர் கவலைப்படத் தொடங்கிவிடுவார்.

அதனால் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதும், ஆறுதலாக தட்டிக் கொடுக்கும் வார்த்தைகளால் உற்சாகமூட்டவேண்டியதும் அவசியமாம். இப்படிச் சொல்லியிருக்கிறார் அமெரிக்காவின் பிரபல உளவியல் நிபுணர் ஒருவர்.

தம்பதியர் இருவருமே வேலைக்குச் செல்லும் காலம் இது. வேலைப் பளு காரணமாக இருவரில் ஒருவர் சில சமயங்களில் சோர்ந்து போகலாம். அப்போது அவரது துணையின் உற்சாக வார்த்தைகள்தான் ஊட்ட மாத்திரைகளாக இருக்கும் என்கிறார் அவர்.

# கையில் தெரியும் குணம்

நாம் பேசும் போது கைகளை எப்படி வைத்திருக்கிறோம் என்பதை வைத்து நமது குணத்தை கண்டறிந்துவிடலாமாம். உங்கள் அனுபவத்தில் உண்மைதானா என்று பாருங்கள்.



அடிக்கடி கை கட்டிக்கொண்டு இருப்பவர்கள் எப்போதும் நிறையப் பேசுவதை விரும்புவார்கள். பணிவாக நடந்துகொள்ள வேண்டும் என்று பிறருக்கு உபதேசம் செய்வார்கள். தாம் பணிவாக நடப்பதாக நினைப்பார்கள். அதிக நேரம் நின்று கொண்டே பேசுவது இவர்கள் வழக்கம்.

இரு கைகளையும் இடுப்பில் வைத்துக் கொண்டு கம்பீரம் காட்டுபவர்கள் மற்றவர்களை அதிகாரம் செய்ய விரும்புபவர்கள். தங்களுக்கு கீழ்படிந்து நடப்பவர்களின் நலனில் அக்கறை காட்டுவார்கள்.

பின்னால் கைகட்டிக் கொண்டிருப்பவர்கள் இரகசியமான ஆசாமிகள். எதையும் யாருக்கும் தெரியாமல் செய்ய வேண்டும் என்று நினைப்பார்கள். அதனால் செட்டவர்கள் என்று நினைத்து விடாதீர்கள். பிறருக்கு உதவி செய்வதில் விருப்பமுள்ளவர்கள். என்ன ஒரு தொல்லையென்றால் கோபம் வந்துவிட்டால் போதும் பொட்டென்று பொரிந்து தள்ளிவிடுவார்கள்.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### கண்டி வாசகிக்கு அதிஷ்டம்

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

செல்வி. சாபிரா பர்வின்.
76, மாவதுபொல, அலவதுகொட-கண்டி.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அந்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் இம்மாதம் 15ம் திகதிக்கு பின்னர் முரசு அலுவலகத்தில் வந்து காலை 12 மணி முதல் 4 மணிக்கு முன்னர் (ஞாயிறு தவிர) பட்டுச்சேலையை பெற்றுச் செல்லலாம்.

முகவரி: இல 5, கானிந்த பிளேஸ், கிருலப்பனை, கொழும்பு-06.

## குழந்தைகட்கும் வயது முதிர்ந்தோர்க்கும்

### எளிமையான யோசனை

### கோதுமைக் கஞ்சி செய்வது எப்படி?

மாவு கோதுமையை வெயிலில் உலர்த்தி, குத்தி, உமியைச் சுத்தமாக போக்கவும். பிறகு வாணலியில் சிறிது சிறிதாகப் போட்டு சிவக்கப் பொரித்துக் கொள்ளவும். நன்கு ஆறியபின் இயந்திரத்தில் இட்டுக் கரகரப்பான மாவு ஆக்கிக் கொள்ளவும். (இம்மாவைச் சுமார் 15 நாட்கள் வைத்துக்கொள்ளலாம்.) மாவைத் தண்ணீரில் நன்றாகக் கரைத்துப் பிறகு கொதிக்க வைக்கவும். கொதித்தபின் பாலையும் சீனியையும் சேர்த்து அருந்துங்கள். இக்கஞ்சி 5 வயது முதல் 80 வயதுவரை உள்ள யாருக்கும் ஏற்ற ஒன்று. இம்மாவில் குரக்கன் மாவையும் 2:1 விகிதத்தில் கலக்கலாம்.

குரக்கன் சேர்க்கும் விதம்: குரக்கனைக் காலையில் தண்ணீரில் ஊறவைத்து, நடுப்பகலில் களைந்து, தோல் அகற்றி, வெயிலில் உலர்த்தவும். முன்போல் பொரித்துக் கொட்டி இயந்திரத்தில் நைஸாக அரைத்துக் கோதுமை மாவுடன் சேர்க்கலாம்.

## கிண்ணம் யார் கையில்?



கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை இம்முறை கைப்பற்றப் போவது யார்?

கிரிக்கெட் பார்வையாளர்கள், மற்றும் நிபுணர்களின் கருத்துப்படி மூன்று நாடுகளுக்கிடையிலேதான் கடும்போட்டி. அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான்.

கடந்த ஆண்டு பாகிஸ்தான் அணி பல தோல்விகளைக் கண்டிருந்தது. பிரச்சனைகளில் சிக்கித் தவித்தது. இலங்கை அணியிடமும் தோல்வியைச் சந்தித்தது.

எனினும் கடந்த ஆண்டு இறுதியில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தன்னை திடப்படுத்திக்கொள்ள ஆரம்பித்தது.

அதிரடியான துடுப்பாட்ட வீரர்கள், துடிப்பான பந்து வீச்சாளர்கள் அதன்பலம். அதன் பலவீனம்- உள் பிரச்சனைகள்: மோசமான பந்து தடுப்பு முறை.

இம்முறை உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தானுக்கு பாலப்பழம் போல ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

பாகிஸ்தான் பங்குகொள்ளும் சகல போட்டிகளும் பாகிஸ்தான் மண்ணிலேயே நடக்க இருக்கின்றன. அரையிறுதிப் போட்டிக்கு மட்டுமே இந்தியா சென்று ஆடப் போகிறது. எப்படியும் அரையிறுதிப் போட்டிக்கு பாகிஸ்தான் தகுதி பெற்றுவிடும் என்பதே பலரது கணிப்பாகும்.

அரையிறுதிப் போட்டியில் வெற்றி பெற்றுவிட்டால் போதும்...கிட்டத்தட்ட உலகக் கிண்ணம் கிடைத்தமாதிரித்தான். ஏனெனில் இறுதிப் போட்டி பாகிஸ்தானில்தான் நடக்க இருக்கிறது.

பாகிஸ்தான் அணி தனது கோஷ்டிப் பூசல்களை மறந்துவிட்டு ஆடினால் அவர்களை வெல்வது சிரமம்தான்.

## ஸ்போர்ட்ஸ்

### விக்கெட்டுக்களை சாய்த்த சூரர்கள்

கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டிகளில் 1975-1992 வரை அதிக விக்கெட்டுக்களை கைப்பற்றியவர்கள்.

| பெயர் | நாடு | விக்கெட்டுக்கள் | விளையாடிய காலம் | சிறந்த வீச்சு |
|---|---|---|---|---|
| இம்ரான் கான் | பாகிஸ்தான் | 33 | 1975-92 | 4/32 |
| கபில் தேவ் | இந்தியா | 28 | 1979-92 | 5/42 |
| கிறேக் மக்டர் மெற் | அவுஸ்திரேலியா | 26 | 1987-92 | 5/44 |
| அன்ரி றொபேட்ஸ் | மே.இ.தீவு | 26 | 1975-83 | 3/32 |
| அப்துல் காதிர் | பாகிஸ்தான் | 24 | 1983-87 | 5/44 |
| றிச்சாட் ஹாட்லி | நியூசிலாந்து | 22 | 1975-83 | 5/25 |
| மதன்லால் | இந்தியா | 22 | 1975-83 | 4/20 |
| மைக்கேல் ஹோல்டில் | மே.இ.தீவு | 20 | 1979-83 | 4/33 |
| றோஜர் பின்னி | இந்தியா | 19 | 1983-87 | 4/22 |
| ஆர்.வில்ஸ் | இங்கிலாந்து | 18 | 1979-83 | 4/19 |
| அசந்தா டீமெல் | இலங்கை | 18 | 1983-87 | 5/32 |
| சி.எம்.ஓவ்ட் | இங்கிலாந்து | 16 | 1975-79 | 4/8 |
| மொகிந்தர் அமர்நாத் | இந்தியா | 16 | 1975-83 | 3/12 |

1975 முதல் 1992 வரை நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் ஒரே போட்டியில் சிறப்பாக பந்து வீசி சாதனை படைத்தவர்கள்:

7/51-வின்ஸ்ரன் டேவிஸ் (மே.இ.தீவு) எதிர்-அவுஸ்திரேலியா. 1983.
6/14-ஜி.ஜெ.கில்மோர்(அவுஸ்) எதிர்-இங்கிலாந்து- 1975.


தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 25

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.



பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கபடுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.
☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை N
பெயர்:..............................
முகவரி:..............................
..............................
கையொப்பம்:..............................
உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி:17-02-1996
அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## பந்து வீச்சில் சாதனை



6/39-கே.எச்.மக்லி(அவுஸ்) எதிர்-இங்கிலாந்து- 1983.
5/21-ஏ.ஜி.ஹேர்ஸ்ற் (அவுஸ்) எதிர்-கனடா-1979.
5/25-றிச்சாட் ஹாட்லி (நியூசி) எதிர்-இலங்கை-1983.
5/32-அசந்தா டீமெல் (இலங்கை) எதிர்-நியூசிலாந்து-1983.
5/34-டெனிஸ் லில்லி (அவுஸ்) எதிர்-பாகிஸ்தான்-1975.
5/38-ஜோல் கார்னர் (மே.இ.தீவு) எதிர்-இங்கிலாந்து-1979.
5/39-அசந்தா டீமெல் (இலங்கை) எதிர்-பாகிஸ்தான்-1983.
5/39-விக் மார்க்ஸ் (இங்)எதிர்-இலங்கை-1983.

### ஹாட்றிக்

அடுத்தடுத்து வீசும் மூன்று பந்துக்களும் மூன்று விக்கெட்டுக்களை கைப்பற்றுதல் 'ஹாட்றிக்' என்றழைக்கப்படும். உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் 1987இல் நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் இந்திய வீரர் சேத்தன் சர்மா, ஹாட்றிக் சாதனை படைத்தார்.



படிப்பகம்

www.padippakam.com

## அத்"தை மகளுக்கு" ஒரு அவசரக் கடிதம்

அத்"தை மகள்" வெண்ணிலவே!
அமைதிச் சீர்-எடுத்து
இத்தையில் வருவாயாமே!
ரத்தினத்தார் சொன்னார்!

முத்தைப் போல் சிரிப்போடு
முதல் தை போல் முகத்தோடு
அத்"தையில்"
வந்து போனாய்;
மீண்டும்
இத் தையில் வருகிறாயோ!?

சீர் பல கொண்டு வந்து
"செழிக்க வைப்பேன் வாழ்வை"
என்று-
சித்தத்தை மயக்கி
என்னைச்
சிறைப்பிடித்துச் சென்றவளே!

போர்பல கொண்டு வந்தாய்...
உந்தன்-
சீர் வந்துதான்
இன்னும் சேரவில்லை.

உன் வீட்டுச்
சொத்தையா கேட்டேன்?
சுகத்தையா கேட்டுவிட்டேன்?
யுத்தத்தின்
சத்தத்தை நிறுத்தி-
சமா-தானத் தைத் தானே
கேட்டேன்....

உங்கள்
பங்காளிச் சண்டைக்குள்
பாவப்பட்ட என்னுடல்தான்
ரத்தத்தில் குளித்து
ரணமாகிப் போனதடியோ....

போதும்!
போதும்!
இனியேனும்
முத்தமொன்று பதித்திட வா!
"அமைதி-" என்றதொரு
முத்தம் பதித்து
மீண்டும் நான்
முகிழ்த்திட வா!
உயிர்த்திடுவேன்!
(பி.கு.) நான்
செத்துப்
போவதற்குள்-

இப்படிக்கு
உன் அத்தான்
இலங்கையன்

நீர்கொழும்பூர்-ந- தருமலிங்கம்.

## தேன் கிண்ணம்

### இன்னும் ஏன் தாமதம்

அறுத்துப் போட்ட
கோழி போல்
என் மனம்
துடித்துக் கொண்டிருக்குதடி...
காதல்..!
••••••
ஏன் வராமல் போன
உன்
காகித ஓலை..?
••••••
உன் வார்த்தைச் சிலம்புகளின்
சங்கீதம்
என் இதயவாசலில்
கேட்காத போது
எப்படியடி நான்
நிம்மதியாய் இருப்பது..?
••••••
தினமும் நான்
செத்துக்கொண்டிருப்பது
உனக்கு பிரியமாகிவிட்டதா..?
••••••
என் அதிஷ்டராவுகளின்
தேன் குடமே...!
உன் சுவை
என்னை விட்டும்
எட்டிப்போனதடி!
••••••
இரவுகள்
இன்றையொன்று
சந்திக்காததுபோல்
ஏனடி நமக்குள்...
இந்த இஷ்டமில்லாத் தூரம்?
••••••
காம்பிலிருந்தும் மலரை
கிள்ளிப்போட்டாற்போல்...
வாடிப்போனேனடி
அந்தக் காம்பாய்...!
••••••
மலரே, என் இதயம்
சறுக்கிச் சறுக்கி
விழுந்தது-
உன் போதையில்தான்.
••••••
இன்று
நீ இல்லாத பொழுதுகளில்
என் மனம்
நூல் அறுந்த காற்றாடியாய்..!
••••••
ருசியில்லாமல் போனது
வாழ்க்கை....!
வெற்றிலையை மட்டும்
வெறுமனே போட்டு
சம்புவதாய்!
••••••
நித்திரையும் தொலைந்து
போகின்ற
ராவுகளில்-
வாடைக்காற்றும்
சுடுகுதடி!
••••••
கண்ணே...!
ஏன் வராமல் போனது
உன் காகித ஓலை..?

சிபி.எம்.ஐ.எம்-றகீம், பொத்துவில்.2.

## என்.டி.ஆர் + எம்.ஜி.ஆர்

# என்ன பொருத்தம் இந்தப் பொருத்தம்

எம்.ஜி.ஆர் போலவே நடிகராக இருந்து முதலமைச்சரானவர் என்.டி.ராமராவ். இருவருக்குமுள்ள பொது ஒற்றுமைகளைப் பாருங்கள்.

1.நடிகர் 2. இயக்குநர் 3. தயாரிப்பாளர் 4.ஸ்ருடியோ அதிபர் 5.அரசியல் தலைவர் 6.முதலமைச்சர் 7.டாக்டர் பட்டம் 8.குடியரசுதின விழா விருது பெற்றவர்கள்.
9. முதல் படத்தில் இருவருக்குமே பொலிஸ் அதிகாரி வேடம்.
10. இருவர் பெயரிலும் ராமர் இருக்கிறார்.



## ராமராவின் கடைசிப் பேட்டி

மாரடைப்பால் மரணமாவதற்கு முதல் நாள் புதன்கிழமை பிரிட்டன் வானொலி ஒன்றுக்கு பேட்டியளித்தார் ராமராவ். அதுதான் அவரது கடைசிப் போட்டி..

அந்தப் பேட்டியில் ராமராவ் பின்வருமாறு சொல்லியிருந்தார்:

முகலாய மன்னர் ஷாஜகானை அவரது மகன் அவுரங்கசீப் சிறையில் அடைத்து கொடுமைப் படுத்தினான். அதுபோல என் குடும்பத்தினரே எனக்குத் துரோகம் செய்து விட்டனர். என் முதுகில் குத்திவிட்டார்கள். குறிப்பாக எனது மருமகன் சந்திரபாபு நாயுடு எனக்கு துரோகம் இழைத்துவிட்டார்.

இன்று ஆட்சியில் ஏறிவிட்டதாக சந்திரபாபு நினைக்கக்கூடும். ஆனால் அவரது பதவிநாட்கள் எண்ணப்படுகின்றன.

நான் காத்திருப்பேன். மீண்டும் வெற்றி கொள்வேன்.



இதுதான் ராமராவின் கடைசி பேட்டி மரணவாக்குமூலம் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

## பல்லவியாகும் பயணங்கள்

உருக்குலைந்து போன தேசத்தில்
துருப்பிடித்த இரும்புகளாய்
மனித வாழ்க்கை....!

நேற்று முளைத்த சிறகாய்
காற்றில் கனத்து வரும் செய்திகளை
கேட்டு
இதயம் அடைத்துப் போகும்!

உறவுகள்,
அறுந்து போன தந்திக் கம்பிகளாய்
குருதி ஆற்றில்
சிவந்து கிடக்கும்!

கால்கள்
தடை முகாம்களைக்
கடக்கும் வரை
உயிரற்ற ஜடமாய்
விறைத்துப் போகும்!

அடையாள அட்டை இல்லாத
போக்குவரத்தும்
துப்பாக்கி ஏந்தாத
காவல் நிலையங்களும்
அறிமுகப்படுத்தப்படும் வரை
பல்லவியாகும் பயணங்கள்......

காரைதீவு, எஸ்.நாகராஜன்.

## நிஜம்

இன்றுவரை
இருவரும்
ஒரு வார்த்தைகூடக்
கதைத்ததில்லை!
**
வெள்ளையா சிவப்பா
உனக்கு விருப்பமென்றும்
தெரியவில்லை!
**
காதலிக்காக
ஒருகடிதமெழுதக்கூட
இந்தக் காதலனுக்கு
அதிஷ்டமில்லை!
**
எனது காதலைச்
சொல்ல முன்னமே
உன்
முடியாத முடிவை
முன்வைத்து விட்டாய்!
**
இனியவளே!
இன்று
வெறும் ஞாபங்களாகவே
நிலைத்துவிட்ட-என்
வசந்தகால
நினைவுகளுக்காக
நான் ஒன்று மட்டும்
செய்து கொள்கிறேன்!
நீ கற்றுத் தந்த
கவிதைகளை
கண்ணீரால்மட்டுமே
எழுதுகிறேன்!!
**

அ.டக்ளஸ் ஜெயசேகரன், வவுனியா.

## வாழ்வு

எதிர்பார்ப்பு
ஏமாற்றமாகும்!
ஏமாற்றம்
எதிர்பார்ப்பாகும்!
வாழ்க்கை
இரண்டுக்குமிடையில்!
வாழ்வில்
ஏமாற்றம்
கட்டாயம் வேண்டும்!
அப்போதுதான்
எதிர்பார்ப்பு
உருவாகும்.
எப்போதும் அடி
கொடுத்து பழகாமல்
வாங்கவும் வேண்டும்!
அப்போது தான்
அதன் வீரியம் புரியும்!

சுபாவரன்-கனடி.

## நம்மவர் வே(சா)தனை

உயிரினங்களிடும்
ஒலியின்
நிஷப்தம்.

ஆலயத்தில்,
அறிவகத்தில்
அகதிமுகாம்.

அந்தகர்
கூட்டமாய்
நம்மவர்.

ஏழை
பணக்காரர்
பேதமற்ற
வாழ்க்கை.

முகாமில்
மங்கலாய்த்
தெரியும்
மண்ணெய்
தீர்ந்த
விளக்கில்
பரீட்சைக்காய்ப்
பரிதவிக்கும்
மாணாக்கர்.

திடீரென
வானூர்தி,
வானைப்
பிளக்கும்
வேட்டோசை,
அக்கணமே
ஐயோவெனக்
கேட்கும்
ஒப்பாரி
ஓசை.

காயமுறுது
விழுப்புண்ணுற்றோரும்
மரணத்தின்
விளிம்பில்
தவிப்போரும்
சிற்சில
மரண,
கலியாணச்
செய்திகளும்
கூடவே உள்ளன.

இவை....
வானத்தைக்
கூரையாக்கி
வாழப் பழகிய
எம்மவரின்
வேதனையுடன்
கூடிய
சாதனையே!

வானவர்கோன்
-வீரமுனை.

## ஹைக்கூ வடிவ கவிதைகள்:-

இரவில்
அறுவை இல்லாத படம்
கனவு
****
காதலர்களின்
கண்ணீர்த் தாங்கி
தலையணை.
****
பலநாள் முயன்று
சேர்க்கும் தேன்
புகழ்.
****
இணைக்கப் பிறந்து
இணைத்தே இறப்பது
நூல்.
****
புயலின் நடுவே
அமைதியைத் தேடுகிறார்கள்
அகதிகள்.
****
மலையக மக்களின்
இரத்தம்
தேனீர்.
****
எரிந்து கொண்டிருக்கும்
மெழுகு வர்த்தி
அழகு.
****
இறப்புக்கு அஞ்சா
தற்கொலையாளி
தீக்குச்சி.
****
இயற்கையின்
நகரசுத்தித் தொழிலாளி
காக்கை.

எஸ்.ஸ்ரீயானி, மன்னம்பிட்டி

## இந்த வாரம் உங்கள் பலன்

( 11.02.96 முதல் 17.02.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மகரம் | -சூரியன், புதன். |
| கும்பம் | -சனி, செவ்வாய். |
| மீனம் | -வெள்ளி, கேது. |
| கன்னி | -இராகு. |
| தனு | -வியாழன். |

சந்திரன்-துலாம், விருட்சிகம், தனு ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு-வீண் குறை கேட்டல், முயற்சி தடை. | பி.ப. 2 மணி |
| திங்கள்-தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | காலை 6 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- தொழில் கேடு, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வியாழன்- வீண் செலவு, கடன்படல். | பகல் 12 மணி |
| வெள்ளி தொழில் மந்தம், பணக் கஷ்டம். | காலை 7 மணி |
| சனி- துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-2

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனக்கிலேசம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், இனசன நன்மை. | பகல் 12 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| வியாழன்-தொழில் சிறப்பு, பணவரவு | காலை 7 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | மு.ப. 12 மணி |
| சனி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- அந்நியர் உதவி, தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| வியாழன்- பொருள் விரயம், மனக்கலக்கம். | காலை 7 மணி |
| வெள்ளி- துயர்நீங்கும், பயனுள்ள செயல். | பகல் 12 மணி |
| சனி- உறவினர் பகை, பணச் செலவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மனப்பயம். | மு.ப. 9 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| புதன்- எதிர்பார்த்த நன்மை, பொருள்வரவு. | காலை 6 மணி |
| வியாழன்- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் விருத்தி, இனசன நன்மை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-2

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| திங்கள்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | காலை 7 மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் மந்தம், வீண் மனஸ்தாபம். | மு.ப. 9 மணி |
| வியாழன்-இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| சனி- பொருள் விரயம், மனக்கலக்கம். | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, கடன் படல். | காலை 7 மணி |
| புதன்- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- வீண் பயம், செலவு மிகுதி. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- காரியசித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| சனி- புதிய முயற்சி, மனக் கலக்கம். | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-9

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- பிரயாண மிகுதி, இனசன நன்மை. | காலை 7 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, கௌரவக்கேடு. | பி.ப. 1 மணி |
| புதன் - தொழில் நஷ்டம், மனக்கிலேசம். | காலை 7 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, ஆடம்பரச் செலவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, பணவரவு. | மு.ப. 9 மணி |
| சனி- முயற்சி பலிதம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-1

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| புதன்- இனசன மகிழ்ச்சி, தொழில் சிறப்பு. | மு.ப. 9 மணி |
| வியாழன்-வீண் முயற்சி, அந்நியர் உதவி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- பிரயாணக் கஷ்டம், உயர்ந்த நட்பு. | மு.ப. 9 மணி |
| சனி- பயனற்ற செயல், பிரயாண மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கம், இனசன நன்மை. | காலை 7 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| வியாழன்-பெரியோர் உதவி, பொருள் வரவு. | காலை 6 மணி |
| வெள்ளி-மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| சனி- புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, துயர் நீங்கும். | காலை 6 மணி |
| புதன்- மனமகிழ்ச்சி, பிரயாண மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், கௌரவம். | பி.ப. 2 மணி |
| சனி- காரியசித்தி, பொருள் வரவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 6 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், காரியத்தடை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | மு.ப. 9 மணி |
| சனி- காரியசித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் பகை, மனக்கலக்கம். | காலை 7 மணி |
| திங்கள்- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. 2. மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, காரியானுகூலம். | மு.ப. 9 மணி |
| புதன்- அந்நியர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. 2 மணி |
| சனி- புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 7 மணி |


அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1



படிப்பகம்

www.padippakam.com





## சின்னத் தவறு

சிந்தித்துப் பார் தம்பி சிந்தித்துப் பார்
சின்னத்தவறையும் நீ சிந்தித்துப் பார்!
பிந்திப் பார்க்கலாம் என எண்ணி விட்டால்
பின்னால் உனக்குத்தான் தம்பி கேடுவரும்!

சின்னப் புண்ணொன்று காலில் வரும்
சிறிது பெரிதாகித் துன்பம் தரும்!
சின்னப் பொறியென விட்டு விட்டால்
சீறியெழுந்து தானது ஊர் அழிக்கும்!

சின்ன விதைகளே மண்ணில் மரமாகும்
சின்ன மழைத்துளியிங்கு கடலாகும்!
சின்னக் கல்லுதான் பெரும் மலையாகும்
சின்னப் பூக்களே பெரும் காயாகும்!

சிந்தித்துப் பார் தம்பி சிந்தித்துப் பார்
சின்னத் தவறையும் நீ சிந்தித்துப் பார்!
சிந்தித்துத் தெளிந்தால் வாழ்வுயரும்
-அல்லால்
சின்னத் தவறு வளர்ந்துனைச் சீரழிக்கும்!

கவிஞர் புரட்சிபாலன்-திருகோணமலை.

அச்சம் தவிர்! ஆண்மை தவறேல்!
இளைத்தல் இகழ்ச்சி! ஈகை திறன்!
உடலினை உறுதிசெய்! ஊண் மிக விரும்!
எண்ணுவது உயர்வு! ஏறுபோல் நட!
-சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறுகதை

# வைர நகை இருக்கா?



வேலூர் என்ற ஊரில் குமாரசாமி என்றொரு வைர வியாபாரி இருந்தான். அவன் மோசமான குணநலம் கொண்டவன். வியாபாரி என்றுதான் பெயர். அவனிடம் அதற்குத் தேவையான நாணயமோ, மனசாட்சியோ கிடையாது. தனது சுயலாபத்திற்காக யாருடைய பொருளையும் தந்திரமாக அபகரிக்க அவன் தவற மாட்டான்.

ஒரு நாள்-

குமாரசாமியிடம், பரமன் என்ற இளைஞன் ஒருவன் வந்தான். அவன் மிகவும் நல்ல நிலையிலிருந்து வாழ்ந்து பின் ஏழையானவன். அவனிடம் விலையுயர்ந்த வைரக்கல் ஒன்று இருந்தது. தனது குடும்ப கஷ்டத்தின் காரணமாக அதைக் குமாரசாமியிடம் விற்க வந்திருந்தான்.

குமாரசாமி அந்த வைரக்கல்லை வாங்கிப் பார்த்தான். அது பல லட்சம் ரூபாய் மதிப்புடைய விலையுயர்ந்த வைரக்கல் என்பது பார்த்த உடனேயே தெரிந்தது. உடனே அந்த வைரக்கல்லை மிகவும் மலிவான விலைக்கு வாங்கிவிட அவன் திட்டம் போட்டான்.

பரமனின் குடும்ப சூழ்நிலை வேறு குமாரசாமிக்குச் சாதகமாக இருக்கவே, அந்த வைரக்கல்லை மிகவும் சுலபமாக வாங்கி விடலாம் என்று நினைத்தான். ஆனால் தன் ஆர்வம் எதையும் அவன் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

"பரமா! உன்னை நினைத்தால் எனக்குப் பரிதாபமாக உள்ளது. எப்படி வாழ்ந்தது உன் குடும்பம்! என்ன ராஜபோகமாக வாழ்ந்தனர் உன் முன்னோர்கள்! என்ன விதி வசமோ, இன்று கஷ்டத்தில் அல்லாடுகிறாய். இந்த வைரக்கல் நீ நினைப்பதுபோல் அவ்வளவு ஒன்றும் விலை உயர்ந்தது அல்ல. இது மிகவும் சாதாரண கல்தான். வெறும் நூறு ரூபாய் கூடப்பெறாது. ஆனால், இதன் வேலைப்பாட்டிற்காக இதற்கு இருநூறு ரூபாய்வரை தரலாம். அவ்வளவுதான் போகும். என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான்.

அதைக் கேட்ட பரமன் திடுக்கிட்டான்.

"ஐயா! இது இரு நூறு ரூபாய்க்குத்தான் போகுமா?" என்று கேட்டான்.

"ஆமாம்! அதற்கு மேல் ஒரு பைசா பெறாது!" என்று சிறிது கூட ஈவிரக்கம் இல்லாமல் சொன்னான் குமாரசாமி.

பரமனுக்கு வேறு வழி தெரியவில்லை. அந்த ஊரில் வேறு வைர வியாபாரி யாரும் கிடையாது. இப்போது இருக்கும் குடும்ப கஷ்டத்தின் அவசியம் பணம் தேவை. ஆகவே, கிடைத்தது கிடைக்கட்டும் என்று நினைத்து, அந்த வைரக்கல்லை குமாரசாமியிடம் கொடுத்து விட்டு, அவன் கொடுத்த இரு நூறு ரூபாயை வாங்கிக் கொண்டு சென்றான்.

அவன் சென்ற பிறகு அந்த வைரக் கல்லைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தான் குமாரசாமி.

அப்பொழுது இரண்டு அழகிய பெண்கள் அவன் கடைக்கு வந்தார்கள். அவர்கள் தங்களை நன்கு அலங்கரித்திருந்தார்கள்.

"ஐயா! எங்கள் சகோதரியின் திருமணத்திற்கு தங்கம் மற்றும் வைர நகைகள் வாங்க வேண்டும். இந்த ஊரில் தரமான தங்க, வைர நகைகளை விற்பவர் நீங்கள் ஒருவர் தான் என்று எங்களுக்குத் தெரியவந்தது. அதனால்தான் பெரிய பெரிய கடைகளை விட்டுவிட்டு உங்களிடம் வந்தோம். பணத்தைப் பற்றிக் கவலை இல்லை. பத்து லட்சம், இருபது லட்சமானாலும் வாங்கி விடுவோம். ஆனால், நகைகள் ஒரிஜினலாக இருக்க வேண்டும்." என்றனர் அந்தப் பெண்கள்.

"ஆஹா! இன்று விழித்த நேரம் நல்ல நேரம் போல் இருக்கிறது. அதனால்தான் வாடிக்கையாளர்களும், பணமும் தேடி வருகிறது!" என்று நினைத்து மிகவும் மகிழ்ந்து போன குமாரசாமி, அந்தப் பெண்களை வரவேற்று அமர்த்தினான்.

"விலையுயர்ந்த வைரங்கள், தங்க நகைகளைக் காட்டுங்கள்!" என்றனர் அந்தப் பெண்கள்.

குமாரசாமி வாயெல்லாம் பல்லாக, பரமனிடம் வாங்கிய அந்த வைரக் கல்லை எடுத்து ஒரு பெண்ணிடம் கொடுத்தான்.

"விலையுயர்ந்த ஒரிஜினல் வைரம், அகலமான நெக்லஸின் நடுவே பதிக்கலாம். நெற்றிச் சூடியில் பதித்தால் நெற்றிக்கண் போல் மிக அழகாகப் பிரகாசிக்கும். விலை ஒன்றும் அதிகமில்லை. இரண்டு லட்சம்தான்!" என்றான் குமாரசாமி.

அந்தப் பெண்கள் அந்தக் கல்லை திருப்பித் திருப்பிப் பார்த்தார்கள். பிறகு மன நிறைவு அடைந்தவர்களாய், "சரி! இதை வாங்கிக் கொள்கிறோம். ஆனால் இன்னும் நீங்கள் நகைகளைக் காட்ட வில்லையே!" என்றனர்.

குமாரசாமி தன்னிடமிருந்த அத்தனை விலையுயர்ந்த தங்க, வைர நகைகளை எடுத்து அவர்கள் முன்னே அடுக்கினான்.

அவர்களும் அந்த நகைகளை ஒவ்வொன்றாகப் பார்க்கத் தொடங்கினார்கள்.

அப்பொழுது அவனருகே இருந்த டெலிபோன் மணி ஒலித்தது.

ரிசீவரை எடுத்து, "ஹலோ! குமாரசாமி பேசுகிறேன்!" என்றான் குமாரசாமி.

"குமாரசாமி சாரா? ஐயோ! நான் என்னத்தைச் சொல்வேன். சீக்கிரம் போங்க. உங்க மனைவி பொன்னம்மாளை யாரோ கொன்னுட்டு, இரும்புப் பெட்டியிலே இருந்த நகைகளையெல்லாம் கொள்ளையடிச்சிட்டுப் போயிட்டாங்க!" என்று ஒரு குரல் பேசியது.

"என்ன! என் மனைவி பொன்னம்மாளைக் கொன்னுட்டு நகைகளையெல்லாம்... ஐயோ... பொன்னம்மா...!" என்று வாய்விட்டு அலறினான்.

உடனே டெலிபோன் ரிசீவரைப் போட்டு விட்டு, வியாபாரத்தையும் மறந்து விட்டு வீட்டை நோக்கி மோட்டார் சைக்கிளை கிளப்பினான்.

பாதி தூரம் சென்ற பிறகுதான் கடையை அப்படியே விட்டுவிட்டு வந்தது ஞாபகத்திற்கு வந்தது. உடனே மோட்டார் சைக்கிளைத் திருப்பி வேகமாகக் கடைக்கு வந்தான்.

கடை அப்படியே இருக்க, கடையிலிருந்த அந்த இரண்டு பெண்களையும் காணவில்லை.

குமாரசாமி மோட்டார் சைக்கிளை அப்படியே போட்டு விட்டு கடைக்குள் ஓடினான்.

அங்கே-

ஒரு நகை கூட இல்லை. இரும்புப் பெட்டியும் உடைக்கப்பட்டு பணமும் காணாமல் போயிருந்தது.

"ஐயோ! ஐயோ!" என்று வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு அலறினான் குமாரசாமி.

கடையில் காணாமல் போன நகை மற்றும் பணத்தின் மதிப்பு பத்து லட்சம் ரூபாய்க்கு மேல் இருக்கும்.

குமாரசாமி கடையைப் பூட்டிவிட்டு வீட்டிற்கு ஓடினான்.


வீட்டில் அவன் மனைவி பொன்னம்மாள் கல்லுப் பிள்ளையார் போல் குஷன் சோபாவில் அமர்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தாள்.

தான் சிலரால் சூழ்ச்சியாக ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பதை உணர்ந்த அவன், "பரமா! உன் விலைமதிப்பற்ற வைரத்தை உன்னை ஏமாற்றி வாங்கினேன். ஆனால், யாரோ சிலரிடம் என் எல்லா நகைகளையும் இழந்து ஏமாளியாய் நிற்கிறேன். எனக்கு இந்தப் பாடம் தேவைதான்!" என்று தனக்குள் சொல்லி வேதனைப்பட்டான்.

அந்த சம்பவத்திற்குப் பிறகு பிறரை ஏமாற்றிப் பிழைக்கும் எண்ணமே அவனுக்கு வரவில்லை.

அன்புக் குழந்தைகளே! அடுத்தவர் வைத்திருக்கும் பேனா, பென்சில் பொக்ஸ், அடிமட்டம் அழகா இருந்தா அதை எடுத்து துக்க நினைப்பது, இல்லை உடைச்சு வைப்பது இப்படியெல்லாம் செய்தால்... நாளைக்கு நமது பொருளை இன்னொருத்தர் செய்து விடுவார். எனவே உங்களிடம் உள்ள பொருட்களை பத்திரமா வைச்சிக் கோங்க. அது கூட இல்லாம எத்தனை பேர் படிக்கிறாங்க... அதை நினைத்து திருப்திப் படணும்- சரியா?

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 17.02.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 128
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 126

பரிசுக்குரியவர்:
செல்வி.க.இந்திராணி
மே/பா திரு.இ.கணபதி, திரேஷியா தோட்டம், பொகவந்தலாவ

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| பைறோஸ்<br>9,பிரதான வீதி, சாய்ந்தமருது-11. | ஏ.எச்.ஹாரிஷ்<br>நஸ்றியா மகாவித்தியாலயம், சிலாபம். |
| திருச்செல்வம் சபேஷன்<br>விநாயகர் வீதி, சேத்துக்குடா,மட்டக்களப்பு. | சோ.நரேஸ்குமார்<br>உதயபுரம் தமிழ் வித்தியாலயம், பெரியகல்லாறு-3. |
| எஸ்.நளாயினி<br>40,புதிய வீதி, மட்டக்களப்பு. | எல்.ரஜீவ்<br>இ/பரி.யோவான் தமிழ் ம.வி, இறக்குவானை. |
| எம்.எவ்.நஸ்ரின்<br>11/5, ஜயசுந்தர, நாவலப்பிட்டிய. | ஷ.்.பியா பேகம்<br>முஸ்லிம் மகளிர் கல்லூரி, கோயில் வீதி, கல்கிசை. |
| சு.ஜெறோம்<br>புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. | எம்.சிவமலர்<br>பது/ஹாலி-எல தமிழ் வித்தியாலயம், ஹாலி-எல. |

## அறிவியல்
## பாஸ்டர் முறை என்றால் என்ன?

பால்,பாலாடைக்கட்டி போன்ற உணவுப் பொருட்கள் பாக்ட்டீரியங்களால் கெடாமல் பாதுகாக்கும் முறைக்கு பாஸ்டர் முறை (Pasteurization) என்று பெயர். பிரெஞ்சு அறிவியலாளர் லூயி பாஸ்டர் என்பவர் இந்த முறையைக் கண்டுபிடித்தமையால் இப்பெயர் இடம்பெறலாயிற்று.

பாலை 147 பாகை வெப்பநிலைக்குச் சூடேற்றி அதே வெப்பநிலையில் சுமார் அரை மணிநேரம் வைத்திருந்து திடீரென்று 50 பா. வெப்பநிலைக்கு கொண்டுவந்து, அப்பாலைப் பயன்படுத்தும் வரை அதே வெப்ப நிலையில் வைத்திருப்பதே பாஸ்டர் முறையாகும்.

இம்முறையினால் பாலிலுள்ள தீமை பயக்கும் நுண் கிருமிகள் (பாக்ட்டீரியங்கள்) பெருகாதபடி தடுத்து, பாலின் சுவை-மணம் ஆகியவையும் பாதுகாக்கப்படுகிறது.

## வாரம் ஒரு நாடு
## லிபியா



**தலைநகர்:** திரிபோலி
**பரப்பளவு:** 17,59,540 ச.கி.மீ
**மக்கள் தொகை:** 55,00,000
**மொழி:** அரபி
**எழுத்தறிவு:** 64%
**சமயம்:** இஸ்லாம்
**நாணயம்:** லிபியன் தினார்
**தனிநபர் வருமானம்:** 5,500 டொலர்.

**வரலாறு:**

துவக்கத்தில் துருக்கியின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. 1912இல் இத்தாலியின் அதிகாரம். இரண்டாம் உலகப் போருக்குப் பின் பிரிட்டனும் ஃபிரான்சும் இதனைக் கைப்பற்றின. 1951 இல் சுதந்திரம் பெற்றது. வயது வந்தோர் அனைவரும் 'பேசிக் மக்கள் காங்கிரஸில்' உறுப்பினர்கள். நாட்டில் சுமார் இரண்டாயிரத்துக்கும் அதிகமான காங்கிரஸ்கள் இருக்கின்றன. இவை பொப்புலர் கமிட்டிகளை நியமிக்கின்றன. இவை இரண்டும் சேர்ந்ததே பொது மக்கள் காங்கிரஸ். இவ்அமைப்பே ராஜாங்க விசயங்களை முடிவு செய்கிறது. இக் காங்கிரஸில் எடுக்கும் முடிவுகளை இதனால் தேர்ந்தெடுக்கப்படும் கமிட்டி செயல்முறைப்படுத்துகிறது.

**பொருளாதாரம்:**

முக்கிய விளைபொருட்கள்: பேரீச்சம் பழம், ஒலிவ், வாதுமைக் கொட்டை, எலுமிச்சை, திராட்சை.

**முக்கிய தொழில்கள்:**

மீன் பிடித்தல், புகையிலை பாடம் செய்தல், சாயத்தொழில், நெசவு, உலகில் எண்ணெய் உற்பத்தியில் முன்னணியில் இருக்கிறது.

**நாட்டின் தலைவர்:**

கேர்னல் மௌமர் அல்-கடாபி

**பிரதமர்:**

அபுசையத் ஓமர் தௌர்தா.

## விடுகதைகளும் விடைகளும்

1.இன்றுவரை இல்லாதது, எதிரே இருப்பது எப்படியோ ஒரு சமயம் யாரும் பாராதது. அது என்ன?
2.குண்டுமணி தலையில் இரண்டே இரண்டு தொப்பி. என்ன அது?
3.வீற்றிருக்க நாலுகால் உண்டு. வீசுதற்கோ குஞ்சுவால் இல்லை. அது என்ன?
4.நூறு குருவிகளுக்கும் நுழைவாயில் ஒன்றே. அது என்ன?
5.கண்ணாடிப் பரப்பில் காத்கைகள் பத்து. அது என்ன?
6.யாரைப் பிடித்தாலும் இவனைப்பிடிக்க முடியாது. அது என்ன?
7.கறுத்த மலையில் கதிர்வாள் இரண்டு. அது என்ன?
8.கால் அளவு மயிரிலிலே கறுப்பு எறும்பு மேயுது. அது என்ன,
9.நட்ட நடுக் காட்டுக்குள்ளே நரித்திருடன் ஒருத்தன் திரிநூலை ஏனோ திரித்து விடுகிறான். யார் அது?
10.பிடியில்லா பிடி என்ன பிடி?



**விடைகள்**

1.நாளை 2.பட்டாணி. 3.நாற்காலி
4.வாழைப் பூ 5.படகு 6.புகை
7.யானைக்கொம்பு 8.பேன் 9.எறும்பு
10.தம்பிடி

## அறிவுக்கு ஐந்து
### வில்லியம் ஷேக்ஸ்பியர்



**★ ஷேக்ஸ்பியர் எங்கே பிறந்தார்?**

இங்கிலாந்தில் உள்ள ஸ்ரேட் போர்ட்டன் ஏவன் என்ற இடத்தில் 1564ம் ஆண்டு பிறந்தார்.

**★அவரது சின்ன வயதில் எப்படியிருந்தார்?**

பள்ளிப்படிப்பை 1580ம் ஆண்டு நிறுத்திக் கொண்டார். தனது பதினெட்டாவது வயதில் ஆனி ஹாத்தவே என்பவரை திருமணம் செய்தார். லண்டன் நகரில் குடியேறினார்.

**★ லண்டனில் என்ன செய்தார்?**

நிறைய நாடகம், கவிதை எல்லாம் எழுதினார். இவரது முதல் புத்தகமான 'வீனஸ் அன்ட் அடோனி' 1593ம் ஆண்டு வெளியாகியது. பெரும் வரவேற்பைப் பெற்றது.

**★ எத்தனை நாடகங்கள், பாடல்கள் எழுதினார்?**

'சானட்ஸ்' எனப்படும் 14 வரி சிறு பாடல்கள் 154 எழுதினார். 38 நாடகங்கள் எழுதியுள்ளார். ஹாம்லெட், மேர்ச்சென்ட் ஒஃப் வென்னிஸ், ரோமியோ அண்ட் யூலியட், மற்றும் கிங்லியர் போன்ற நாடகங்கள் புகழ் வாய்ந்தவை.

**★ எப்போது அமரரானார்?**

தனது 52வது வயதில்-1616ம் ஆண்டு ஏப்பரல் 23ம் திகதி மரணமடைந்தார்.

## அதிவேக ரயில் வண்டி



உலகிலேயே மிக வேகமாகச் செல்லும் 'ஷின்கான் சன்' என்ற ஒரு புல்லட் ரயில் வண்டியை ஜப்பான் இந்த வருடம் அறிமுகப்படுத்த உள்ளது.

14 பெட்டிகளைக் கொண்ட இந்த ரயில் வண்டி 623 கி.மீட்டர் தூரத்தை மணிக்கு 300 கி.மீட்டர் வேகத்தில் 2 மணி 10 நிமிடங்களில் கடக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

# விலை உயர்ந்த குற்றம்

22

## பட்டுக்கோட்டை பிரபாகர்

ஆனியின் வீட்டிற்குத் திரும்பி நடந்த கென்னடி தெரு முனையில் பப்ளிக் பூத் பார்த்ததும் உடனே நுழைந்து, தூதரக அலுவலகத்திற்கு போன் செய்து, "நான் ஒரு கார் எண் சொல்கிறேன். அதன் உரிமையாளரின் முகவரி தேவை. சற்றுக் கழித்து நானே போன் செய்கிறேன். தெரிந்து கொள்கிறேன்." என்று சற்று முன் பார்க்கர் ஸ்மித்தை ஏற்றிச் சென்ற காரின் எண்ணைச் சொன்னார்.

வெளியே வந்தார்.

"மிஸ்டர் நியூட்டன். நீங்கள் அங்கே செல்லுங்கள். நான் தகவல் தெரிந்து கொண்டு வருகிறேன்."

நியூட்டன் ஆனியின் வீட்டுக்கு வந்த போது.. பரத்; சுசிலா, பப்பு மூவரும் அந்த வீட்டின் வேறு, வேறு அறைகளில் மும்முரமாக அலமாரிகளில், மேஜை டிராயர்களில், சூட்கேஸ்களில் எதையோ தேடிக் கொண்டிருந்தார்கள்.

"பரத், என்ன தேடறிங்க?" என்றார் நியூட்டன்.

"ஆனி சாகறதுக்கு முன்னால என் பேண்ட்ல, இதோ பாருங்க. ரத்தத்தால ஒரு தேதி எழுதிட்டு செத்துட்டா. 1.10.87. அவடைரியில அந்த தேதியில ஏதோ விஷயம் இருக்கணுங்கறது என் யூகம். அதான் டைரி தேடறோம். இன்னும் கிடைக்கலை."

"போலீசுக்கு..."

"பப்பு தகவல் சொல்லிட்டு வந்தாச்சு. இப்ப வந்துடுவாங்க. அது சரி நீங்க துரத்திப் போனது என்ன ஆச்சு?"

"கிட்டே நெருங்கறதுக்குள்ளே ஒரு கார் வந்து அந்தாளைத் தூக்கி அள்ளிப் போட்டுக்கிட்டுப் போய்டுச்சி. தொடர முடியலை. பின் பக்க சாயலை வச்சிப் பார்க்கிறப்போ ஆனியைச் சுட்டுட்டு ஓடின அவன் பார்க்கர் ஸ்மித் மாதிரிதான் தெரியுது."

சுசிலா வியர்த்துப் போய் அந்த அறையிலிருந்து வெளியே வந்தாள். "இது 88ம் வருஷ எங்கேஜ்மெண்ட் டைரி. இதைத் தவிர இந்த ரூம்ல வேற எதுவும் இல்லை. இதிலியும் உபயோகமா தகவல் எதுவும் இருக்கிற மாதிரி தெரியலை."

அதற்குள் உற்சாகமாக உள்ளே வந்தார் கென்னடி.

"பார்க்கர் ஸ்மித் ஏறிப் போன வண்டி ஜோ அண்ட் ஜோங்கிற தனியார் துப்பறியும் ஸ்தாபனத்தோட வண்டி. யோசிச்சிப் பார்க்கிறப்போ பார்க்கர் ஸ்மித் பையனைக் கடத்திட்டு வந்தது இந்த நிறுவனத்துக்ககத்தான் இருக்கணும். இது தனியார் நிறுவனம் தான். அதனால நாம் தயங்காம இனி போலீஸ் உதவியை நாடலாம்னு நினைக்கிறேன்."

பரத் அதை ஆமோதித்து, தேதி விஷயம் சொல்ல... மண்டையைச் சொறிந்து கொண்டு யோசித்தார் கென்னடி.

"ஒரு வேளை 1.10.87 ங்கிறது இப்படி இருக்கலாமோ?" என்றான் பரத் திடீரென்று.

"எப்படி?"

"வெஸ்லி எங்க இருக்கான்னு கேட்டோம் ஆனியை. அவ பதில் சொல்ல வந்தப்பதான் சுடப்பட்டா. இதான் பதில்னா. இது தேதி இல்லை. வெஸ்லி இருக்கிற இடம், அப்படி வச்சிப் பார்த்தா... ஒண்ணாவது அவென்யுல, பத்தாவது தெருல, எண்பத்தி ஏழாம் நம்பர் வீடுன்னு அர்த்தம் எடுத்து ட்ரை பண்ணிப் பார்க்கலாமா?"



"நல்ல யோசனை. இங்கே நடந்ததைச் சொல்றதுக்கு பப்பு இங்கே இருக்கட்டும். நாம் பரத் சொல்றபடி இந்த அட்ரஸ் போய்ப் பார்த்துட்டுத் திரும்பலாம்." என்றார் நியூட்டன்.

பப்பு தவிர அனைவரும் கென்னடியின் காரில் புறப்பட்டார்கள்-ரெஜினா பார் அருகில் இருந்து.

➡☆☆⬅

பார்க்கர் ஸ்மித் யோசித்தார்.

இந்தியப் போலீஸ் இங்கே கால் வைத்து விட்டது. இந்த நிலையில் சரவணகுமாரை என் திட்டப்படி சி.ஐ.ஏ.விடம் ஒப்படைப்பது என்பது இயலாத காரியம். ஜோ அண்ட் ஜோவிடம் செமத்தியாக மாட்டிக் கொண்டாகி விட்டது. தலையில் சுடத் தயாராக பிஸ்டல் இருக்கிறது. வீணாகப் பிடிவாதம் பிடித்துச் சாவதில் ப்ரயோஜனம் என்ன? ப்ரூடி ஜேம்ஸ் நிச்சயம் சுடுவான். கொலைகளுக்கு அஞ்சுகிற ரகமே இல்லை.

"என்ன முடிவு செய்தீர்கள் மிஸ்டர் பார்க்கர்?" என்றான் ப்ரூடி ஜேம்ஸ்.

"உண்மையைச் சொல்வதைத் தவிர எனக்கு வேறுவழி தற்சமயம் இல்லை."

"வெரிகுட். தன் பலவீனமும், எதிரியின் பலமும் உணர்ந்து நடப்பவனே புத்திசாலி. நீங்கள் புத்திசாலி என்பதில் சந்தேகமே இல்லை. வெஸ்லி எங்கே இருக்கிறான்?"

"சொல்கிறேன். சரவணகுமாரைத் தங்களிடம் ஒப்படைக்கிறேன். தங்கள் நிறுவனத்திற்கு ஏன் துரோகம் செய்ய நினைத்தேன் என்பதற்கான என் விளக்கத்தைச் சொல்ல அனுமதியுங்கள். அது நியாயமானதாகப் பட்டால், என்னை எந்தத் தொந்தரவும் செய்யாமல் விட்டுவிட வேண்டும்."

"மிஸ்டர் பார்க்கர், உங்கள் விளக்கம் எல்லாம் பிறகு, தற்போது முதலில் நீங்கள் சொல்ல வேண்டியது வெஸ்லியின் இருப்பிடம். நேரம் கடத்த வேண்டாம்."

"முதல் அவென்யு, பத்தாவது தெரு, எண்பத்திஏழாம் வீடு" என்றார் பார்க்கர் ஸ்மித்.

"ஜான்சன், காரைத் திருப்பு. நேராக நண்பர் சொன்ன விலாசத்திற்குப் போ. கையோடு அந்தச் சிறுவனைப் பெற்றுக் கொண்டு, பிறகு ஏதோ விளக்கம் சொல்கிறாராமே, அதைக் கேட்டுக் கொள்ளலாம்." என்றார் ப்ரூடி ஜேம்ஸ்.

கார் பாதை மாறியது.

விலாவில் ரகசியமாக ப்ரூடி ஜேம்சின் பிஸ்டல் தொட்டுக் கொண்டே இருக்க, பார்க்கர் ஸ்மித் சங்கேத முறையில் பஸ்ஸரை விட்டு விட்டு நான்கு முறை அழுத்தினதும் கதவைத் திறந்தான் வெஸ்லி.

பாக்கர் ஸ்மித்தைப் பார்த்து முகம் மலர்ந்த அவன் அருகில் நின்றிருந்த ப்ரூடி ஜேம்சையும், ஜான்சனையும் கவனித்துத் திகைத்தான்.

"சரவணகுமார் எங்கே?" என்றான் ப்ரூடி ஜேம்ஸ்.

"அந்த அறையில் உறங்குகிறான்". என்றான் பிஸ்டல் பார்த்த பிறகு.

"ஜான்சன், போ. போய்த் தூக்கி வா. நீ தூக்கிச் சென்று காரில் கிடத்தி விட்டு வந்த பிறகு இவர்களை அழைத்துச் செல்லலாம்."

"யெஸ் சார்" என்று ஜான்சன் உள்ளே செல்ல...

"என்ன இதெல்லாம்?" என்றான் வெஸ்லி.

"ஷ்! சும்மா இரு வெஸ்லி" என்றார் அமைதியாக பார்க்கர் ஸ்மித்.

ஜான்சன் உறக்கத்தில் இருந்த சரவணகுமாரை கழுத்தினடியிலும், முழங்கால்களுக்கு அடியிலும் கைகளைக் கொடுத்து தூக்கி வந்தான். வீட்டின் திறந்திருந்த வாசல் வழியாக, காத்திருந்த காருக்குக் கொண்டு சென்றான்.

சற்றுத் தூரத்திலேயே கிர்ர்ர்ரீச் என்று பிரேக் அடித்தார் கென்னடி.

"அங்கே பாருங்கள், அதே வண்டி எண்பத்திஏழாம் நம்பர் வீட்டு வாசலில் நிற்கிறது."

"சந்தேகமே இல்லை. இந்த வீட்டுக்குள் தான் சரவணகுமார் இருக்கிறான்."

"காரின் ஹெட் லைட்டுகளை அணையுங்கள். அதோ பாருங்கள். வீட்டுக்குள்ளிருந்து ஒரு சிறுவனைத் தூக்கி வருகிறான்."

"சந்தேகமே இல்லை. அது சரவணகுமார் தான்."

"இந்த இடத்தில் இருந்து மாற்றுகிறார்களோ? என்ன செய்யப் போகிறார்கள். எங்கே கொண்டு செல்லப் போகிறார்கள்?"

பரத் அவசரமாகக் கென்னடியைக் கேட்டான்.

"நமது தூதரகத்தின் ஹை கமிஷனரை இப்போது உடனடியாக போனில் தொடர்பு கொள்ள முடியுமா?"

"முடியும். போனுக்கு எங்கே செல்வது?"

"அவன் சரவணகுமாரை காரில் கிடத்தி விட்டு உள்ளே போகிறான். எப்படியும் அவன் திரும்பி வந்து காரை எடுக்க இரண்டு மூன்று நிமிடங்கள் ஆகலாம். அதற்குள் வேகமாய் ஓடிப் போய் சரவணகுமாரை இந்தக் காருக்குத் தூக்கி வந்து விட முடியுமா?"

"மிகவும் ரிஸ்க் இருக்கிறது. அவர்களிடம் துப்பாக்கிகள் இருக்கின்றன. அதை மறந்து விடக்கூடாது."

"இதோ வருகிறேன்" என்று கென்னடி காரில் இருந்து குதித்து அருகில் இருந்த வீட்டுக்கு ஓடி அவசரமாகத் திறக்கச் செய்து அனுமதி பெற்று போன் எடுத்து 911 எண்கள் சுழற்றி, "போலீஸ்?" என்று கேட்டுக் கொண்டு மள மள வென்று செய்தி சொல்லி வேகமாக ஓடி வந்தார்.

அவர் காரில் ஏறிக் கொண்டு ஸ்டார்ட் செய்த போது சரவணகுமாரோடு அந்தக் கார் தொலைவில் சென்று கொண்டிருந்தது.

"சரவணகுமாரைத் தவிர அந்தக் காரில் நான்கு பேர்கள் ஏறினார்கள். அதில் ஒருவர் "பார்க்கர் ஸ்மித் தான்" என்றார் நியூட்டன்.

"இன்னும் வேகமாய்ப் போக முடியாதா?" என்றாள் சுசிலா.

"அவசியம் இல்லை. இன்னும் இரண்டு நிமிடங்களில் டிராஃபிக் போலீஸ் அந்தக் காரை வளைத்துக் கொள்ளும்" என்றார் கென்னடி.

அதே போல மூன்றாவது நிமிடம் ஜான்சன் ஓட்டிய கார் செக்கிங் என்ற முறையில் மறிக்கப்பட்டு, அவர்களின் ஆயுதங்களை உபயோகிக்கச் சந்தர்ப்பம் தராமலேயே மடக்கப்பட்டனர்.

விசாரணைக் கைதிகளாக நான்கு பேரும் கொண்டு செல்லப்பட, சரவணகுமார் உடனடியாக நியூயார்க் ஹாஸ்பிடலுக்கு அனுப்பப்பட்டான்.

"ஹலோ..ஓ..ஓ.ஓ.." என்றார் ஜீவானந்தம் ஒரு காதை அடைத்துக் கொண்டு, கிட்டத்தட்ட நியூயார்க்கிலேயே லேசாக போன் உதவி இல்லாமல் கேட்டிருக்கும்

"ஹலோ, நான் பரத் பேசறேன் சார். நியூயார்க் ஹாஸ்பிடல்லேர்ந்து பேசறேன். உங்க பையனை மீட்டுட்டோம். அவங்களை அரெஸ்ட் செஞ்சிருக்காங்க. சரவணகுமார் நல்லா இருக்கான். ரெண்டு நாள் ரெஸ்ட் எடுத்தாப் போதும். நாங்க ரெண்டாம் தேதி பம்பாய் வர்றோம். மறுநாள் மெட்ராஸ் வர்றோம். உங்க பையன் கூடப் பேசுங்க."

"பேசச் சொல்லுங்க" என்று குதித்தார் ஜீவானந்தம்.

"இந்திரா, கிட்டை வாடி. பேசு. உன் பையன்கிட்டே பேசு." என்று குதூகலித்தார்.

"அப்பா" என்றான் சரவணகுமார்.

"நான் அம்மா பேசறேண்டா கண்ணு. எப்படிடா இருக்கே?"

"நல்லா இருக்கேன்மா. எனக்கு ஒண்ணும் இல்லைம்மா. சும்மா ஊசி போட்டுக் கிட்டே இருந்தாங்களா, அதிலே டயர்டா இருக்கு. பசி எடுக்கலை. ரெண்டு நாள்ல சரியாயிடும்மா. பரத் ஆங்கிள், சுசிலா ஆன்ட்டி நல்லா கவனிச்சிக் கிறாங்க."

மேலும் பேசிவிட்டு வைத்தார் ஜீவானந்தம்.

உடனே போன் போனாய் தன் நண்பர்கள், உறவினர்கள் அத்தனை பேருக்கும் சரவணகுமார் மீட்கப்பட்டதைச் சொல்ல ஆரம்பித்தார். **(முற்றும்)**


திக்... திக்... திக்

ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஒரு திருப்பம்



யார் கொலையாளி? இறுதிவரை சஸ்பென்ஸ்

புதிய மர்மத் தொடர்

எளிமை–இளமை–புதுமை

அடுத்த வாரம் ஆரம்பம்

மரணித்துவிட்ட மர்மக்கதை மன்னன் ராஜேந்திரகுமார் எழுதியது

விறு - விறு - சுறு - சுறு நாவல்


## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: பாத்திமா ருக்சானா.
வயது: 18
முகவரி: 32-Y FIRST MOSQUE LANE, COLOMBO-12
பொழுது போக்கு: வானொலி பத்திரிகை வாசித்தல்.

பெயர்: ரீ.ஜெயக்குமார்.
வயது: 22
முகவரி: கிராம சபை வீதி, வந்தாறுமூலை.
பொழுது போக்கு: புத்தகம், வானொலி, தொலைக்காட்சி, சமூகசேவை.

பெயர்: என்.எஸ். நவம் (மாஸ்டர்).
முகவரி: வுலோசம் வீடியோ சென்டர், இல-14, ஆண்டிவால் வீதி, கொழும்பு-13
பொழுது போக்கு: பத்திரிகை, பேனா நண்பர் தொடர்பு, ஓவியம் வரைதல்.

பெயர்: எம். நௌசாத்.
முகவரி: P.O.Box-5418, CODE NO:22065, AL-SALMIYA, KUWAIT.
பொழுது போக்கு: வழமையானவை

பெயர்: ஏ.ஆர். ரியாஸ் முகமட்.
முகவரி: P.O.BOX-15802, DOHA, QATAR.
பொழுது போக்கு: வழமையானவை

பெயர்: பௌசல் றகுமான்.
வயது: 18
முகவரி: 162 கல்வால்ல, கதுறுவெல.
பொழுது போக்கு: கிரிக்கெட், வானொலி, பத்திரிகை.

பெயர்: டபிள்யு. மகேந்திரராஜா.
வயது: 26
முகவரி: 55, ஆற்றங்கரை வீதி, கஞுதாவளை, மாத்தளை.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: பா.மதிவதனி
வயது: 16
முகவரி: 256/29 உட்துறைமுக வீதி, திருகோணமலை.
பொழுது போக்கு: கவிதை, கதை, விரும்பிப் படித்தல்.

பெயர்: கு.நவகலா
வயது: 18
முகவரி: சாகாம வீதி, சின்னப் பனங்காடு, அக்கரைப்பற்று.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை, கதைப்புத்தகம்.

பெயர்: எஸ்.சுகுமார்.
வயது: 26
முகவரி: 18, கொத்மலை வீதி, நாவலப்பிட்டி.
பொழுது போக்கு: இலக்கியம், சினிமா, அரட்டை.

பெயர்: ஏ.ஆர்.ப்ரியா எந்தணி.
வயது: 18
முகவரி: யுனிட்,"E" 11,120 76 மிஜுவாங்கொட வீதி, ஏக்கல-ஜா எல.
பொழுது போக்கு: வானொலி, படம், நடிகர் தொடர்பு.

பெயர்: எம்.எல்.எம். ஹுஸைன்.
வயது: 22
முகவரி: 163/3 மருதானை வீதி, பேருவளை.
பொழுது போக்கு: கராட்டி, குங்பு, தினமுரசு, வானொலி.



படிப்பகம்

www.padippakam.com

63

# தாய்

## மக்சீம் கார்க்கி

தாய் ஆர்வத்தோடு குறுக்கிட்டுப் பேசினாள்:

"அந்த சீமாட்டி திரும்பவும் வருவாள், வந்து நான் உன்னைப் பேச விட்டதற்காக, என்னை கண்டிப்பாள்."

அவள் ஒன்றும் சீமாட்டியில்லை. அவள் ஒரு புரட்சிக்காரி, நம் தோழி. ஒரு அதிசயமான பெண். அவள் கோபிக்கப் போவது என்னவோ நிச்சயம், அவள் எல்லோரையும் தான் கோபித்துப் பேசுகிறாள்."

"அவன் மிகுந்த சிரமத்தோடு உதடுகளை அசைத்துக் கொண்டு தனது அண்டை வீட்டுக்காரியின் வாழ்க்கையைப் பற்றிப் பேச ஆரம்பித்தான். அவனது கண்கள் களிப்பெய்தி நகைத்தன. அவன் வேண்டுமென்றே அவளைக் கேலி செய்வதாகத் தாய் கருதினாள். அவனது நீலம் பாரித்த ஈரம் படிந்த முகத்தைப் பார்த்து விட்டு, பயப் பீதியோடு தனக்குத் தானே நினைத்துக் கொண்டாள்.

"இவன் செத்துக்கொண்டிருக்கிறான்."

லுத்மீலா திரும்ப வந்தாள். உள்ளே நுழைந்தவுடன் அவள் கதவை ஜாக்கிரதையாகத் தாளிட்டு விட்டுத் தாயின் பக்கம் திரும்பினாள்:

"உங்களுடைய தோழர் சீக்கிரமே உடை மாற்றிக் கொள்ள வேண்டும்; என் அறையை விட்டுக் கூடிய சீக்கிரம் போக வேண்டும். எனவே நீங்கள் உடனே போய் அவனுக்கு மாற்று உடைகள் வாங்கி வாருங்கள். இந்தச் சமயத்திலே சோபியாவும் இல்லாது போய் விட்டாள். அது ஒரு பெரிய சங்கடம். ஆட்களை இனம் மாற்றி வேஷம் போடுவதில் அவள்தான் மிகவும் கை தேர்ந்தவள்."

"அவள் நாளைக்கு வருகிறாள்" என்று கூறிக் கொண்டே சவுக்கத்தை எடுத்துத் தோளின் மீது போட்டுக் கொண்டாள் தாய்.

அவளுக்கு எப்போதெப்போதெல்லாம் வேலை செய்யச் சந்தர்ப்பம் கிடைக்கிறதோ, அப்போதெல்லாம் அவளது இதயத்தில், அந்த வேலையைச் சீக்கிரமாகவும் திறம்படவும் முடிக்க வேண்டும் என்ற ஆர்வம் நிரம்பி ததும்பும். அந்த வேலையைத் தவிர அந்தச் சமயத்தில் வேறு எதைப் பற்றியுமே அவள் சிந்திக்க மாட்டாள்.

"அவனை எந்த மாதிரி உடை தரிக்கச் சொல்ல உத்தேசம்?" என்று காரியார்த்தமான குரலில், தனது புருவங்களைச் சுழித்துக் கொண்டே கேட்டாள் தாய்.

"அதைப் பற்றிக் கவலையில்லை, அந்தத் தோழர் இன்றிரவு போயாக வேண்டும்."

"இராத்திரி வேளைதான் மோசமானது. தெருவிலே ஜன நடமாட்டமே இருக்காது. போலீசாரும் விழிப்பாயிருப்பார்கள். இவனும் அப்படியொன்றும் கெட்டிக்காரப் பேர்வழியில்லை- உங்களுக்குத் தெரியாதா?"

இகோர் கரகரத்துச் சிரித்துக் கொண்டான்.

"நான் உன்னை ஆஸ்பத்திரியில் வந்து பார்க்கட்டுமா?" என்று கேட்டாள் தாய்.

இருமிக் கொண்டே தலையை அசைத்து ஆமோதித்தான் அவன்.

"நீங்களும் நானும் அவனது படுக்கையருகே மாறி மாறித் துணைக்கு இருக்கலாமா?" என்று தனது கரிய கண்களால் தாயைப் பார்த்துக் கொண்டே கேட்டாள் லுத்மீலா. "உங்களுக்குச் சம்மதம் தானே? சரி...இப்போது எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாகப் போய்வாருங்கள்."

அவள் அதிகாரம் கலந்த அன்போடு தாயின் கரத்தைப் பற்றி அவளை வாசல் நடைக்குக் கூட்டிச் சென்றாள். வாசல் நடையைக் கடந்து வெளியே வந்ததும், லுத்மீலா நின்று கொண்டே பேசினாள்:

"நான் உங்களை இப்படி வெளியே விரட்டியடிக்கிறேன் என்பதை எண்ணி மனம் புண்பட்டுப் போகாதீர்கள். அவனோடு பேசிக்கொண்டிருப்பது அவனுக்கு ரொம்ப ஆபத்து. அவன் பிழைக்கக்கூடும் என்றே நான் இன்னும் நம்புகிறேன்....."

அவள் தன் கரங்களை இறுகப்பற்றி அழுத்தினாள். அவள் பிடித்த பிடியில் எலும்புகளே நொறுங்கும் போலிருந்தது; கைகளைப் பிடித்தவாறே அவள் கண்களை மூடினாள். இந்தப் பேச்சுத் தாயைக் கலவரப் படுத்தியது.

"அட கடவுளே! என்ன சொல்லுகிறீர்கள்?" என்று குழறினாள் தாய்.

"சரி. போகிறபோது எங்கேயாவது ஒற்றர்கள் நிற்கிறார்களா என்று பார்த்துக் கொண்டு போங்கள்" என்று மெதுவாகச் சொன்னாள் லுத்மீலா. அவள் தன் கரங்களைத் தன் முகத்துக்கு நேராக உயர்த்தி நெற்றிப் பொருத்துக்களைத் தேய்த்துவிட்டுக் கொண்டாள். அவளது உதடுகள் துடித்தன; முகம் சாந்தமடைந்தது.

"எனக்குத் தெரியும்" என்று பெருமிதத்தோடு சொன்னாள் தாய்.

வெளி வாசலுக்குச் சென்றவுடன் அவள் ஒரு நிமிஷம் அங்கேயே நின்று தன்னுடைய துப்பட்டியைச் சரி செய்து கொண்டே சுற்றுமுற்றும் கூர்மையோடு, எனினும் வெளிக்குத் தெரியாமல், கவனித்துக் கொண்டாள். கூட்டத்தில் கூட ஒற்றர்களை அடையாளம் கண்டு தீர்மானிப்பதில் அவள் அநேகமாகத் தவறுவதே இல்லை. அவர்களது எடுப்பாய்த்தெரியும் கவனமற்ற நடை, அவர்களது அசாதாரணமான பாவனைகள், சோர்வும் எரிச்சலும் நிறைந்த அவர்களது முக பாவம்; இவற்றிற்கெல்லாம் பின்னால் மோசமாக ஒளிந்து கொண்டிருக்கும் அவர்களது கூரிய கண்களிலே மறைந்து கிடக்கும் குற்றம் நிறைந்த அச்சம் கொண்ட நோக்கு– எல்லாவற்றையும் அவள் நன்கு தெரிந்து வைத்திருந்தாள்.

ஆனால் இந்தத் தடவையோ அவள் அந்த மாதரி முகங்கள் எதையும் காண வில்லை; எனவே தெரு வழியாக அவசர அவசரமாக நடந்து சென்றாள். அவள் ஒரு வண்டியை வாடகைக்குப் பிடித்துக்கொண்டு, வண்டிக்காரனை மார்க்கெட்டுக்கு ஓட்டிச் செல்லும்படி உத்தரவிட்டாள். மார்க்கெட்டில், அவள் நிகலாய்க்காக வாங்கவேண்டிய துணிமணிகளைத் தேர்ந்தெடுப்பதில் விடாப் பிடியாகப் பேரம் பேசி விலையைக் குறைத்துக் கேட்டாள். அத்துடன் தன்னுடைய குடிகார கணவனால்தான் இந்த மாதிரியான நிலைக்கு தான் வந்து விட்டதாகவும், அவனுக்கு மாசாமாசம் ஒவ்வொரு புதுச் சட்டை துணிமணி எடுத்துக் கொடுக்க நேர்ந்துவிட்டதாகவும் ஒரு பொய்க்கதையையும் கடைக்காரனிடம் கூறினாள். அவளது கட்டுக்கதையைக் கேட்டு, கடைக்காரர்கள் கொஞ்சங்கூட மசியவில்லை. இருந்தாலும் அதுவே அவளுக்கு ஒரு பெரும் ஆனந்தத்தைத் தந்தது. வழியிலே அவளுக்கு இன்னொரு எண்ணம் உதித்தது. நிகலாய்க்குப் புதிய துணிமணிகள் வாங்கவேண்டிய அவசியத்தைப் போலீஸ்காரர்களும் உணரக் கூடுமென்றும், எனவே அவர்கள் தங்களது ஒற்றர்களை மார்க்கெட்டுக்கும் அனுப்பியிருக்கக் கூடுமென்றும் அவள் நினைத்தாள். எனவே புறப்பட்டுச் சென்றது போலவே மிகுந்த ஜாக்கிரதையோடும் கவனத்தோடும் அவள் இகோரின் அறைக்குத் திரும்பி வந்தாள்; பிறகு அவள் நிகலாயுடன் நகரின் எல்லைவரை காவலாகச் சென்றாள். அவர்கள் தெருவில் ஆளுக்கொரு பக்கமாக நடந்து சென்றார்கள். நிகலாய் தலையைத் தாழ்த்திக் கொண்டு தத்தித்தத்தி நடந்து செல்வதையும், அவன் அணிந்திருந்த நீளமான பழுப்பு நிறக்கோட்டினால், அவனது கால்கள் அடிக்கடி முட்டிக்கால் தட்டிக் கொள்வதையும், மூக்கின் மீது வந்து விழுந்து மறைக்கும் தொப்பியை அவன் அடிக்கடி பின்னால் தள்ளிவைத்துக் கொள்வதையும் கண்டு தாய்க்குச் சிரிப்பாயும் மகிழ்ச்சியாயும் இருந்தது. ஆள் நடமாட்டமே அற்ற ஒரு சந்தில், அவர்கள் சாஷாவைச் சந்தித்தார்கள்; நிகலாயைப் பார்த்துத் தலையை அசைத்து விடைபெற்றுக் கொண்டு தாய் வீட்டுக்குத் திரும்பினாள்.

"ஆனால் பாவெல் மட்டும் இன்னும் சிறையிலேயே இருக்கிறான்... அந்திரேயும்..." என்று துக்கத்தோடு நினைத்துக் கொண்டாள் அவள்.

நிகலாய் இவானவிச் அவளை உணர்ச்சி வெறியோடு வந்து சந்தித்தான்.

"இகோரின் நிலைமை மோசமாயிருக்கிறது" என்றான் அவன்: "ரொம்ப மோசமானநிலை! அவர்கள் அவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் விட்டார்கள். லுத்மீலா இங்கே வந்திருந்தாள். உங்களை வரச் சொன்னாள்..."

"ஆஸ்பத்திரிக்கா?"

பதறிப்போன உணர்ச்சியோடு நிகலாய் தனது மூக்குக் கண்ணாடியைச் சரி செய்து கொண்டே, ரவிக்கை அணிந்து கொள்வதில் தாய்க்கு உதவினான்.

"இதோ-இந்தக் கட்டையும் எடுத்துச் செல்லுங்கள்" என்று தனது வெதுவெதுப்பான ஈரப்பசையற்ற கரத்தால் தாயின் கைவிரல்களை அழுத்திப் பிடித்துக் கொண்டு நடு நடுங்கும் குரலில் சொன்னான் அவன்; "நிகலாய் வெஸோவ்ஷிகோவுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து முடித்து விட்டீர்களா?"

"ஆமாம்."

"இகோரைப் பார்க்க நானும் வருகிறேன்."

தாய் களைப்பினால் மயங்கிப்போய் இருந்தாள். நிகலாயின் பதை பதைப்பு அவளது உள்ளத்தில் ஏதோ வரப்போகும் ஒரு ஆபத்தை அறிவுறுத்தும் பயத்தை எழுப்பி விட்டது.

"அவன் செத்துக் கொண்டிருக்கிறான்" என்ற இருண்ட எண்ணம் அவளது மனத்துக்குள்ளே துடிதுடித்துக் கொண்டிருந்தது.

வெளிச்சம் நிறைந்த சுத்தமான அந்தச் சிறு அறைக்குள்ளே நுழைந்ததுமே, வெள்ளை நிறமான தலையணைகளின் மீது சாய்ந்து கொண்டு நிகலாய் கரகரத்த குரலில் சிரித்துக் கொண்டிருப்பதைத் தாய் கண்டாள்; கண்டவுடன் அவளுக்கு ஒரு பாரம் நீங்கியது போலிருந்தது. அவள் வாசற்படியிலேயே நின்று இகோர் டாக்டரிடம் என்ன சொல்கிறான் என்பதைக் கேட்டாள்:

"நோயாளிக்கு வைத்தியம் பார்ப்பது என்பது, சீர்திருத்தம் பண்ணுவது மாதிரி தான்..."

"உன் அசட்டுப் பேச்சைவிடு, இகோர்!" என்று கலங்கிய குரலில் சொன்னார் டாக்டர்.

"ஆனால், நானோ புரட்சிக்காரன்! சீர்திருத்தங்களைக் கண்டாலே எனக்குப் பிடிக்காது..."

டாக்டர், இகோரின் கையை மீண்டும் அவனது மடிமீது மெதுவாக வைத்துவிட்டு எழுந்து நின்றார்; ஏதோ சிந்தித்தவாறே தமது தாடியைத் தடவி விட்டுக் கொண்டார். இகோரின் முகத்திலுள்ள வீக்கத்தைக் கவனித்துப் பார்த்தார்.

தாய்க்கு அந்த டாக்டரைத் தெரியும். அந்த டாக்டர் நிகலாயின் நெருங்கிய நண்பர்களில் ஒருவர். அவரது பெயர் இவான் தனிலவிச். அவள் இகோரிடம் சென்றாள்; அவன் தன் நாக்கை நீட்டி அவளை வரவேற்றான். டாக்டர் அவள் பக்கம் திரும்பினார்.

"அதென்ன, நீலவ்னா, உங்கள் கையிலிருப்பது என்ன?"

"புத்தகங்களாயிருக்கும்" என்றான் இகோர்.

"இவன் படிக்கக் கூடாது" என்றார் அந்தக் குட்டி டாக்டர்.

"இந்த டாக்டர் என்னை முட்டாளாக்கப் பார்க்கிறார்" என்றான் இகோர்.

அவனது நெஞ்சிலிருந்து குறுகிய ஈரமான மூச்சு கரகரப்புடன் மோதிக் கொண்டு வந்தது. அவனது முகத்தில் துளித்துளியாக வியர்வை பூத்திருந்தது. தனது கையை உயர்த்தி நெற்றியைத் துடைத்துக் கொள்வதே அவனுக்குப் பெரும் சிரமமாயிருந்தது. விசித்திரமாய் அசைவற்றிருந்த அவனது வீங்கிப் போன கன்னங்கள் அகன்ற அன்பு ததும்பும் முகத்தை விகாரப்படுத்தி, அவனது முகவடிவை உயிரற்ற முகமூடியைப்போல் உணர்வற்றுப் போகச் செய்தன. அவனது கண்கள் மட்டும், அந்த வீக்கத்துக்குள்ளாகப் புதைந்துபோய், தெளிவாக இரக்கம் ததும்பும் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தன.

"ஏ! விஞ்ஞானியே! எனக்கு ஒரே களைப்பாயிருக்கிறது. கொஞ்சம் கீழே படுத்துக் கொள்ளலாமா?" என்று டாக்டரைப் பார்த்து கேட்டான் அவன்.

"கூடாது. நீ படுக்கக் கூடாது." என்று விறைப்பாகப் பதில் சொன்னார் டாக்டர்.


"நீ வெளியே போன நிமிஷத்திலேயே நான் படுத்துக் கொள்ளப் போகிறேன்."

"அவனைப் படுக்க விடாதீர்கள், நீலவ்னா! தலையணைகளை ஒழுங்காக வையுங்கள். அவனைத் தயை செய்து பேச விடாதீர்கள். பேசுவது மிகவும் ஆபத்தானது."

தாய் தலையை அசைத்தாள். டாக்டர் விடுவிடென்று நடந்து வெளியே போனார்.

(தொடர்ந்து வரும்)

**அவனது நெஞ்சிலிருந்து குறுகிய ஈரமான மூச்சு கரகரப்புடன் மோதிக்கொண்டு வந்தது. அவனது முகத்தில் துளித்துளியாக வியர்வை பூத்திருந்தது. தனது கையை உயர்த்தி நெற்றியைத் துடைத்துக் கொள்வதே அவனுக்குப் பெரும் சிரமமாயிருந்தது.**



# இளம் மொட்டு மனசு

## கௌரிபாலன்

"பாசண்ணே!".......

"ஓ......வாங்க முதலாளி வாங்க..., எங்க வெள்ளையும் சுள்ளையுமா..? ரெண்டு நாளா வேலைக்கும் ஆள் இல்ல என்ன நடந்தது?" பாஸ் கிண்டலாக கேட்டார்.

"அண்ணே அகதி முகாமுக்கு போனநான்.... அதான்......, அண்ணே.. ஒரு அம்பது ரூவா குடுங்கண்ணே.." கெஞ்சலாக கேட்டான் மணிவேல்.

"எப்பிடி... எப்பிடி... அம்பது ரூவா? வேலையும் செய்ய வரயில்ல.., அதுக்குள்ள அம்பது ரூவா?"

"அண்ணே..! அவசரமா தேவையண்ணே –நாளைக்கு கட்டாயம் வேலைக்கு வருவன் அண்ணே.."

"எதுக்கிடா காசு"? "அது வந்துண்ணே.."

"என்னடா வந்து, போய்.."

"அண்ணே நான் ஒரு பெண்ண லவ் பண்றன் அண்ணே.."

"என்ன நீ லவ் பண்றியா..? அநாதப் பயல் நீ, உன்ன எவள்டா லவ் பண்றாள்..?"

"அண்ணே இரவல் சைக்கில்ல வந்து, போக் உடஞ்சு, கைல காசு இல்லாம அழுதிண்டு நின்னுதேயண்ணே, அந்தப் பொன்னுதான். அதுவா வந்து, என்ன லவ் பண்றதா சொல்லிச்சு, அது தான் நானும் லவ் பண்ணிட்டேன். அண்ணே காசு குடுங்கண்ணே தியட்டறில காத்து நிக்குமண்ணே..!"

"முஞ்சயப்பார் உவர் தரையில் புல் முளைச்சமாதிரி, அங்கு ஒண்டு, இங்க ஒண்டா, மீசை மயிர், அதுக்குள்ள உனக்கு பொம்பிள கேக்குதா? போடா.., காசுமில்ல.. மண்ணாங்கட்டியுமில்ல.."

"அண்ணே.."

"போடா.. இதுக்குமேல நிண்டா ஸ்பெனர்தான் வரும்.!

நிச்சயம் நடக்கும் என்று தெரியும். பின்வாங்கினான் மணிவேல்.

'பாஸ்....! அநாதைப் பயல் எண்டா திட்டினி? ஸ்பெனரால அடிப்பியா பாப்பம்.., நான் யார் என்று காட்டுரன்' மனதுக்குள் கறுவினான் மணிவேல்.

************

செலியில் வந்தான் மணிவேல். "என்னங்க செலியில் வாறிங்க?" வியப்பாக கேட்டாள் வாசுகி. "கராச்சுக்கு சேவிசுக்கு வந்தது. றயல் பாக்கனும் எண்டு பாசுக்கு றீல்விட்டுட்டு வந்திட்டன்." செலி கடற்கரை வீதியில் காதல் வாகனமாகிப் போனது. "ஏங்க.., என்ன இருந்தாலும் நாங்க நேற்று தியட்டர்ல அப்பிடி ஏமாந்திருக்ககூடாதுங்க.. ஆமாங்க.., காதலுக்கு கண் இல்லை எண்டு தான் சொல்வாங்க, எங்களுக்கு நாள் கூட தெரியாம, போயாவில படம் பார்க்க போனமேங்க?" சொல்லும் போதே, நேற்று மட்டும் போயாவாக இல்லா விட்டால், எவ்வளவு அவமானப்பட வேண்டி வந்திருக்கும், என்று எண்ணிக் கொண்டான் மணிவேல்.



"ஏங்க பேசாம வர்றீங்க..?, சினிமாவில வர்றமாதிரி ஏதாவது பன்னுங்களேன்".

"அது என்னங்க சினிமாவில வாற மாதிரி?"

"காதலன் படத்தில வாற மாதிரிங்க.."

"ஐய்யயோ.. என்னால அப்பிடி எல்லாம் ஏலாதுங்க."

"அப்ப ஏதாச்சும் பன்னுங்க.."

"கடவுளே.. ஒரு ஐடியாவும் வர மாட்டேங்குதே.."

"ம்..ஐடியா வந்துட்டுதுங்க.."

"என்னங்க!"

"கெட் லைட்ட போட்டுட்டேனுங்க.."

" பகல்ல எதுக்குங்க லைட்..?"

"எதிர்ல வர்றவங்க எல்லாரும் நம்மப் பாத்து கையசச்சுட்டு போவாங்க பாருங்க!"

"ஆமா பிரமாதமுங்கோ... வேற ஏதாச்சும் பன்னுங்களேன்.."

"சத்தியமா.. இதுக்குமேல ஏதாச்சும் செய்து அடிவாங்கிற உடம்பில்லங்க இது..., எவனாவது இழிச்சவாயன் கிடைச்சாத்தான் உண்டு."

"அங்க. அங்க.. வர்றார் சாமு அண்ணன், எங்க அகதி முகாமில கடைவச்சிருக்கிறார். சீனவெடி சுட்டாக்கூட கிணத்துக்குள்ள இறங்கிடுவார். ரொம்ப பயந்தவர். பயமில்லாம ஏதாவது பன்னுங்க.. ஆமாங்க.., ஏங்க நிப்பாட்றீங்க?"

"இப்ப பாருங்க.." கெட் லைட் பத்துவதாக சிக்னல் காட்டி வந்த சாமுவை, கையைக் காட்டி கூப்பிட்டான் மணிவேல். "என்னய்யா ஒரு பொண்ணும், ஆணும் ஒன்னாப் போனா கைகாட்டத் தோணுதா..?"

"ஐய்யோ அப்பிடி இல்லங்க. உங்க பைக்ல கெட் லைட் பத்துதுங்க. அதுதான் கை காட்டினேன்.."

"யோவ் என்ர மோட்டசைக்கில், நான் இரவிலயும் லைட் போடுவன், பகல்லயும் லைட் போடுவன், நீ யாரையா அத கேட்க? உன் வேலையைப் பார்த்துட்டுப் போய்யா.." விதிர் விதிர்த்துப் போன சாமு, திரும்பித் திரும்பிப் பார்த்துப் போனார்.

"பிரமாதப் படுத்திட்டீங்க போங்க"

"சரிங்க இதுக்குமேல ஏலாதுங்க, செலில ஏறுங்க.."

"ஐய்யயோ..."

"என்னங்க.."

"இப்ப என்னங்க பண்றது. சாமு அண்ணன் இரண்டு பேரையும் ஒன்னா செலில வந்தத பாத்துட்டுதே.."

"பாக்கிறது என்னங்க.., கோபமா எல்லா போகுது.."

"அப்புச்சிக்கிட்ட சொல்லிச்சின்னா, பெண்ட நிமித்திடுமேங்க"

"இப்ப என்ன பண்றது..?"

"ஐய்யயோ நான் வாரேங்க.." எதிரில் வந்த பஸ்சை மறித்தாள். போட்கூட வாசிக்காமல், ஏறிப் போனாள் வாசுகி, அம்போ.. என்று நடு வீதியில் நின்றிருந்தான் மணிவேல்.

*********

"என்னடா.., நானும் வந்த நேரத்தில இருந்து பாக்கிறன். பேய் அறஞ்சவன்மாதிரி இருக்கிறாய்? வேலைக்கும் ஒழுங்கில்ல எங்க போறாய்..? என்ன செய்யிறாய்..?"

"அண்ணே.., அந்த பொண்ண நான் விரும்புறது அவங்க வீட்டில தெரிஞ்சிட்டுது. அவங்க வீட்டில ரொம்ப கொடுமைப் படுத்தினாங்க, வேறவழி இல்லாம நாம கல்யாணம் பண்ணிட்டோம் அண்ணே, அகதி முகாமிலயே குடிசையும் போட்டுட்டம் அண்ணே அதான்; வேலைக்கு வரஇல்ல அண்ணே...!"

பாஸ் பரிதாபமாகப் பார்த்தார்.

"ம் பிடிடா"

"அண்ணே எனக்கு காசு வேணா மண்ணே.."

"சரி.. சரி., பிடி இன்டைக்கு நீபோ. நாளையில இருந்து ஒழுங்கா வேலைக்கு வா.."

"அண்ணே"

"என்னடா...?"

"அண்ணே அந்த ஸ்பெனர் பழய டயறுக்கு அடியில் கிடக்கண்ணே.."

"என்னடா" ஆத்திரமாய் பாஸ் கத்தினார். பதில் சொல்ல யாரும் அங்கு இல்லை.

************

எதிர்காலம் நிகழ்காலத்தை துரத்துவதில் வேகமாய் இருந்தது. "அப்பா.." வேலையாய் இருந்த மணிவேல் குரல்கேட்டு நிமிர்ந்தான். "அடோய் எங்கடா வந்தனி..?"

"அம்மா.." சிக்னல் காட்டியது குழந்தை... வாசலில் வாசுகி நின்றிருந்தாள். "என்னடி..."

"படம் பார்க்க வந்த நான். பஸ் ஒண்டும் இல்ல, என்னக் கொண்டே விடுங்க.."

"பாஸ் இல்ல... சந்தியில நில்லு, பஸ்வந்தா போ.. இல்லாட்டி நில்.. பாஸ் வந்தோனே நான் வாரன்.."

"வாடா.." குழந்தையை இழுத்துக் கொண்டு போனாள் வாசுகி.

***************

முறுகல் நிலை நீடித்தது. எதையோ எதிர்பார்ப்பது போல் அமைதியாய் கிடந்தது அந்த பிரதேசம். வெறிச்சோடிப் போய்க் கிடந்த அந்த சந்தியில் செலியின் வேகத்தை குறைத்தான் மணிவேல். மீண்டும் வேகத்தை கூட்ட 'அக்சலேட்டரை' திருகினான் மணிவேல். சைலன்சர் இல்லாத செலி பட் பட் ஒலியுடன் வேகம் பிடித்தது. அவ்வளவுதான். துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கின. நடப்பதை உணருமுன் சல்லடையாக்கப்பட்ட உடல்கள் நிலத்தில் வீழ்த்தப்பட்டன. மீண்டும் அங்கு அமைதி நிலவியது. தாயின் நெஞ்சுடன் இறுக்கமாய் அணைக்கப்பட்டு, கத்தக்கூட முடியாமல் மூச்சுத் திணறிய குழந்தை தன்னை விடுவித்தது. அமைதியைக் குலைத்துக் கொண்டு கதறத் தொடங்கியது. அணைத்து ஆறுதல் சொல்ல பெற்றவர்கள் உயிரோடு இருக்கவில்லை. கத்தி.. கத்தி களைத்துப் போனது குழந்தை. அழுகைக்கு பலன் கிடைக்காமல் போனதும், தன்னைச் சுற்றிப்பார்வையை செலுத்தியது குழந்தை. நீர் ஒழுகிக் கொண்டிருந்த அந்த வைப்படியை நோக்கி தத்தி.. தத்தி நடக்கத் தொடங்கியது குழந்தை. ஒரு அநாதையின் வாரிசு இன்னோர் அநாதையாக உருவாக்கப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# அபிராமி - கிழவியான போது!

## மாத்தளை சிவாஜினி சதாசிவம்

வாசலில் வேப்பமரம் ஒன்று. அருகிலே துணையாக இரண்டு மூன்று வாழைக்கன்றுகள் குலைகளைத் தள்ளிக் கொண்டிருந்தன. வாழை மரங்களுக்கு கொஞ்ச தூரத்துக்கப்பால் கிடுகினால் வேயப்பட்ட குடிசை.

அந்த குடிசைக்குள் இருந்து எப்போதும் வெற்றிலையைப் பாக்கும் இடிக்கும் சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கும். ஆனால் இந்த ஒரு கிழமையாக வெற்றிலை, பாக்கு இடிக்கும் சத்தத்தையும் கிழித்துக்கொண்டு 'கிழவி'யின் இருமல் வெளிவந்தது.

அவளுக்கு இப்போது பெயர் 'கிழவி' (யார் வைத்தாரோ தெரியாது.) அவளறிந்து அப்பெயரை அவளுக்கு அம்மா - அப்பா வைக்கவில்லை. அப்பா-சிவசேகரம் ஒரு 'அபிராமி' பக்தர். இதனால் 'அபிராமி' என்றே மகளுக்கு பெயர் வைத்தார். அபிராமி 'வெள்ளை வெளே'ரென்று இல்லாவிட்டாலும் சுமாரான அழகிதான். அவளது விழிகள் எப்போதும் 'துருதுரு' வென்று அங்குமிங்கும் அலைந்துகொண்டிருக்கும். கன்னங்களில் விழுந்திருந்த குழிகள் அவளது அழகை மெருகூட்டிக் காட்டின.

ஆனால், இப்போது....அந்த அபிராமி கிழவியாகிவிட்டாள். தலைமுழுவதும் எட்டிப் பார்த்த வெள்ளிக் கம்பிகள் அவளது வயதை சரியாக எடைபோட வைத்தது. கன்னத்தில் விழுந்திருந்த குழிகள் அவளது வயதை எடுத்துக் காட்டின.

அபிராமியாக அவள் இருந்தபோது, அவளது முத்து முத்தான பற்களால் ஒரு புன்முறுவலை காண பல நாட்களாக காத்திருந்த இளங் காளைகள் பலர். ஆனால் இப்போது.... அவள் கிழவி. பற்களில் சில வற்றை பூச்சி அரித்துவிட்டது. எஞ்சிய பற்களில் வெற்றிலைக் கறை புற்றைப் போல வளர்ந்திருந்தது.

அபிராமியாக இருந்தபோது ஒரு முறை சாவகச்சேரி விழாவில் நடைபெற்ற 'பாட்டு' போட்டியில் முதலிடம் பெற்றாள். அவளது பாட்டுத் திறமையைக் கண்ட சிவசேகரம் காலையில் எழுந்தவுடனே 'தேன்' குடிக்க கொடுப்பார். சூடான தேனீரையோ, உணவுப் பொருட்களையோ தொடக்கூட விடுவதில்லை. தொண்டை வரண்டு கிடக்கும்போது 'ஃபிரிஜ்ஜில்' இருந்து ஒரு சொட்டு தண்ணீர் கூட எடுக்க விட மாட்டார். "இதெல்லாம் குடித்தால் உன் குரல் வளம் கெட்டுப் போய் விடும் அம்மா" என செல்லமாக புத்தி கூறுவார். ஆனால் இப்போது? அவள் சாகக் கிடக்கும்போது ஒரு சொட்டுத் தண்ணீர் வார்க்க ஒருவருமில்லை.



"எல்லாவற்றிற்கும் காரணம் அந்த பாழாய்ப்போன யுத்தம்தான். ஓர் உயிரா? எத்தனை ஆயிரமாயிரம் உயிர்களை பலியெடுத்த யுத்தம். சரி, எங்கட குடும்பத்திலயே எத்தனை பேர்!! அப்பா, அன்பான கணவன்-வரதன், இன்னும் உறவினர்கள் எத்தனை எத்தனையோ உயிர்கள்?"

இப்படி அபிராமி கிழவி தனது வாயினுள்ளே முணுமுணுத்துக் கொள்வாள்.

கிழவிக்கு இப்போது மனக்குறையைத் தவிர எந்தக் குறையுமில்லை எனலாம். "அம்மா, அம்மா" என தன்னையே சுற்றிச் சுற்றி வந்த உதயனும், ராஜாவும் இப்போது அருகிலில்லை. லண்டனிலே 'செட்டில்' ஆகி விட்டார்கள். கிழவியையும் எத்தனையோ தடவைகள் 'பாஸ்போர்ட்' செய்யச் சொன்னார்கள். கிழவி தான்" 'பிராணன்' போறதே போகுது என்ர சொந்த மண்ணிலே போனால் நிம்மதியாக இருக்கும்" என பேசாமல் இருந்து விட்டாள்.

மகன்மார் இருவரும் தமது இஷ்டம் போல கலியாணம் செய்து கொண்டார்கள். "கடைசி பேரக் குழந்தைகளையாவது பார்க்க வேண்டும் போல கிடக்கு" என்று எத்தனையோ கடிதம் போட்டுவிட்டாள்.

"அம்மா நாங்க இலங்கையில சனங்கள் படுற கஷ்டங்களை காணேல்ல என்று நினைக்க வேண்டாம். இங்க டி.வில நல்லா காட்டினம். நாங்களும் கஷ்டப்பட்டோம். எங்கட பிள்ளையளையாவது கஷ்டப்படாம வளர்க்க வேண்டும். அதால இலங்கையில் தமிழருக்கு எப்ப நல்ல நிலைவருதோ அண்டைக்கு நாங்க அங்க வருவோம்," என்ற பதில்தான் வரும். கிழவிக்கு தெரியும் இலங்கையில தமிழருக்கு நல்ல நிலைவரும் வரை தன் உயிர் தாங்காதென்று. அவள் என்ன செய்வாள்? பாவம்! அபிராமியாக இருந்தபோது சைக்கிளை எடுத்துக் கொண்டு யாழ் நகரைநோட்டமிட்டு விடுவாள். ஆனால் இப்போது.... தள்ளாமை ஒரு புறம்; நாட்டு நிலைமை மறுபுறம்-அவளை கட்டிலில் இருந்து எழும்ப முடியாமல் தடுக்கிறது.

"இதோ ஆமிக்காரங்கள் வருகினம்." என்ற திடீர் திடீர் அதிர்ச்சியைத் தர இப்போது அங்கு யாருமில்லை. கிழவி மட்டும் அந்த வீட்டில், அந்த ஊரில் தனித்து விடப்பட்டாள். எல்லா சனங்களும் கிளிநொச்சி, வவுனியா என்று போய்விட்டார்கள். அவள் மட்டும் அபிராமியாக இருந்திருந்தால்.... இப்படி இருக்க முடியுமா? அல்லது இருக்கத்தான் விடுவார்களா?

நாட்கள் ஒவ்வொன்றும் கிழவியின் ஆயுளை குறைத்துக்கொண்டு போகத் தவறவில்லை. 'ரிவிரெச' தாக்குதலால் கொல்லப்பட்டவர்கள் அடையாளம் காணுமாறு இராணுவத்தினர் தரப்பில் பத்திரிகையில் சடலங்களை புகைப்படமெடுத்து வெளியிட்டனர். அதை பார்த்துவிட்டுச் சிலர், "யாரோ ஒரு கிழவியை அடையாளம் காணச் சொல்லியிருக்கிறார்கள்" என்று பேசிக் கொண்டார்கள்.

# புன்னகைக்கும் பெருநாள்



## ஜன்ஸி கபூர் – அநுராதபுரம்

"உம்மா.. பெருநாளைக்கு எனக்கு புதுச்சட்டை கிடைக்குமாம்மா" ஏக்கத்துடன் வினா எழுப்பிய ஆறு வயதைப் பூர்த்தி செய்யாத மூத்தவள் அக்ஸாவை அணைத்தவாறு, பதில் சொல்லத் தெரியாமல் தடுமாறினாள் ருவைசா. அவளின் இதயம் நொறுங்கியது. சின்னச் சின்னத் தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாத பாவப்பட்ட ஜென்மங்களாக பரிமாணம் பெற்றதை நினைத்து மனம் குமுறினாள். தன் வேதனைகளை அழுகை மூலம் வெளிப்படுத்த அவளால் முடியவில்லை. மனம் தான் உணர்ச்சியற்ற பாறையாக இறுகிவிட்டதே! அவளின் சிந்தனையைக் கிழிக்கும் விதமாக ஆறுமாத மகன் வீரென்று அலறிக் கொண்டிருந்தான். இந்தப் பாவப்பட்ட பூமியில் தானும் ஒரு மனுஷனாக பிறந்துவிட்ட ஆதங்கத்தில் அழுகிறானோ? இந்த ஆறு மாதப் பிஞ்சுக்கு வாழ்விடமாக இந்த அகதி முகாம் அமைந்ததை எண்ணும்போது வேதனைக் கற்கள் மனதைக் காயப்படுத்தின.

"யா அல்லாஹ்! இந்த நரக வாழ்க்கைக்கு முடிவு கிடைக்காதா? மனம் இறைவனிடம் பிரார்த்தித்த போது, இரகசியமாக கண்ணீரும் மெல்ல எட்டிப் பார்த்தது.

குற்றம் செய்யாமலே யுத்தத்தினால் தண்டிக்கப்பட்ட ஆயிரமாயிரம் பேருக்குள் ருவைசாவும் அடக்கம். யுத்தத்தின் அகோரப் பசிக்கு சொத்துக்களுடன், கணவனையும் பலியாக்கிவிட்டு, இரண்டு பிஞ்சுகளோடு, தன்னையும் 'அந்த' அகதி முகாமுக்குள் இணைத்துக் கொண்டாள்.

இந்த இயற்கை சலனமில்லாமல் இரவு, பகலைத் தோற்றுவிப்பதைப் போல், அவள் இதயத்தில் கொந்தளிக்கும் உணர்ச்சிகளும் மௌனமாக கண்ணீரோடு கைகோர்த்து விடும். 'நாளை விடிவு வரும்..... வரும்' என்ற நப்பாசையில், போலியான நம்பிக்கையில் எத்தனை நாட்கள் தான் காலங்களை விழுங்கிக்கொண்டிருப்பது? பிறந்த மண்ணையே தரிசிக்க முடியாதளவு பாவிகளாக்கப்பட்ட இவர்களுடன் உறவு வைக்கக் கூடியவை சோகங்களும் ஏக்கங்களும் தானே! ஒரு கூட்டுப் பறவையாக வாழ்ந்த இனசன உறவுகளை ஒவ்வொரு மூலைக்கும் தூக்கியெறிந்த இந்த யுத்தத்தின் ஆணவத்தால் தானே இவளுக்கும் சுமையாக 'அகதி'ப் பட்டம். மனம் சோகம் தாங்காமல் முனங்கிய போது, மூத்தவள் மெல்ல அவள் தோள்களைச் சுரண்டினாள்.

"உம்மா.... பசிக்குது!"

"பொறும்மா என்ர குஞ்சல்ல! தம்பியப் பார்த்துக்கோ! நான் போய் சாப்பாட்ட எடுத்துக் கொண்டு வாரன்"

எழுந்தவளாக அந்த உணவைப் பெற காத்திருக்கும் நீண்ட 'கியூவில்' தன்னையும் இணைத்துக் கொண்டாள். சொத்துக்களை பறிகொடுத்தபோதே இந்த பசியுணர்வையும் பறிகொடுத்திருந்தால் எவ்வளவு நிம்மதியாக இருந்திருக்கலாம். பசி என்ற வேதனையில் குழந்தைகள் அவஸ்தைப் பட மாட்டார்களே? கௌரவமாக தம் தகுதிக் கேற்ப வாழ்ந்த இவர்களை நடு வீதிக்கு தள்ளிய விதியை சபிப்பதா? இல்லை யென்றால் இன்னும் இந்த அவஸ்தையிலும் வாழத் துடிக்கும் மனத்தைரியத்தை பாராட்டுவதா?... புரியவில்லை.

நாட்கள் நகர்வில் புனித நோன்பும் இருபத்தியேழைத் தொட்டது. ஸஹரை முடித்து, சுபஹு" தொழுகையையும் நிறைவேற்றியவளாக ருவைசா வெளியே வந்தாள். தன் சோகத்தையெல்லாம் இறைவனிடம் முறையிட்டாலும், மனம் சிறிது கனத்தது. இயலாமை அவளிதயத்தை மெலிதாக வருத்தியது. இறந்த கால நினைவுகளை மீட்டிப் பார்த்து, சோக ரணங்களுக்கு ஒத்தடமிட்டுக் கொண்டிருந்த அவளுக்கு முதன் முறையாக நிகழ்காலத்தின் பயங்கரம் புரிந்தது. அகதி என்பதற்காக தன் பிள்ளைகளின் இயல்பான ஆசைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கப் போகும் அவலம் புரிந்தது. பற்று இல்லாத வாழ்விலும், மரணம் பற்றும் வரை வாழத்தான் வேண்டுமென்ற உண்மை உறைத்தது. விழிகள் நீரால் நனைய, முகாமை நோக்கினாள். வழமையை விட அகதிமுகாம் கலகலப்பில் மூழ்கியிருந்தது.

"ராத்தா! உங்களுக்கு விசயம் தெரியாதா? ஹாஜியார் ஒருவர் நம்ம எல்லோருக்கும் காசு, உடுப்பெல்லாம் தர, முகாமுக்கு வந்திருக்கிறார்". என இளங்குயிலொன்று கூவ, இவளுக்குள்ளும் சந்தோஷம் முளைவிட்டது. தன் பிள்ளையும் புதுச் சட்டை போட்டு குதூகலிப்பது மனக் கண்ணில் விம்பமாகி மறைய, அவள் உதடுகள் அமைதியாக உச்சரித்தன "அல்ஹம்துலில்லாஹ்" என்று! கூடவே பெருநாளும் புன்னகைக்க ஆயத்தமானது அவளுக்குள்!

# பிரிவு



## -கமலாதாஸ்-

போர்டிங் ஸ்கூலின் விடுதியில் தங்கிப் படித்து வந்த தன் பத்து வயது மகளை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான் அவன்.

மனைவியைத் தனியாக அழைத்து அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் எச்சரித்தான்: "இதோ பார்! எப்பவும், எதற்காகவும் அவள் முன்னால் நீ அழவே கூடாது. அவளுக்கு வந்திருக்கும் நோயின் கொடுமையைப் பற்றி அவளுக்குத் தெரியாது. எந்தக் காரணத்தைக் கொண்டும் தெரியவும் கூடாது!"

"அடகடவுளே! நான் என்ன பாவம் செய்தேன்? ஏன் என்னை இவ்வளவு நிர்தாட்சண்யமா தண்டிக்கறே?" என்று தன் தலையில் அடித்துக் கொண்டு அரற்றினாள் அவள்.

வெறுப்புடன் மனைவியை வெறித்தான். 'நீ செய்த பாவத்திற்கு நீ இப்படி எல்லாம் படத்தான் வேண்டும்' என்று தன்னுள் கூறிக் கொண்டான்.

தன் அருமை மகளின் மழலையை; அந்த பிஞ்சு உதடுகளால் பதிக்கும் இரவு முத்தங்களை; அவளது குழந்தை மனத்தை எல்லாம் இழந்து, அந்த நான்கு வயதுக்குட்டி தேவதையை எங்கோ இருக்கும் போர்ட்டிங் பள்ளிக்கு அனுப்ப அவனுக்கு இஷ்டமே இல்லை.

அது அவனைப் பொறுத்த மட்டில் மனிதாபிமானமற்ற கொடுமையாகவே பட்டது.

ஆனால் அவனது மனைவி குழந்தையை ஹாஸ்டலில் சேர்க்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்து, நச்சரித்துத் துளைத்தெடுத்து, தன் மகளை கணவன் பள்ளி விடுதியில் சேர்த்து வரும்வரை மூச்சு வாங்கவும் விடவில்லை.

ஆரம்ப காலத்தில் பள்ளி திறக்கும் நாட்களில் குழந்தை அழுது கதறக் கதற அவளைக் காருக்கு இழுத்துச் சென்று ரயில்வே நிலையத்தில் விட்டு வருவான் அவன். அந்த நேரங்களில் அவனது மனைவி தன் நொந்த நெஞ்சின் பலவீனத்தைக் காட்டப் பலமற்றவளாய் குளியலறையில் புகுந்து கொள்வாள்.

நாலைந்து ஆண்டுகளில் குழந்தை அழுவதை நிறுத்தி விட்டு ஊருக்குப் போகும் நாளில் தானே நடந்து சென்று எந்தவித எதிர்ப்புமின்றி, ரயில் நிலையம் போகும் காரில் உட்காரக் கற்றுக் கொண்டது. அந்த அமைதியான போக்கும், மகளின் மௌனமும் அவனை, அவள் அழுது புரண்டபோது பாதித்ததைவிட அதிகம் துயரம் கொள்ளச் செய்தது.

விடுமுறைகளின் போது மகள் வீட்டிற்கு வரும் நாட்களில், 'போர்ட்டிங் பள்ளி, மகளை எப்படியெல்லாம் ஒழுங்காக-நல்ல பிள்ளையாக-முள் கரண்டி கொண்டு அழகாக சாப்பிடும் நாகரிக பழக்கம் கொண்டவளாக மாற்றியிருக்கிறது' என்று வியந்து கணவனிடம் கூறி தன் முடிவைத் தானே பெருமையாகப் பாராட்டிக் கொள்வாள்.

ஒரு விடுமுறையில் வந்து இருந்த போது மகள் சொன்னாள்: "அப்பா, நான் சீக்கிரம் பெரியவளாக வேண்டும்!"

"ஏன்? பெரியவளாகி என்ன செய்ய விரும்பறே?" தந்தை வாஞ்சையுடன் கேட்டான்.

"நான் பெரியவளானாத்தானே, உங்களோடும் அம்மாவோடும் எப்பவும் இருக்க முடியும்."

மகளின் அந்த பதில் அவனைத் தன் மனைவி மேல் வெறுப்புக் கொள்ள வைத்தது. தன் மகளை ஆரத்தழுவி, அவனும் அந்த வாழ்க்கையைத்தான் எப்போதும் விரும்பினான் என்று கூறத் துடித்தான். ஆனால் மகளின் முன் தன் உணர்ச்சிகளை அவ்வளவு பட்டவர்த்தனமாகக் காட்டுவதை விரும்பாதவனாக அவளைப் பார்த்து புன்னகைத்து வைத்தான்.

விடுதிக் காப்பாளரான மதர் சுபீரியரிடம் இருந்து அந்தக் கடிதம் வந்தபோது அதை அவனால் நம்பவோ, தாங்கவோ முடியவில்லை. தன் அன்பு மகளுக்கா ரத்த புற்று நோய்! இருக்கக் கூடாதா? மருத்துவப் பரிசோதனைகள் தவறானதாக இருந்திடாதா! என்று அவனது இதயம் தவித்து ஏங்கியது.

ஒரு வேளை வீடு திரும்பி விட வேண்டும் என்ற ஆர்வக் கோளாறினால் தன் மகள் அப்படி நடந்திருப்பாளோ என்று சந்தேகமாக அவனுள் எழுந்த நைப்பாசையை, அப்படிச் செய்தால், டாக்டர்களை எப்படி ஏமாற்றியிருக்க முடியும்?' என்ற தர்க்கச் சுமை அழுத்தி அடக்கிவிட்டது.

போர்வையில் சுற்றியிருந்த மகளைத் தூக்கி காரின் பின் சீட்டில் கிடத்தும் போது, தன் மகளைத் தாக்கியிருக்கும் நோயின் தீவிரத்தை அவனால் உணரமுடிந்தது. அவள் யாரையும் ஏமாற்ற அப்படி நோயாளியாய் நடிக்கவில்லை என்ற ஊர்ஜிதம் பயமாய் அவனுள் ஊறத் தொடங்கியது. இதுவரை இருந்திராத கருமை அந்த குழந்தை முகத்தில் படர்ந்திருந்தது. அவளது சோகையான உடல் அவனது நெஞ்சைப் பிசைந்து வருத்தியது. சிகிச்சையே இல்லாத அந்த நோயின் கடுமை மகளைவிட அவனை அதிகம் வாட்டியது.

கார் கதவில் எட்டிப்பார்த்த பள்ளியாசிரியர்களான கன்னிகாஸ்திரிகள் பச்சாதாபத்தோடு முணுமுணுத்தார்கள். "பயப்படாதே குழந்தை, உனக்காக நாங்கள் கடவுளிடம் வேண்டிக் கொள்கிறோம்!"

வீட்டிற்குத் திரும்பியதும் அவளது கையை ஆதரவாய்ப் பிடித்து வெறித்தாள் அம்மா. அவளைப் பார்த்து உலர்ந்த புன்னகையை வலுக்கட்டாயமாக உதிர்த்தாள். பீரோவை திறந்து அதில் திணிக்கப்பட்டிருந்த ஏராளமான விலையுயர்ந்த விளையாட்டுச் சாமான்களை எடுத்து கார்பெட் மீது பரப்பி வைத்தாள்.

"இதெல்லாம் வைத்து விளையாடிக் கொண்டிரு, கண்ணு!" என்று சொன்னாள்.

"உடைஞ்சி போயிட்டா?" தன் திராணியையெல்லாம் திரட்டி ஒரு பொம்மையை கையிலிருத்தியவாறு குழந்தை கேட்டது.

"பரவாயில்லை: உடைக்கணும்னா உடைச்சிடு, பரவாயில்லை!" என்றாள் தாய்.

"நான் பள்ளிக்கூடம் திரும்பிப் போறப்போ இதையெல்லாம் எடுத்தும் போகலாமில்லையா?" மீண்டும் கேட்டாள் மகள்.

துக்கம் நெஞ்சை அடைத்தது. வாய் வரை முண்டு எழுந்த அழுகை உதட்டின் இறுக்கத்தில் தடைப்பட்டது. "உன்னை மறுபடியும் போர்ட்டிங் ஸ்கூல் அனுப்பவே மாட்டேன் கண்ணே?" என்று இறுகிச் சொன்னாள் தாய் "எப்பவும் அனுப்பவே மாட்டேன்."

"டிசம்பர் மாதம் நடக்கயிருக்கிற கடைசி பரீட்சைக்கும் அனுப்பமாட்டியா?" என்று கேட்ட மகளின் பிஞ்சு குரலில் ஓர் ஏமாற்ற உணர்வு இருந்தது.

### ஏன் சிரித்தார் ?

விமானம் பறந்துகொண்டிருக்கையில் பைலட் விடாமல் சிரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்த பயணி ஒருவர் எழுந்து அவருடைய சிரிப்புக்குக் காரணத்தைக் கேட்டார்;



பைலட்: வேறொன்றுமில்லை! பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் என்னைக் காணாமல் எல்லோரும் தவித்துக் கொண்டிருப்பார்கள். அதை நினைத்துச் சிரித்துக் கொண்டிருக்கிறேன்.

### கொஞ்சம் சிரிங்க!



"இன்னிக்கு ஆபரேசன் செய்யணும்னு இருந்த பார்த்திபனுக்கு....."

"என்ன ஆச்சு....?"

"நிறுத்தணுமாம் சார்! இறுதிச் சடங்கு செய்ய பணம் இல்லைன்னு அவர் மனைவி என்னிடம் சொல்லி அழுறாங்க......"

### ஆக்கங்கள் அனுப்புவோர் கவனிக்க

சகல கடிதத் தொடர்புகளுக்கும்
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல 1772**
**கொழும்பு.**

பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பிரசுரிக்கப்படாத ஆக்கங்கள் திருப்பியனுப்பப்படமாட்டா.

கடித உறையின் மீது எந்தப் பகுதிக்குரிய ஆக்கம் என்பதையும் குறிப்பிடவும்.


படிப்பகம்

www.padippakam.com

# அவன் மகள்

## இலக்கிய நயம் — தருவது ரசிகன்

"அழைத்துவாருங்கள்." என்றான் மன்னன். அழைத்துவரப்பட இருந்தவன் பல்லவ நாட்டு வேந்தன்.

உத்தரவை செவியில் வாங்கிய சேவகனுக்கு ஒரு சந்தேகம்.

"மன்னா!" என்றான் கேள்வி தொனித்த குரலில். "என்ன?" என்றான் மன்னன் அதிகாரம் மிதமிஞ்சிய குரலில்.

"விலங்கிட்டபடி அழைத்து வரவா அல்லது.." வினாவை முடிக்க விட வில்லை. இடையிலே குறுக்கிட்ட மன்னன்; "முட்டாள்! எதிரிக்கு எதற்கடா மரியாதை? விலங்கோடு அழைத்துவா! நில்! ஒரு திருத்தம்; இழுத்துவா! போ!"

இரும்புச் சங்கிலி தரையில் தேய்பட நடக்க முடியாமல் கால்கள் தடைப்பட, தோல்வி அவமானம் முகத்தில் இருள் தர பல்லவ மன்னன் சபைக்குள் கொண்டு வரப்பட்டான்.



"வாழ்வது ஒரு தரம். மாள்வதும் ஒரு தரம், மானமே நிரந்தரம்! போருக்குச் சம்மதம்! பொருதவா என் களம்! என்றெல்லாம் கர்ஜித்தீர், தொடைதட்டி, தோள்தட்டி என்னை நிந்தித்தீர்! களத்திலே தோல்வியை சந்தித்தீர்! நேற்று நீர் அரசன்; இன்று நீர் அடிமை! நாளை நீர் மடிவீர்!"

பாண்டிய மன்னன் சபை அதிரும்படி கொக்கரித்தான், பின்னர் கெக்கலித்தான்.

சிறைபட்டபோதும் சீற்றம் குறையாத பல்லவன் தன் விழிகளில் சினம் கலந்து, உதட்டில் தீயென எழுந்த வார்த்தைகளை விசிறிவிட்டான்.

"எதுவும் நிரந்தரமல்ல பாண்டியா! அடிபடுவதும் நிரந்தரமல்ல, அடி கொடுப்பதும் நிரந்தரமல்ல!"

"நம் தோள்வலியால், வாள் முனையால் நீ பெற்ற தோல்விக்கு நியாயம் சொல்கிறாயா?"

"இல்லை; இன்று வீழ்ந்தோம் என்பது உண்மைதான்; என்றும் வீழ்ந்தேயிருப்போம் என்பது உண்மையல்ல என்று சொல்கிறேன்!"

சிம்மாசனத்திலிருந்து இறங்கி தரையை உதைத்து, தன் பெரும் தேகம் குலுங்க நடந்தான் மன்னன்.

பல்லவன் அருகே போய் கால் உயர்த்தி மார்பில் உதைத்தான். காறி உமிழ்நீர் துப்பினான் முகத்தில்.

"எழடா பார்க்கலாம்! வீழ்ந்தது மகுடம், வெறும் பேச்சு எதற்கடா? சாய்ந்தது கொடி சங்கநாதமோ செய்கிறாய்? ஓடிவிட்டது உன் சுற்றம்; அடங்கவில்லையடா உன் கொட்டம்!"

"நீ ஒரு கோழை!"

"என்னடா சொன்னாய்?"

"வீரனாயிருந்தால் பகைவனை மதிப்பாய்! நேரில் எதிர்த்து நின்ற வீரத்தை புகழ்வாய்! உன்னால் சிறை செய்யப்பட்டவர்களை மிதிக்காமல் மதிப்பாய்! ஆனால் நீ கோழை!"

"யாரடா அங்கே? நிலவறையில் இவனை ஏழு நாள் வையுங்கள் பட்டினி போடுங்கள். நீரும் வேண்டாம் மோரும் வேண்டாம். இவன் திமிரும், திணவும் அடங்கட்டும் அதன்பின்னர் சிரம் அறுக்கலாம்!"

மன்னன் செய்வது மனித நீதியல்ல; சபைக்கு தெரிந்தது. எதிர்க்கருத்து சொன்னால் எடுத்தெறியப்படலாம். வாய் திறக்காமல் சபை மௌனித்துக் கிடந்தது.

சரச நேரத்தில் தன்பட்டத்து ராணியிடம் தன் தீரத்தை பறைசாற்றினான் மன்னன்.

"அய்யய்யோ..!" பட்டத்து ராணி பயந்து போனாள். "என்ன தேவி, ஏன் கலக்கம்?"

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பார்களே பெரியவர்கள்!"

பாண்டியன் நகைத்தான். "பயப்படாதே பழிவாங்க பல்லவனுக்கு மகன் கிடையாது. மகள்தான் இருக்கிறாள் . அவளால் படுகளத்திலாட முடியாது. பள்ளியறையில் தான் ஆட வேண்டும்." பட்டத்து ராணி சிரிக்கவில்லை. அவளுக்குமாய் சேர்த்து தானே நகைத்துக்கொண்டான் பாண்டியன்.

"என்ன தேவி வாடிவிட்டாய்? மலர் வாடினால் வண்டு எப்படி மரகந்தம் எடுப்பது? நீரோடை வற்றினால் நான் எப்படி நீராடிக்கொள்வது? உன் பாலாடை மேனி என் தோளோடு சேரும் என்று ஓடோடி வந்தேனடி! வாடாதே ராணி, நானுந்தன் தேனீ, காணாத சுகம் காணத்தா உந்தன் மேனி, சொர்க்கத்தின் உச்சத்திற்கு நீதானே ஏணி!"

மேலாடைவிலக்கி, அவளின் தோள்கள் இரண்டிலும் உள்ளங்கைகளால் வெப்ப மூட்டினான். பட்டத்துராணி தன் கணவனின் பழிச்செயலை மறக்கத் தொடங்கினாள்.

முகம் குனிந்து அவள் மார்பிலே மூக்கு நுனியால் வருடினான். பட்டத்துராணி பல்லக்கானாள். பாண்டிய மன்னன் பயணம் தொடங்கினான்.

பயணத்தின் இடையில் நெற்றியில் துளித்த வியர்வையை சுண்டுவிரலால் துடைத்தபடி சொன்னான்; "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். பள்ளியறைக்கும் அது பொருந்தும். ஆகவே தயாராகிறான்!"

"யார்?" என்றாள் ராணி.

"ராஜபாண்டியன். என் மகன். உன் வயிற்றில்!" என்றான் பாண்டியன். ராணி முகத்தை மூடிக்கொண்டாள். வெட்கமாம்.

◻ ◻ ◻

ராஜபாண்டியன் இளைஞன். இளவரசன்.

"பல்லவ நாட்டில் கிளர்ச்சியாமே! சென்றுபார், வென்றுவா!" தந்தை பாண்டியன் ஆணையிட்டான்.

"வேண்டாம் அவன் குழந்தை!" ராணி தடுத்தாள்.

"குழந்தைதான்! அதனால்தான் விளையாட அனுப்பிவைக்கிறேன் களத்துக்கு!"

பல்லவ நாட்டில் ராஜபாண்டியனுக்கு காத்திருந்தது தோல்வி.

"வெற்றியைத்தவிர வேறெதையும் பெறாது வாழும் பாண்டியனின் மகனே வருக! பாண்டியர்களைத் தவிர பாரிலுள்ளோர் அனைவரும் காலடியில் அடிமைகளாய் கிடக்கவே பிறந்தனர் என்னும் துடுக்கான எண்ணத்தின் பிரதிநிதியே வருக!"

ராஜபாண்டியனுக்கு பயத்திலும் வியப்பு வந்தது. பல்லவர் படைக்கு பெண் ஒருத்தியா தலைமை தாங்கினாள்?!

அவன் வியப்பை ஊகித்து அவளே பதில் சொன்னாள்.

"பெண் என்றால் பேயும் இரங்கும் என்பது பழையகதை. பெண் என்றால் பேயும் வணங்கும். அதுதான் புதிய கதை. நீதான் பேய். நம்நாட்டை ஆட்டிப்படைக்க வந்த பேய்! வணங்கு! கால் மடித்து மடங்கு!" பணிந்தான். பயந்தான்.

அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்த பாண்டியன் படையாள் ஒருவனை விடுதலை செய்தாள் பல்லவன் மகள்.

"போ! பாண்டியனிடம் இங்கு கண்டதைச் சொல்! என் காலடியில் பாண்டிய மானம் சிதறிக்கிடப்பதைச் சொல்! சொல்லிவிட்டு இந்த மடலையும் கொடு. பல்லவன் மகள் தந்தாள் என்று சொல்!"

படையாள் புறப்பட்டான். அவன் புறப்பட்டதும் பல்லவன் மகள் சொன்னாள்;

"எழுந்திருங்கள் ராஜ பாண்டியரே. என்னோடு வாருங்கள்!"

அவள் சென்றது தனியறைக்கு. உள்ளே சென்றதும் ராஜபாண்டியன் கேட்டான்.

"கதவைச் சாத்தலாமா? கண்ணே உன்னை தூக்கிச் சுமக்கலாமா?"

"ஆசைதான்!" என்றாள் இதுவரை காட்டிய அதிகார தோரணையெல்லாம் இழந்த குரலில்.

"உன்னோடு சேர்ந்து நான் நடத்திய நாடகத்திற்கு பரிசு வேண்டாமா? பல்லவர் சபதமும் காக்கப்படவேண்டும். என் தந்தையின் ஆணவமும் அடக்கப்பட வேண்டும். உனது கரமும் நான் பற்ற வேண்டும். அதற்காக போட்ட திட்டம் வெற்றி. நானாக வந்து வலையில் விழுந்தேன்! இப்போது நீயாக வந்து என் வலையில் விழவேண்டும்! புதுக்கலையைப் பயில உன்னைத் தரவேண்டும்!"



"உங்கள் தந்தை அங்கே துடித்துக் கொண்டிருக்கப் போகிறார்."

"துடிக்கட்டும். துடிக்கட்டும். மாபெரும் குற்றங்களை மறப்பதும், மன்னிப்பதும் மறுபடி அதே குற்றங்கள் மலர விதைபோடுவதாகிவிடும். அதனால் தானே உன்னைச் சந்தித்தேன். தண்டனை கொடுக்க சிந்தித்தோம்! அதிருக்கட்டும் ஒருமடல் கொடுத்தாயே, அதில் என்ன எழுதியிருக்கிறாய்?"

**"ஒன்னே முக்கால் அடியில் ஒரு இடி"**

"என்ன அது?"

"திருக்குறள்!

புதுக் குறளை நான் உனக்குச் சொல்லித்தர முன்னர், அந்த திருக்குறளை நீ எனக்கு சொல்லு!"

**"பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின்**
**-தமக்கு இன்னா**
**பிற்பகல் தாமே வரும்"**

குறள்–319, அதிகாரம்–32

## குறுக்கெழுத்துப் போட்டி இல–139

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | ■ | 3 | | |
| | ■ | 4 | | | | ■ |
| | 5 | | ■ | | ■ | 6 |
| | | ■ | 7 | | 8 | |
| | 9 | | | ■ | | |
| ■ | | ■ | | ■ | | |
| 10 | | | | ■ | | ■ |

### இடமிருந்து வலம்

01. இரவு நேரங்களில் இதன் அலறல் படு பயங்கரமாக இருக்கும்.
03. இக்காலம் தற்போது மாற்றமடைகிறது.
04. சிலர் எக்காரியத்திற்கும எவரையும் கலந்தாலோசிக்காமல் இத்தகைய முடிவுக்கு வருவதுமுண்டு.
09. பண்டைய புலவர்களின் பாடல்களில் இடம்பெறும் அழகிய மலர்-பானம் பருகும் பாத்திரத்தையும் இவ்வாறு அழைப்பர்.
10. ஒவ்வொருவருக்குமுள்ள இது குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

### மேலிருந்து கீழ்

01. இது வருமானால் புத்தியும் மழுங்கி விடும்.
02. இவருடைய சொற்களைக் கேட்க வேண்டாம் என்று ஔவையாரே சொன்னாரா?
03. புதுப் பெண்ணிடம் நிறைய இருக்கும்.
05. இதனைக் கொடுத்தாலும் சிலர் இதற்கு போதுமான அளவு மதிப்புக் கொடுப்பதில்லை.
06. வீணான இதில் ஈடுபட்டு பொருட்களை இழந்தோர் பலர் உள்ளனர்.
07. உடலில் உறுதி இல்லாவிட்டால் இதுதான் ஏற்படும்.
08. பண்டையப் பெருமை வாய்ந்த நாட்டின் பெயரால் நற்கலையும் ஒன்றுண்டு.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 17.02.1996இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-139
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

இதற்கான சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-137ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 க | 2 வ | ச | ம் | ■ | 3 இ | ■ |
| ■ | ங் | ■ | 4 க | ட் | டு | ரை |
| 5 சி | கி | ச் | சை | ■ | க் | ■ |
| த் | ■ | 6 ம | ■ | 7 பு | க | ழ் |
| 8 தி | ன | ச | ரி | ■ | ண் | ■ |
| ர | ■ | 9 கு | யி | ல் | ■ | 10 பூ |
| ம் | ■ | ■ | 11 க | ரி | ச | னை |

குறுக்கெழுத்துப் போட்டி இல. 137இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:

1. கணபதிப்பிள்ளை நாதன், பிபிலை.
2. எம். தாரிக், நாரம்மலை.
3. எஸ். தயாளினி, கொட்டாஞ்சேனை.
4. செல்வி. என். ருக்சானா, வவுனியா.
5. திருமதி. எம். தவரத்தினம், வத்தளை.
6. எல். அபூத் தாலிப், பாலமுனை-05.
7. கே. மகேந்திரன், கந்தப்பளை.
8. செல்வி. பாத்திமா பஸ்மிலா, கண்டி.
9. சி. தங்கவேல், அட்டாளைச்சேனை.
10. எஸ். சிவானந்தன், நுகேகொட.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்

**★ கொழும்பு குண்டுத்தாக்குதல்களால் அப்பாவிகள் பலர் கொல்லப்பட்டிருக்கிறார்களே?**

என்.சுரேந்திரகுமார், கொழும்பு-09.

யுத்தம் ஒரு பேய். நாடெங்கும் நடப்பது அதன் ஆட்சி. 'பேய்கள் ஆட்சி செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்'.

••

**★ டியர் சிந்தியா! வெளிநாடுகள் பல கொழும்பு சம்பவத்தைக் கண்டித்துள்ளனவே, இதனால் நஷ்டம் யாருக்கு?**

வி.மாதவன்,கல்கிசை.

இலங்கை நாற்புறமும் கடலால் சூழப்பட்ட அழகான தீவு என்ற புகழுக்கு இலங்கை ஒரு வெடிமருந்துப் பேழை என்றாகிவிட்டதல்லவா?

••

**★ அன்புள்ள சிந்தியா! எங்கள் ரஜினிகாந்தின் யோசனைதான் என்ன?**

ஆ.தேவராணி,கண்டி.

தனது அடுத்த படத்தை எந்த நிறுவனத்திற்காக செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறார். ஆனால் கருணாநிதி உட்பட, ஜெயலலிதா தவிர, சகல தமிழகத் தலைவர்களும் ரஜினி என்ன முடிவு எடுக்கப் போகிறாரோ என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

••

**★ பொய் சொல்லவும் ஏமாற்றவும் ஒரு திறமை வேண்டும்தானே சிந்தியா?**

எம்.ஸ்டெல்லா மேரி, கண்டி.

பின்னே என்ன; உதாரணமாக ஒன்று சொல்வேன்: சாமியார் பிரேமானந்தாவின் சாயம் வெகு விரைவாக வெளுத்துவிட்டது. அவரது திறமை அவ்வளவுதான். வேறு சிலர் இன்னமும் பொய்யைப் பொய்யென்று தெரியாமல் விநியோகம் செய்துகொண்டு இருக்கிறார்களே, அவர்கள்தான் திறமைசாலிகள்.

••

**★ யாசீர் அரபாத் வென்றுவிட்டார், பாலஸ்தீன போராட்டம் இனித் தொடருமா?**

என்.எம்.அன்வர், காத்தான்குடி.

கிடைப்பதை பெற்றுக்கொண்டு கிடைக்க வேண்டியதைப் பெறப் போராடவேண்டிய பொறுப்பு அவருக்கு இருக்கிறது. எனவே, போராட்டம் முடிந்துவிடவில்லை. போராட்ட வடிவம்தான் வேறுபட்டிருக்கிறது.

••

**★ குஷ்புவை நக்மா விரட்டினார்; நக்மாவை யார் விரட்டுவார்கள்?**

கா.தனேஷ்வரன், வவுனியா.

குஷ்புவை நக்மா எங்கே விரட்டினார். குமரர்கள் முதல் கிழவர்கள்வரை குஷ்புவை விரட்டினார்கள். இப்போது கூட குஷ்பு என்றால் ஒரு கிறுகிறுப்பு இருக்கத்தான் செய்கிறது. லேட்டஸ்ட்டாக வரும் குஷ்பு படம் 'கிழவர்கள் ஜாக்கிரதை.' குஷ்பு யாருக்கு பயப்படுகிறார் பார்த்தீர்களா?

## தமிழீழத்துக்கு யார் ஆதரவு?

**★ டியர் சிந்தியா! நாட்டியப் பேரொளி என்று பத்மினி இருந்தார். இன்று யார் இருக்கிறார்கள்?**

எஸ்.சந்திரசேகர், ஹட்டன்.

காலம் மாறிப்போச்சு சந்திரசேகர். இயந்திரவேக உலகில் ஆற அமர இரசித்துக் கொண்டிருக்க யாருக்கு நேரம்? அதுதான் வேக வேகமாக குலுங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதிரடியாக ஆடி இரசிகர்களை கதி கலக்குவதால் சில்க் சுமிதாவுக்கு 'நாட்டிய பொல்லடியாள்' என்ற பட்டத்தை தானம் செய்யலாம்.

••

**★ தமிழக தேர்தலில் உறுதியான கூட்டணி எது?**

கு.மரியநாயகம், புத்தளம்.

கேள்வியே தவறு. கூட்டணி என்பது கொள்கை அடிப்படையில் ஏற்படும் கூட்டு. தமிழ்நாட்டில் கட்சிகளுக்குள் ஏற்பட்டிருப்பது போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம்; தொகுதிப் பங்கீடு!

••




**★ மகாபாரதத்தில் தருமரின் பொறுமையும், நிதானமும் நமக்கெல்லாம் ஒரு முன்மாதிரி தானே? கோபமும், சகியாமையும்தானே பிரச்சனைகளுக்கு காரணம்?**

எம்.தேவராஜன், மாத்தளை.

அய்யய்யோ தேவராஜன்! தருமரின் பொறுமை வேண்டவே வேண்டாம். பெண்ணைப் பணயம்வைத்து சூதாடி, அவள் துகிலுரியப் படும்போதும் கல்லாக இருப்பதன் பெயர் பொறுமையா? பழைய வற்றில் ஒவ்வாதனவற்றை உதறிவிடுங்கள். நியாயமான கோபம் நிச்சயம் தேவை. கொடுமைகளை சகியாமை அவசியம் தேவை. புல்லாக இருக்கவா பிறந்தோம்?!

••

**★ நம்நாட்டில் பொதுத்தேர்தல் வருவதாக வைத்துக்கொள்ளுங்கள். பொதுஜன முன்னணிக்கு முன்பைவிட செல்வாக்கு ஏற்படுமா?**

ஆர். சக்திவேல், அப்புத்தளை.

கடந்த தேர்தலில் கொடுத்த சொல்வாக்கு பல இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. அதனால் செல்வாக்கு எப்படியிருக்கும் என்பது தேர்தல் வரும் போது தோன்றும் சூழ்நிலையைப் பொறுத்ததாகவே இருக்கும். சூழல்களை மாற்றும் சூக்குமக்கயிறு புலிகளிடம்தானே இருக்கிறது!

••

**★ ராஜீவ் காந்தி கொலையை புலிகள் தொடர்ந்து மறுக்கிறார்களே என்ன நினைக்கிறீர்?**

எம். சோமசேகர், பதுளை.

அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டும் என்று நீர் விவேகமில்லாமல் எதிர்பார்க்கிறீர் என்று நினைக்கிறேன்.

••

**★ விடுதலைப் புலிகள் தமிழீழம் பிரகடனம் செய்தால் எந்த நாடு அங்கீகரிக்கும்?**

எஸ். பாலச்சந்திரன், நீர்கொழும்பு.

சர்வதேச நிலவரப்படி சமஷ்டிக்கு அதிகமாக தமிழர் தரப்பு கேட்குமானால் யாரும் ஆதரவு தர முன்வரமாட்டார்கள். தற்போதைய நிலவரம் அதுதான்.

••

**★ இந்தியாவோடு புலிகள் இயக்கத்தினர் மீண்டும் கைகுலுக்கப் போகிறார்களாமே?**

என். இப்ராஹீம், குருநாகல்.

வெளிநாடுகளில் அப்படியொரு முயற்சி நடந்து கொண்டிருப்பது உண்மைதான். திலகர் இந்தியாவுக்கு ஐஸ் மேல் ஐஸ் வைத்திருப்பதும் அதனால்தான். ஆனால் கரிகாலன் தனது பேட்டியில் இந்தியாவை வெளுத்துவாங்கியிருக்கிறார். ஒருவர் குளிர வைக்கிறார். இன்னொருவர் குட்டுகிறார். இந்திய நட்பு தொடர்பாக புலிகளுக்குள் திட்டவட்டமான முடிவு வரவில்லை என்று தெரிகிறது.

••



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 19

அமைச்சர் சுமந்திரர் இராமரின் அரண்மனையை அடைந்தபோது அவர் சீதையுடன்- இலக்குமிதேவியுடன் வீற்றிருக்கும் மகாவிஷ்ணுவைப்போல் வீற்றிருந்தார். அதிகாலையிலேயே காலைக்கடன்களை முடித்துவிட்டு நித்திய பூஜைகளையும் முடித்தவராக பட்டாபிஷேக விழாவுக்குப் புறப்பட

## தந்தை சொல் தட்டாத தனயன்


ஆயத்தமாக இருவரும் காத்திருந்தனர்.

சிற்றன்னை கைகேயி இல்லத்திலிருக்கும் மன்னர் உடனடியாக இராமரை வரவழைத்ததாக அமைச்சர் சொன்னதும் வில்லிலிருந்து வேகமாகப் புறப்படும் அஸ்திரம் போல இராமர் புறப்பட்டார். அரண்மனையின் முன்புறத்தில் காத்திருந்த இரதத்தில் ஏறிக்கொண்டார்.

இராஜ பாட்டையில் மக்கள் கூட்டம் நெருக்கியடித்துக் கொண்டிருந்தது. பட்டம் சூட்டுவதற்கான சுப வேளை நெருங்கிக் கொண்டிருந்த தருணம்; மன்னருடன் இளவரசர் தத்தமது இருக்கைகளில் அமர்ந்து உரிய சடங்குகளில் பங்குபற்றியிருக்க வேண்டிய வேளையில், மன்னரோ அவர்தம் மைந்தரோ அங்குவந்து சேரவில்லையே என்று பட்டாபிஷேகம் காணத் திரண்டு வந்திருந்த அனைவரும் வினா எழுப்பிக்கொண்டிருந்தபோது, இராமருடைய இரதம் புறப்பட்டு வருவதைக் கண்டதும் மக்களின் ஐயம் தெளிந்தது. வாழ்த்தொலிகள் வான் முட்டியது. திரண்டுநின்ற கூட்டத்தை பல குதிரை வீரர்கள் விலக்கி வழியெடுத்துக் கொடுக்க இராமரின் இரதம் கைகேயியின் அந்தப்புர வாயிலை அடைந்தது.

### தடுமாற வைத்த தந்தையின் கோலம்

அந்தப்புரத்தினுள்ளே நுழைந்த இராமருக்கு அங்கிருந்த சூழல் ஒருவகை ஐயப்பாட்டை ஏற்படுத்தியது. அவருடைய கண்களுக்கு முதலில் தென்பட்டவள் சிறிய தாயாரான கைகேயிதான். வழக்கம் போல் அவள் பாதங்களைத் தொட்டு வணங்கினார். "தந்தை உடன் வரும்படி அழைத்தாராம். அவர் எங்கே இருக்கிறார் தாயே?" என்று இராமர் கேட்டதற்கு கைகேயி வாயினால் எதுவித பதிலும் கூறாமல் தசரத மன்னர் இருந்த அறையைக் காண்பித்தாள். அவளே முன் சென்றாள். "மகன் இராமன் வந்திருக்கிறான்" என்று திரையை ஒதுக்கிவிட்டு கைகேயி கூறியதும் ஒரு சிறு முனகல் சப்தம் மட்டும் கேட்டது.



மங்கிய ஒளியில் தனது அன்புக்குரிய தந்தை படுக்கையில் கிடப்பதைக் கண்ட இராமர் செயலற்றுத் திகைப்படைந்தார். தான் வருவதைக் கேள்வியுற்றாலே ஓடோடி வந்து கட்டித்தழுவி உச்சி மோந்து உவகையுறும் தந்தை செயலற்றுக் கிடப்பதைப் பார்க்கச் சகிக்க முடியாத இராமரின் கண்களில் தாரைதாரையாக கண்ணீர் பெருகியது. ஓடிச் சென்று தந்தையின் பாதங்களைப் பற்றினார். அப்போது ஈனஸ்வரத்தில் 'இராமா' என்ற ஒரேயொரு வார்த்தை மட்டும் கேட்டது.

"அம்மா! என் தந்தைக்கு என்ன நேர்ந்தது? கடும் நோய் கண்டிருந்தால் அரண்மனை வைத்தியர்களைத் தருவித்திருக்கலாமே! அல்லது அவர் மனம் புண்படும்படி எவராவது சுடுவார்த்தைகள் கூறிவிட்டனரா? இல்லை; என்மேல் அவருக்கு ஏதாவது மனத்தாபமா? என் தந்தையை இந்தக் கோலத்தில் எப்போதும் கண்டதில்லையே! என்னதான் நடந்தது என்று கூறமாட்டீர்களா தாயே?"

இவ்வாறு இராமர் புலம்பினார். மன்னர் எழுந்து மகனிடம் இனிமேல் எதுவித பதிலும் உரைக்கமாட்டார் என்பதனை உணர்ந்த கைகேயி மனதைத் திடப்படுத்திக் கொண்டாள்.

"இராமா! முன்பு நடைபெற்ற ஒரு யுத்தத்தின் போது மன்னருடைய இரதத்தைச் செலுத்தி அவருடைய உயிரைக் காத்தேன். அதற்காக அவர் எனக்கு இருவரங்களைத் தர முன்வந்தார். வேண்டும் போது கேட்டுப் பெற்றுக்கொள்கிறேன் என்று அப்போது சொல்லிவிட்டேன். இப்போது அந்த வரங்கள் இரண்டையும் கேட்க வேண்டிய சந்தர்ப்பம் வந்தது; கேட்டேன். அவர் கொடுத்த வாக்கினை அவர் மீற முடியுமா? அந்த வரங்களை அவர் எனக்குத் தருவதற்கு நீ இடையூறாக இருப்பாயோ என்று அவர் ஐயுறுகிறார்." இவ்வாறு கைகேயி கூறியதும் நெருப்பிலிட்ட புழுப் போல் துடிதுடித்த இராமர், "அன்னையே! என் தந்தை அளித்த வாக்குறுதியினை நிறைவேற்ற தனயனான நான் இடையூறாக இருப்பேனா? இல்லை யில்லை... இந்த உலகமே கடலில் மூழ்கினாலும் என் தந்தைக்கு நான் என்றும் இடையூறாக இருக்கவே மாட்டேன். அம்மா! அந்த வரங்கள் என்ன என்பதனைக் கூறுங்கள்," என்றார் இராமன்.

"எனது முதல் வேண்டுகோளின்படி என் வயிற்றிலுதித்த என் மகன் பரதனே அயோத்தியின் அடுத்த மன்னனாக வேண்டும். அடுத்த வரத்தின்படி மாமன்னனின் மூத்த மகனாகிய நீ கானகம் சென்று பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்ய வேண்டும். இவை இரண்டுக்கும் நீ சம்மதிக்க மாட்டாய் என்று மன்னவர் கருதினார். அதனால் ஏற்பட்ட மயக்கத்திலாழ்ந்து கிடக்கிறார். அவ்வளவுதான்." இவ்வாறு கைகேயி, தனது இதயத்தை இரும்பாக்கிக் கொண்டு மளமளவென்று பேசிமுடித்துவிட்டு இராமனின் முகத்தை நேராகவே பார்த்தாள்.

தந்தையின் நிலை கண்டு இராமரின் முகத்தில் கவலை ரேகைகள் படர்ந்தது என்னவோ உண்மைதான். ஆனால் தந்தை, கைகேயிக்கு அளித்த வாக்கினை நிறைவேற்ற முடியாத நிலையினால் ஏற்பட்ட தவிப்பினால் நிலை குலைந்து போயிருக்கிறார் என்பதை இராமன் உணர்ந்ததும் அவருடைய வதனத்தில் சூரியனின் பிரகாசம் தோன்றியது. அம்முகத்தில் அதிர்ச்சியையும் கவலையையும் எதிர்பார்த்த கைகேயி ஏமாந்து போனாள்.

மீண்டும் இராமர் தன் தந்தையின் தாள் பணிந்தார்.

"தந்தையே! தங்கள் மகன் இராமனின் தன்மை தாங்கள் அறியாததா? தீயினுள் குதிக்கும்படியோ சமுத்திரத்துள் மூழ்கும்படியோ தாங்கள் கூறினாலும் போதுமே; உடனடியாகவே தங்கள் ஆசையைப் பூர்த்தி செய்து விடுவேனே! அரசபதவியை விட்டு கானகம் புகும்படி தாங்கள் இட்ட கட்டளை எனக்கு தேவருலக வாழ்வினைத்தந்தது போன்றதாகும். வனத்தில் தவம் செய்யும் தவசிகளில் ஆசிகளைப் பெறுவதற்கு இதனை விட வேறு சந்தர்ப்பம் எனக்கு எங்கே கிடைக்கப்போகிறது? என் அன்புத்தம்பி அயோத்தியின் அரியணையில் அமர அனைத்து அருகதையும் பெற்றவன், என்னைவிட பன்மடங்கு மக்களின் எண்ணங்களை அறிந்து அதற்கேற்ப ஆட்சி செலுத்துவான். தந்தையே! சற்று என்னைப் பார்த்து எனக்கு விடை கொடுங்கள்," என்று மன்னரின் பாதங்களைத் தொட்டார் இராமர்.

## இராஜகுமாரன்

கைகேயி இராமரின் கைகளைத் தடுத்து "இராமா! உன் தந்தைக்கு போதுமான உடல் நலமில்லை. பட்டாபிஷேகத்துக்காக ஓய்வொழிச்சல் இல்லாமல் பணி புரிந்த களைப்பு வேறு. அவரைத் தொந்தரவு செய்ய வேண்டாம். தாமதமின்றி உன் தந்தையின் கட்டளையை நிறைவேற்றுவாயாக" என்றாள்.

இராமர் தந்தையையும் சிறிய தாயாரையும் வலம்வந்து வணங்கிவிட்டுப் புறப்பட்டார். அவருடைய தேர் நேராக அவருடைய அன்னை கோசலையின் அந்தப்புரம் சென்றது. பூஜை அறையிலே இருந்த தன் அன்னையை சிரம் தாழ்த்தி வணங்கி, நடந்த சம்பவத்தை விபரமாகக் கூறினார். அவரோ மகனை வாஞ்சையுடன் அணைத்து விம்மி விம்மி அழுதார். கைகேயி தனது மகன் பரதனுக்குப் பட்டம் சூட்ட வேண்டுமென்றே சூழ்ச்சி செய்துவிட்டாள் என்பதனை அறிந்து கொண்டார்.

### விரைந்து வந்த இளவல் இலக்குவன்

பட்டாபிஷேகத்துக்காகக் குறிப்பிட்ட சுப முகூர்த்த வேளை கடந்து கொண்டிருப்பதை, கிரியைகள் நடைபெறும் இடத்தில் நின்று மேற்பார்வை செய்து கொண்டிருந்த இலக்குவன், தொலைவிலிருந்த வண்ணமே அண்ணன் இராமரின் இரதம் அவர்தம் அன்னையின் அந்தப்புரம் சென்று நிற்பதைக் கண்டு அங்கு விரைந்தோடி வந்தான். கோசலை தேவியாரின் முகக் குறிப்பிலிருந்தும் அவர் சிந்திய கண்ணீரிலிருந்தும் ஏதோ விபரீதம் நடந்து விட்டதை உணர்ந்தான். இத்தனைக்கும் அண்ணன் இராமனின் முகமோ அன்றலர்ந்த தாமரை மலர்போல் எழிலோடு திகழ்வதையும் கண்ணுற்றான்.

இலக்குவன் முதலில் அண்ணனை வணங்கி எழுந்ததும் இருவரும் ஆரத் தழுவிக்கொண்டனர். பின்னர் பெரிய அன்னையின் தாள் தொட்டு வணங்கிய போது அதுவரை- ஓரளவு அடக்கி வைக்கப்பட்டிருந்த கோசலையின் அழுகை மடைதிறந்த வெள்ளம் போல் பீறிட்டது. அழுகையினூடே கைகேயியின் அந்தப்புரத்தில் நடைபெற்ற சம்பவங்களையும் இலக்குவனிடம் கோசலாதேவி கூறியதுடன் தன் மகனுக்கு அநியாயம் நடந்து விட்டதாகவும் முறையிட்டாள்.

ஏற்கனவே சிவந்த மேனியனான இலக்குவனின் முகம் மேலும் சிவந்தது. தோளில் தொங்கிய வில்லினை வலது கையாலெடுத்து இடது கையில் ஏந்தினான். "ஆணையிடுங்கள் அண்ணா! " அயோத்தியை அரசாளும் உரிமை தங்களுக்கே உரியது. இதனைத் தட்டிப் பறிக்க முயலும் எவரையும் உயிருடன் விட மாட்டேன். மன்னவரின் மூத்த மகனான நீங்கள் இருக்கும்போது பின்னவனான பரதனுக்குப் பட்டம் சூட்ட எமது தந்தைக்கே எந்தவிதமான யோக்கியதையும் கிடையாது. இந்த உரிமையை நிலைநாட்ட சொந்தத் தந்தையுடனும் போர் தொடுக்க இதோ நான் தயாராகிவிட்டேன்!" என்று கொதித்தெழுந்தான்.

இராமரின் முகத்தில் முன்பை விட சாந்தி நிலவியது. "தம்பி இலக்குமணா! என்ன வார்த்தை கூறிவிட்டாய்? எம் தந்தை- தேவர்களும் மெச்சும்படி சிறப்பான ஆட்சி நடத்தி ஈடிலாப் புகழ் படைத்த தசரதச் சக்கரவர்த்தியுடன் அவருடைய சொந்தப் பிள்ளைகளே போர் தொடுத்தார்கள் என்ற அவப்பேர் எத்தனை யுகமானாலும் அழியாதே! தம்பி! அமைதி கொள். எம் தந்தை எமக்குக் கேடு நினைப்பாரா? நம் நன்மைக்காகவே எதையும் செய்வார். நேரம் கடந்துகொண்டு போகிறது. உடனே கானகம் புறப்படவேண்டும் என்று மன்னரின் கட்டளை. தம்பி! பரதனுக்கு உதவியாக சத்துருக்கனும் நீயும் இருந்து அரச பரிபாலனத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள். அம்மா! எனக்கு விடைகொடுங்கள்."

"மகனே! உன்னை விட்டு என்னால் உயிருடன் வாழ முடியாதடா.... நானும் உன்னுடனேயே வருகிறேன் அழைத்துச் செல்!" என்று அழுது புரண்ட கோசலா தேவியை அணைத்த இராமர், "தாயே! தாங்கள் தந்தையுடனிருந்து அவரை நிழல் போல் காக்க வேண்டியவர். இந்த வயதில் காட்டில் சஞ்சாரம் செய்ய தங்களால் முடியாது," என்று கூறி அன்னையை படுக்கையில் கொண்டு போய் அமர்த்தினார்.

"அண்ணா! தங்களை எங்கு சென்றாலும் தொடர்வதே எனது கடமை. தங்களுக்குத் துணையாக நானும் வருகிறேன். இது தங்கள் மீது ஆணை." என்று இலக்குவன் கூற, ஆணையை மீற முடியாதவராக இராமர் சம்மதமளித்தார்.

(தொடர்ந்து வரும்.)

### இராமாயணப் போட்டி : 17

சரியானவிடை:- இரண்டு

1. ஜுஹைறம் முகம்மது லாக்கிர். புதிய மார்க்கட் வீதி, மூதூர்-06.
2. செல்வி.ஏ.ஆர்.பாகிமாபானு. த.பெ.எண் 2715, சிறாஜ் நகர், தம்பலகாமம்.
3. பி.கமலேஸ்வரி மாதம்பை இல 04 பிரிவு, இறக்குவானை.
4. செல்வி.கே.சக்தி. 107/A, டபிள்யு ஏ.சில்வா மாவத்தை, கொழு-06.
5. செல்வி.எம்.வீரையா சாந்தி கில்லார்னி எஸ்டேட், பொகவந்தலாவ.

**போட்டி இல. 19** கேள்வி:-இராமனின் அன்னையின் பெயர் என்ன?

பெப்.17க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி – இல.19, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# ரஜினியுடன் பேட்டி

முரசு நிருபர் காதிலை பூ கந்தசாமி நடிகர் ரஜினிகாந்தை பேட்டிகண்டார். வெள்ளை வேஷ்டி என்ற உடையில், தொடர்ந்து சிகரெட்டுக்களை புகைத்து கொண்டு ரஜினிகாந்த் ஸ்டைலாக பேட்டியளித்தார்.

**நிருபர்: வணக்கம் ரஜினிகாந்த் அவர்களே!**
ரஜினி: வணக்கம்.
**நிருபர்: அரசியல்வாதிபோலவே ஸ்டைலாக வணக்கம் சொல்கிறீர்களே.**
ரஜினி: அன்று நான் வணக்கம் சொன்னபோது கண்டக்டர் போல இருந்தது என்றார்கள். நேற்று நான் வணக்கம் சொன்னபோது சூப்பர் ஸ்டார் என்றார்கள். இன்று நான் வணக்கம் சொல்வது அரசியல்வாதிபோல் இருப்பதாக சொல்கிறீர்கள். நாளை நான் வணக்கம் சொன்னால்... (ஸ்டைலாக உரத்துச் சிரிக்கிறார்)
**நிருபர்: முதல்வர் என்று சொல்வார்களோ?**
ரஜினி: அது அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். (சுட்டுவிரலை சொய்ங் என்று காற்றில் விசிறி மேல்நோக்கிக் காட்டுகிறார்.)



**நிருபர்: உங்களுக்கு தமிழக முதல்வர் பதவி கிடைத்தே தீரும் என்கிறார்களே?**
ரஜினி: கிடைக்க வேண்டியது கிடைக்காமல் போகாது. கிடைக்காமல் இருக்க வேண்டியது கிடைக்காது. ஹௌ இஸ் இட். இது எப்படியிருக்கு?
**நிருபர்: அரசியலுக்கு இப்போது என்னை இழுக்காதீர்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படியானால் எப்போதுதான் வருவீர்கள்? ஒரே சஸ்பென்சாக இருக்கிறதே?**
ரஜினி: நான் எப்போது வருவேன், எப்படி வருவேன் என்று யாருக்கும் தெரியாது. ஆனா வருவேன். கரெக்டான நேரத்தில் வருவேன்.
**நிருபர்: உண்மையாகவா?**
ரஜினி: (சுட்டுவிரலை காற்றில் சொய்ங் என்று உயர்த்துகிறார்) நான் ஒருதடவை சொன்னா அது நூறுதடவை சொன்னமாதிரி.
**நிருபர்: நம்பலாமா?**
ரஜினி: நான் கொடுத்த வாக்கையும் கொடுத்த பொருளையும் திருப்பி வாங்குறதில்லை.
**நிருபர்: வன்முறைகள் கூடாது என்று வன்மையாக கண்டித்திருக்கிறீர்களே,**
ரஜினி: வன்முறை வன்முறைதான். மென்முறை மென்முறைதான். வன்முறை மென்முறையாகாது. மென்முறை வன்முறையாகாது.
**நிருபர்: தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் தன்னம்பிக்கையைப் பாராட்டியிருக்கிறீர்களே.**
ரஜினி: பாரட்டவேண்டியதை பாராட்டாமல் இருக்கக் கூடாது. பாராட்ட முடியாததை பாராட்டக்கூடாது.
**நிருபர்: ஜெயலலிதாவின் உடன்பிறவாச் சகோதரி சசிகலாவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**
ரஜினி: உடன்பிறக்காத சகோதரி உடன்பிறந்த சகோதரியாக முடியாது. உடன்பிறந்த சகோதரி உடன்பிறவாச். சகோதரியாக முடியாது. நான் சொல்லக்கூடாத விஷயங்களை சொல்லக்கூடாது. சொல்லக்கூடிய விஷயங்களை சொல்லாமலும் இருக்க முடியாது.
**நிருபர்: எப்போது சொல்வீர்கள்?**
ரஜினி: நான் எப்போது சொல்லுவேன். எப்படிச் சொல்லுவேன் என்று எவருக்குமே தெரியாது. சரியான நேரத்தில் சரியானபடி சொல்லுவேன்.
**நிருபர்: தமிழக முதல்வருக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**
ரஜினி: நான் என்பாட்டுக்கு என் வழியிலே போய்க்கிட்டிருக்கேன். ஏன் அம்மா என்னை தொந்தரவு பண்ணுறீங்க. அதாலை உங்களுக்குத்தான் நஷ்டம்.
**நிருபர்: உங்களைப் பற்றி நீங்களே சொல்லுங்கள்?**
ரஜினி: பொதுவாக என்மனசு தங்கம். ஒரு போட்டியின்னு வந்துவிட்டா சிங்கம்.
**நிருபர்: போட்டிக்கு தயாராகத்தான் இருக்கிறீர்கள்?**
ரஜினி: இந்தத் தேர்தலில் என்னை விட்டுங்க! பிறகு பார்க்கலாம்.
**நிருபர்: எந்தத் தேர்தலில் வருவீர்கள்?**
ரஜினி: நினைப்பது எல்லாம் நடப்பதில்லை. நடப்பதெல்லாம் நடக்கவேண்டும் என்று நினைத்ததுமில்லை. நாளை என்ன நடக்கும் என்பது அவனுக்குத்தான் தெரியும். அவன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு என்வழியே போய்க்கிட்டே இருப்பேன்.
**நிருபர்: ரஜினி அவர்களே! அரசியல் வாதிக்குள்ள தகுதியில் முக்கியமானதைப் பெற்றுவிட்டீர்கள்.**
ரஜினி: எப்படிச் சொல்கிறீர்கள்?
**நிருபர்: இப்படிப் புதிராகப் பேசும் கலை அரசியல்வாதிகளைத் தவிர வேறு யாருக்கும் வராது.**
ரஜினி: உரத்துச் சிரித்து இரண்டு கைகளையும் உயர்த்தி மேலே காட்டுகிறார்.
இது ஒரு கலப்படமில்லாத கற்பனைப் பேட்டி.



## நீண்ட... முத்தம்!

அமெரிக்க அதிபராக இருந்த றெனால்ட் ரீகனின் மனைவியான நடிகை ஜேன் வைய்மனும்,ரீஜ்ஸ்டுமி என்ற நடிகரும் முத்தமிட்ட காட்சிதான் திரைப்படத்தில் நீண்ட நேரம் காட்சியளித்த முத்தமாகும். இம்முத்தக் காட்சி 1943ல் எடுக்கப்பட்ட 'யூ ஆர் இன் தி ஆர்மி நவ்' என்ற படத்தில் வருகின்றது. இதில் வரும் ஒரே ஒரு முத்தம் மூன்று நிமிடம் ஐந்து விநாடிகள் ஓடுகிறது. முழுப்படம் ஓடும் நேரத்தல் நான்கு சதவிகித நேரத்தில் இக்காட்சி இடம்பெறுகின்றது.

## கொடுக்க மாட்டார்கள். எடுத்துக் கொள்வார்கள்.

### யார் அவர்கள்.. யார் அவர்கள்.

* கையெழுத்துப் போடாத காசோலையில் எத்தனை ஆயிரம் ரூபாய் வேண்டுமானாலும் எழுதலாம். செய்யப்போவதில்லை என்று முடிவு கட்டிவிட்டால் எத்தனை திட்டங்கள் வேண்டுமானாலும் சொல்லலாம்.

* கண்களை மூடிக் கொள்ளுங்கள்; காதுகளை அடைத்துக் கொள்ளுங்கள். இருதயத்தை மூடிவைத்து விடுங்கள். செய்துவிட்டீர்களா? நீங்கள் அரசியல்வாதிகளாகிவிட்டீர்கள்.



* முட்டையைக் கொடுத்து காசு வாங்குகிறவன் வியாபாரி. காசைக் கொடுத்து முட்டை வாங்குகிறவன் சம்சாரி. எதையும் கொடுக்காமல் எல்லாம் வாங்குபவன் அரசியல்வாதி.

* காதலை நீக்கிவிட்டு உலகத்தைப் பார்த்தால் முண்டத்தைப் பார்ப்பதுபோல இருக்கிறது. பணத்தை நீக்கிவிட்டு மனிதர்களைப் பார்த்தால் அழுக்கை நீக்கிவிட்டு ஆடையைப் பார்ப்பதுபோல இருக்கிறது. ஆசையை நீக்கிவிட்டு மனைவியைப் பார்த்தால் கவிதையை அடித்துவிட்டு காகிதத்தைப் பார்ப்பது போல் இருக்கிறது. பொய்யை நீக்கிவிட்டு அரசியல் வாதியைப் பார்த்தால், ஆடையை நீக்கிவிட்டு நிர்வாண பிச்சைக்காரனைப் பார்ப்பது போல் இருக்கிறது.

இதையெல்லாம் புட்டுப் புட்டுச் சொன்னவர் யார் தெரியுமா? கவியரசு கண்ணதாசன். அவரும் அரசியல்வாதியாக இருந்தவர்தானே. அனுபவம் பேசியிருக்கிறது.



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.
www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11




ஷொரோன் ஸ்ரோன்: ஹொலிவூட் படவுலகின் கவர்ச்சித் தாரகை.படத்தைப் பார்த்தாலே பட்டென்று தெரிந்திருக்குமே!


இனி மாட்டேன்



அம்மன் ஜுவல்
AMMAN JEWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


## போதுமான புஷ்டி



படத்தில் இருப்பது கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ள சாதனை நாய். உலகிலேயே பெரிய ரக நாய். 'ஓல்ட் இங்கிலீஸ் மஸ்ரிப்' எனப்படும் ஜாதியைச் சேர்ந்தது. இந்த ஜாதி நாய்கள் 200 இறாத்தல் எடைவரை இருக்கும். ஆனால் படத்தில் உள்ள நாய் தனது ஜாதி நாய்களையெல்லாம் முறியடித்துவிட்டது எடையில்! என்ன எடை தெரியுமா? 1989 நவம்பரில் எடை பார்த்த போது 343 இறாத்தல்! கிட்டத்தட்ட மூன்று சாதரண மனிதர்களின் எடைக்குச்சமன். இதன் உயரம் 3அடி 1அங்குலம். இதற்கு வைத்துள்ள பெயர் சென்ற் பேர்னார்ட். இலண்டனில் இருக்கிறது.

## தேடி வருமா?

1992 இல் பேஸிக் இன்ஸ்டிங்ட் படத்தின் மூலமாக ரசிகர்களை கொக்கி போட்டு இழுத்துவிட்டார். கால் மேல் கால் போட்டபடி இருந்து பொலிஸ் அதிகாரிகளையே கால் அழகால் மயக்கும் பாத்திரம். (ரசிகர்களை மயக்குவதுதான் நோக்கம்) அதனைத் தொடர்ந்து கவர்ச்சிச் சின்னமாக மாறிய ஷொரோன் ஸ்ரோனுக்கு கடந்த ஆண்டு கிடைத்த வெற்றிப்படம் ஸ்பெஸலிஸ்ட். சில்வஸ்ரரோடு ஜோடி. கிட்டத்தட்ட உடல் அழகு முழுவதும் பளிச். பளிச்.

அப்படியாகப்பட்ட ஷொரோன் ஸ்ரோன் சமீபத்தில் ஒரு அதிர்ச்சிக் குண்டை வீசி ரசிகர்களது மனங்களை படுகாயப்படுத்திவிட்டார். "நான் இனிமேல் உடலைக் காட்டி நடிக்கப்போவதில்லை. தரமான பாத்திரங்களில் மட்டுமே தோன்றுவேன்." என்று பேட்டி கொடுத்திருக்கிறார். அவரது உறுதி காற்றில் பறக்கும் வரை ரசிகர்கள் பொறுமை காப்பார்களாக!



இலங்கை அணிவீரர்களது உடலமைப்பை வைத்து 'பெரிய பையன்களின் அணி' என்று 1980 களில் கேலி செய்யப்பட்டது.

இங்கிலாந்து சஞ்சிகையான 'கிரிக்கெட் இன்டர்நாஷனல்' உலகிலேயே மோசமான அணி என்று இலங்கை கிரிக்கெட் அணியைக் குத்திக் காட்டியிருந்தது.

கடந்த ஆண்டில் இலங்கை அணி பெற்ற வெற்றிகள் அந்தக் கேலியை இருந்த இடம் தெரியாமல் செய்திருக்கின்றன.

இலங்கை அணியின் கப்டன் அர்ஜுன் ரணதுங்காவுக்கு 32 வயது. ஒரு நாள் போட்டிகளில் 4000 ஓட்டங்களைக் கடந்த முதலாவது இலங்கையர் அவர்தான்.

இம்முறை உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணியும் அலட்சியம் செய்யமுடியாத தரத்தில் இருக்கிறது.

கடைசிவரை சளைக்காமல் ஆடுவதுதான் அதன் பலம். அதனை இழக்காமல் இருந்தால் இம்முறை ஆச்சரியங்கள் தரலாம்.

## இன்றுவரை முதலிடத்தில்

வாரமலர் தினமுரசு



1987 உலகக் கிண்ணப் போட்டியில் மேற்கிந்திய தீவு அணியும், இலங்கையும் மோதிக்கொண்டிருந்தன. பாகிஸ்தானில் கராச்சி மைதானத்தில் ஆட்டம் நடந்துகொண்டிருந்தது. விவியன் ரிச்சாட்ஸ் வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தார். ரசிகர்களும், ரசிகைகளும் ஆவலோடு பார்த்துக்கொண்டிருக்க 181 ரன்களை குவித்தார் விவியன் ரிச்சாட்ஸ். இதுவரை உலக கிண்ணப் போட்டியில் தனிஒருவர் குவித்த உச்சபட்ச ரன்தொகை அதுதான். அது மட்டுமல்ல, உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் மொத்தமாக 1013 ரன் குவித்து முதலிடத்தில் இருப்பவரும் விவியன் ரிச்சாட்ஸ் தான். தற்போது ஓய்வு பெற்றுவிட்டார். பொழுதுபோக்கு. அழகான கார்கள் மற்றும் அழகான பெண்கள்.

இந்தி நடிகை நீனா குப்தாவோடு விவியன் ரிச்சாட்ஸுக்கு இருந்த தொடர்பு வெகு பிரசித்தம்.

விவியன் ரிச்சாட்ஸுக்கு அடுத்த நிலையில் உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் அதிக ரன் குவித்தவர்கள். கிரஹாம் கூச் (இங்) 916, ஜாவிட் மியான்டாட் (பாகி) 972. டெஸ்மன்ட் ஹெயின்ஸ் (மே.இ) 816, டேவிட்பூன் (அவுஸ்) 815. இவர்கள் அனைவரும் ஓய்வு பெற்றுவிட்டார்கள்.

## எனக்கும் இடம் உண்டு



அலன் போர்டர்: ஓய்வு பெற்ற புலி. 1987 இல் இங்கிலாந்தை தோற்கடித்து அவுஸ்திரேலியா உலகக் கோப்பையைக் கைப்பற்றியது. அணியை வழிநடத்திய கப்டன் அலன் போர்டர்.

கம்பியூட்டர் கணிப்புக்களின் படி அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா அணிகள் இம்முறை முன்னணியில் திகழ்கின்றன. கம்பியூட்டர் சொல்வதை களநிலவரம் பொய்யாக்கலாம்.

## நழுவ விடுவாரா?



இதுவரை நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் பாகிஸ்தான் வீரர்களில் ஒரே போட்டியில் அதிக ரன் குவித்தவர் ரமீஸ்ராஜா. குவித்தது; 119. நியூஸிலாந்துக்கு எதிராக 1992 இல்.

இம்முறையும் ரமீஸ் ராஜா களத்தில் இறங்குகிறார். 1987இல் விவியன் ரிச்சாட்ஸ் தொட்ட 181 ஐ ரமீஸ் ராஜா முறியடித்தால் சாதனையாளராகிவிடுவார். சந்தர்ப்பத்தை எப்படி உபயோகிப்பார் என்று பார்க்கலாம்.

உள்மோதல்களாலும், பாகிஸ்தான் அரசியல் குளறுபடிகளாலும் சற்று சோர்ந்துள்ள பாகிஸ்தான் அணி இம் முறை எப்படி ஆடப்போகிறது என்று தெரியவில்லை. இந்தியாவுக்கு எதிராக ஆடும்போது சோர்வையெல்லாம் மறந்துவிட்டு ஆடுவது பாகிஸ்தானின் வழக்கம். இம் முறையும் நடக்குமா?



படிப்பகம்